# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 01 அதிர்வு 14 செப்ரெம்பர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162














SATISFACTION 100% GUARANTEED

Logesh Pty Ltd

Home Improvement & Cleaning

0449 722 392

Email - Loges.pty.ltd@gmail.com

- Landscaping
- Decking
- Rubbish Removal
- House Cleaning
- Garden Maintenance
- Painting
- House Renovation
- Kitchen Cabinet
- Builders Cleaning
- Timber Flooring
- Carpet Cleaning



Get Your Free Quote Now !


சுடர் ஒளி
Proudly Presents
Event Sponsored by:
SRI MURUGAN ®
SINCE 1969
ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)
ஆட்டம் பாட்டம்
தீபாவளி கொண்டாட்டம் 2018
Deepawali 2018
Saturday, 6th October 2018,. 3:00pm to 8:00pm
Arthur Wren Hall, 16-20 Stuart Avenue, Hampton Park, VIC, 3976
An evening full of interesting and innovative events being performed by both kids and adults.
While the entertainment treat your eyes and ears, your taste buds and tummy will be treated with delightful snacks & sweets and vegetarian dinner, to complete the great experience.
TICKET
Tickets available at
ticketebo.com.au
Adult $22
Kids $12
http://www.ticketebo.com.au/sudar-oli-inc/sudar-oli-2018-deepavali-kondaattam.html
For Event Details Please Contact
Siva 0401 100 870 / Bala 0402 338 259



# இலங்கையர் வைத்த இலக்கு? அலறும் ஆஸ்திரேலியா!

● ராஜி

ஆஸ்திரேலியாவின் ஆளும் லிபரல் கட்சியின் முன்னாள் பிரதமர் மல்கம் ரேன்புல் அவர்களைப் பதவியிலிருந்து தூக்குவதற்கு பீற்றர் டட்டன் உட்பட லிபரல் கட்சியின் பெரும் கும்பலொன்று ரகசியமாகத் திட்டமிட்டு கடந்த மாதம் பகீர் என்று நாட்டு மக்களுக்கே அதிர்ச்சியைக்கொடுத்தது. மல்கம் ரேன்புல்லுக்கு எதிராக இப்படியொரு சதிதான் இருந்தது என்று பார்த்தால் -

மல்கம் ரேன்புல் உட்பட பல அரசியல் தலைவர்களை ஒட்டுமொத்தமாக "போட்டுத்தள்ளுவதற்கு" ஒருவர் திட்டமிட்டுக்கொண்டிருந்திருக்கிறார் என்று கூறி அதிர்ச்சிக் கைது ஒன்று கடந்த மாதம் சிட்னியில் இடம்பெற்றிருக்கிறது.

வழக்கம்போல கைது செய்யப்பட்டிருப்பவர் ஒரு முஸ்லிம். இஸ்லாமிய தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், கைது செய்யப்பட்டவர் அந்த அமைப்பின் அங்கத்தவரா இல்லையா என்பது இப்போதைக்கு உறுதிசெய்யப்படவில்லை என்றே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியானால், இந்தச்செய்தி ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் கைதானவர் இலங்கையர். பெயர் முகமட் நிஸாப்தீன்.

இருபத்து ஐந்து வயதுடைய அழகான இளைஞன். மாணவர் விஸாவில் 2013 இல் ஆஸ்திரேலியா வந்தவர். இலங்கையிலேயே தொழில்நுட்பத்துறையில் திறமையான சித்திகளைப்பெற்று பணிபுரிந்தவர். சிட்னி பல்கலைக்கழகத்திலும் வந்து கல்வி கற்று தொழில்நுட்பத்துறையில் கலக்கிக்கொண்டிருந்தவர். சிட்னி காவல்துறையினருக்கு உதவியளிக்கும் வகையில் செயலி ஒன்றை ஒருவாக்கும் பணிகளில்கூட இணைந்து பணியாற்றியிருக்கிறார்.

இவருடன் சிட்னியில் கல்வி கற்ற மாணவர்கள் முதற்கொண்டு இலங்கையில் சென்.தோமஸ் கல்லூரியில் படித்தவர்கள்வரை யாரைக்கேட்டாலும் "அவனா?. அப்படியா?." என்று வாயைப் பிளக்கிறார்கள். அவ்வளவுக்கு மிகச்சாதுவான - அதேவேளை - நண்பர்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய சாதாரணமானவன் என்றும் பயங்கரவாதச் செயல் என்ற பெரிய காரியங்களோடு எல்லாம் அவனை தொடர்புபடுத்தி பேசுவதை நம்பவே முடியாமல் உள்ளது என்கிறார்கள் அவர்கள்.

இதை இவன் செய்வான் என்று சந்தேகிக்க முடியாதவர்கள்தான் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவார்கள் என்பதும் அப்படிப்பட்டவர்களைத்தான் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட அமைப்புக்கள் தெரிவு செய்கின்றன என்பதும் புதிய விடயங்கள் அல்ல.

அப்படியானால், இந்த இலங்கை இளைஞனின் விடயத்தில் என்னதான் நடந்திருக்கிறது?

கைது நடவடிக்கையை மேற்கொண்ட அடுத்த நாளே ஊடகவியலாளர் மாநாட்டைக்கூட்டிய ஆஸ்திரேலியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான விசேட அணி சார்பான பேச்சாளர் -

தாங்கள் கைதுசெய்துள்ள நபர் சிட்னி பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்துவருபவர் என்றும் அங்கிருந்து தமக்கு கிடைத்த - குறிப்பிட்ட நபரது - நோட் புத்தகத்திலிருந்த தகவல்களின் அடிப்படையிலேயே தாங்கள் கைது நடவடிக்கையை மேற்கொண்டதாக சொன்னார். அந்த நோட் புத்தகத்தில் முகமட் நிஸாப்தீன் தான் மேற்கொள்ளவுள்ள தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து பல விடயங்களைக் குறித்து வைத்திருந்தார் என்றும் அவர் கூறினார்.

பின்னர் வெளியான ஊடக தகவல்களின்படி, மல்கம் ரேன்புல், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் உட்பட சிலருக்கு எதிராக இவர் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார் என்றும் -

சிட்னி ஒப்ரா மண்டபம் மற்றும் முக்கிய ரயில் நிலையங்களில் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்குக் கூடத் திட்டமிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுவும் இந்த தாக்குதல்கள் அனைத்தும் அடுத்த ஒரிரு வாரங்களில் நடத்துவதற்கு திட்டமிடப்படிருந்தது என்று அந்த செய்திகள் மேலும் மேலும் இந்த கைது தொடர்பாக பீதியைக் கிளப்புகின்றன.

இந்த மாதத்துடன் - செப்ரெம்பர் மாதத்துடன் - நிஜாப்தீனின் ஆஸ்திரேலிய விஸா நிறைவடையவிருந்த நிலையில் - இந்தத் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தார் என்ற இந்தத் தகவல் மேலும் பல சந்தேகங்களையும் ஊடக மட்டத்தில் கிளப்பி விட்டிருக்கின்றன.

முகமட் நிஸாப்தீன் கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக சிட்னியிலுள்ள அடுக்குமாடி வீடொன்றில் குடியிருப்பவர் என்றும் அவரது வீட்டில் சென்று சோதனை நடத்தியதில் பல இலத்திரனியல் உபகரணங்களைப் பொலீஸார் கைப்பற்றியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் நிஜாம்டீன், இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபாவின் மருமகன் எனவும், இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் ஜெஹறான் காசிமின் பேரன் எனவும் ஆஸ்திரேலிய ஊடகமான ஏ.பி.சி. தெரிவித்துள்ளது

அதேவேளை, சிட்னிக்கு வந்தபிறகு அடிக்கடி இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவின் இதர பகுதிகளுக்கும் வேறு சில நாடுகளுக்கும்கூட முகமட் நிஸாப்தீன் வந்திருக்கிறார் என்று முதலில் காவல்துறையினர் தெரிவித்திருந்தனர்.

அமெரிக்காவுக்கும் துன்சியா ஆகிய நாடுகளுக்கு இவர் சென்றுவந்துள்ளார் என்று இணையம் ஒன்றை மேற்கோள் காட்டி, இலங்கையிலிருந்து வெளிவரும் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

துன்சியா என்பது இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் மிகத்தீவிரமாக இயங்கிவருகின்றதொரு வட அமெரிக்க நாடு. இஸ்லாமிய தீவிரவாத அமைப்பில் இணைந்து கொண்டவர்களில் அதிகளவிலாளவர்கள் போய் சேர்ந்து கொண்ட நாடுகளில் முக்கியமானது துன்சியா. கிட்டத்தட்ட ஆறாயிரம் பேரளவில் இந்த நாட்டிலிருந்து மாத்திரம் சென்று தீவிரவாத அமைப்பில் இணைந்துகொண்டார்கள் என்று அண்மையில் "ரைம்ஸ்" இதழ் கூறியிருந்தது.

இப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு முகமட் நிஸாப்தீன்




என்பவர் போய் வந்தார் என்று தற்போது கூறுகிறார்கள்.

வெளிநாடுகளுக்கு செல்லும் ஆஸ்திரேலியர்கள் குறித்தும் அவர்கள் எந்தெந்த நாடுகளுக்கு போகிறார்கள் என்பது குறித்தும் ஆஸ்திரேலிய மிகக்கவனமாக அவதானித்து வருவது என்றும் புதிய விடயமல்ல. 25 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டுக்கு எந்த அச்சுறுத்தலும் வந்துவிடக்கூடாது என்பதற்காக கண்ணுக்குள் எண்ணைவிட்டு இரவு பகலாக நோட்டம் விட்டுவருபவர்கள் ஆஸ்திரேலிய புலனாய்வுத்துறையினர்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியப் புலனாய்வுத்துறை அதிபர் கூறிய தகவல் ஒன்றில் சுமார் 200 ஆஸ்திரேலியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பயங்கரவாத அமைப்புக்களுடன் இணைந்திருப்பது தமக்குத் தெரியும் என்றும் அவர்களில் 67 பேரளவில் அவர்கள் பங்குகொண்ட சண்டைகளில் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்றும் மீதிப் பேர் தொடர்ந்தும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் கூறியிருந்தார்.

அதேவேளை, ஆஸ்திரேலியாவுக்குள்ளேயும் சுமார் 400 பேர் வரை தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தமக்கு பலத்த சந்தேகம் உண்டு என்றும் பயங்கரவாதத்தொடர்புடையதாக கருதப்படும் கிட்டத்தட்ட 70 விசாரணைகள் தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆக, பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் ஆஸ்திரேலியா வரவர மிகக்கூர்மையாகத்தனது நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறது. மெல்லிதாக ஒரு மணம் தென்பட்டாலே அதை உடனடியாக முளையிலேயே கிள்ளியெறிவதற்கான உசார் நடவடிக்கைகளில் இறங்கிவிடுகிறது.

தற்போது சிட்னியில் மேற்கொண்டுள்ள இந்த கைது நடவடிக்கையும்கூட இப்படிப்பட்டதொன்றாகவே ஆஸ்திரேலிய காவல்துறையினரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், கைது செய்யப்பட்டுள்ள முகமட் நிஸாப்தீன் சிட்னியிலோ அல்லது ஆஸ்திரேலியாவின் ஏனைய பகுதிகளிலோ எவருடனும் கூட்டுச்சேர்ந்து தனது பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்றும் தனித்தே இயங்கி வந்திருக்கிறார் என்றும் காவல்துறையினர் கூறுகிறார்கள்.

நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்புக்கும் பொறுப்புடைய உள்துறை அமைச்சின் ஏகபோக உரிமையாளர் பீற்றர் டட்டன் அவர்களது பதவி பறிபோகப்போகிறது என்ற ஊகங்கள் கன்பராவில் நிலவிய பின்னர் -

லேபர் கட்சி ஆட்சிக்கு வரலாம் என்று எதிர்பார்ப்பு நாடுமுழுவதும் நிலவி வருகின்ற சூழ்நிலையில் -

இரண்டு விடயங்கள் ஆஸ்திரேலிய பாதுகாப்பு விடயத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அவை இரண்டுமே நாட்டின் சகல பகுதிகளிலும் செய்தி ரீதியான அதிர்வை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஒன்று, மேற்படி முகமட் நிஸாப்தீன் கைது சம்பவம்.

மற்றையது, வியட்நாமிய மீனவர்கள் தொகுதியொன்று குவீன்ஸ்லாந்தின் முதலைத்தீவு கரையோரமாக வந்து தரைதட்டியது. இவர்கள் அனைவரும் தஞ்சக்கோரிக்கையாளர்கள்தான் என்று அமைச்சர் பீற்றர் டட்டன் அடித்துக் கூறினார். சகலரையும் தேடிப்பிடித்து அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவிட்டது.

அடுத்தடுத்த நிகழ்வுகள் இனி என்ன அதிர்வுகளை தரப்போகின்றன என்று பார்ப்போம்!


Money Transfer Agent
Indian & Sri Lankan Spices, Groceries & Convenience
SPICE
MINI MART
All kind of Spices, Fresh Vegetables, Sweets & Snacks
Trading Hours:
9 am to 10 pm
6 Aurelia Street
Toongabbie NSW 2146
(Next to Commonwealth Bank)
Phone : 02 9688 4447
Fax : 02 9636 3920
The fastest money transfer service to many countries
Best rates to India & Srilanka
10 mins
WESTERN UNION WU
moving money for better
MoneyGram.
money transfer
PFG SMART CREDIT
Global Money Transfers
Ria
We also do Business to Business money transfer

எதிரொலி
மெல்பேர்ண் ETHIROLI
குரல் 02 அதிர்வு 15 செப்ரெம்பர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

## நீங்கள் யார்?

தஞ்சம் கோரி ஆஸ்திரேலியாவுக்கு வந்து நவுறு தீவில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் குயீன்ஸ்லாந்துக்குக் கொண்டு வந்து விடுவிக்கப்பட்ட வசந்தகுமார் என்பவர் உயிரிழந்த சம்பவம் கடந்தமாதம் ஒட்டுமொத்த புலம்பெயர் சமூகத் துக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அவரது பிள்ளைகள் தாயகத்திலிருந்து விடுத்த வட்ஸ் – அப் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியிருந்தது.

வசந்தகுமாரின் உடலை எப்படியாவது குடும்பத்தினரிடம் சேர்க்கவேண்டும் என்று அவரது நண்பர்கள் பெரும்போராட்டத்துடன் முயற்சி செய்தார்கள். அவர்களுடன் சேர்ந்து ஆஸ்திரேலியாவில் நீண்ட காலமாக வதியும் அகதிகள் நல செயற்பாட்டாளர்களும் நிதி சேகரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிறார்கள். மற்றையவர்களும் அதற்கு உதவி செய்யவேண்டும் என்று கோரிகை விடுக்கிறார்கள்.

நல்ல விடயம்.

ஆனால், இது உண்மையில் யாருடைய பொறுப்பு? தஞ்சம்கோரி இந்த நாட்டுக்கு வந்த அகதி ஒருவர், அகதி என்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த நாட்டினால் பொறுப்பேற்கப்படுகிறார். ஆனால், அவருக்குரிய வதிவிட உரிமை முற்றாக வழங்கப்படும்வரை பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அவை எல்லாவற்றையும் மிகத்திமிரோடு இந்த நாட்டின் குடிவரவு திணைக்களம் செய்து பெருமை கொள்கிறது.

ஆனால், இவ்வாறு அகதியாக வருபவர் உயிரிழந்தவுடன் அவரது உடலத்தை இங்கே அடக்கம் செய்வதை மாத்திரம் தெரிவாகக்கொடுப்பது ஏன்?

இந்த நாட்டுக்கு பெருந்தொகையில் படகில் வருபவர்கள் நடுக்கடலில் மாண்டுவிடுகிறார்கள் என்பதை படகுகளை தடுப்பதற்கு மிகமுக்கிய காரணமாக – மனிதாபிமான விடயமாக – முன்னிறுத்தும் ஆஸ்திரேலியா, அவ்வாறு வந்த ஒருவரின் இறந்த உடலை ஊருக்கு அனுப்பிவைப்பதில் அதே மனிதாபிமானத்தை காண்பிக்கத் தவறுவது ஏன்?

விஸா கொடுக்காமல் தடுப்புமுகாம்களில் வைத்திருக்கும் அகதி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கு ஒரு இலட்சம் டொலர்களுக்கும் மேலாக செலவு செய்துகொண்டிருக்கும் குடிவரவுத்திணைக்களம் –

அவ்வாறான ஒரு அகதி உயிரிழந்தவுடன் அந்த உடலத்துக்கு எந்த மதிப்பையும் வழங்காமல் புதைத்து விட்டுப்போவதுதான் முறையா?

அகதிகள் உயிரிழந்தவுடன் அவர்களுக்காக நிதி சேகரித்து உடலத்தை ஊருக்கு அனுப்புவதற்கு சமூகத்தின் முன்னால் வந்து நிற்கும் அகதிகள் நல செயற்பாட்டாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் –

இந்த விடயத்தை குடிவரவுத்திணைக்களத்துடன் பேசியோ அல்லது அதுசம்பந்தப்பட்டவர்களுடன் பேசியோ நடவடிக்கை எடுத்து –

அகதியின் உடலத்தை மிகக்கேவலமாக பார்வைக்குட்படுத்தும் அரசாங்கத்திடம் பேசவேண்டும்.

தொலைக்காட்சிகளுக்கும் வானொலிகளுக்கும் செவ்வி கொடுப்பதற்கு "செயற்பாட்டாளர்கள்" – Activists – என்று தங்களை அழைக்கத் தேவையில்லை. அதனை மொழி தெரிந்த எவரும் செய்துவிட்டுப்போகலாம்.

சமூகத்தின் மீது பெருந்துயராகவும் – சுமையாகவும் – வந்து விழுகின்ற இந்தமாதிரியான விடயங்களைப் பொறுப்போடு முன்னெடுப்பவர்கள்தான் "செயற்பாட்டாளர்கள்" "செயற்றிறன்மிக்கவர்கள்"


# தன்னைக் கவர்ந்து செல்ல வந்த காலனுக்கும் தமிழின் சிறப்பைத்தான் சொல்லியிருப்பார்!

**சான்றோன் சத்தியநாதன் அவர்கள் காலமாகி இம்மாதம் 15 ஆம் திகதியுடன் ஒரு வருடம் நிறைவடைந்துவிட்டது. இந்தத்தேசத்தில் தமிழ் மக்கள் கண்ட பெருஞ்சோகங்களில் ஒன்று அவரது இழப்பாகும். இக்கட்டுரை முதலாண்டு நினைவாக இங்கு பிரசுரமாகிறது.**

**மருத்துவர் சத்தியநாதன்.**

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்துக்காகவும் தமிழ் மொழிக்காகவும் தனது வாழ்வை முற்று முழுதாக அர்ப்பணித்த பெருமகன். தாயகத்தில் தனது மருத்துவப் பெரும்பணி ஊடாக சேவையாற்றிவிட்டு - லண்டன் சென்று பின்னர் அங்கிருந்து ஆஸ்திரேலியா வந்தவர். ஆஸ்திரேலிய தமிழ்மக்களின் சமூக முன்னேற்றங்களுக்காகப் பல்வேறு வகையிலும் பெரும்பாடு பட்டவர். அதற்காகத் தனது பெரும் பகுதி சொத்துக்களை வாரி வழங்கியவர்.

பல்லின மக்கள் வாழும் நாடொன்றில் குறிப்பிட்ட இனமொன்று பல துறைகளிலும் ஈட்டக்கூடிய கூட்டு வெற்றிதான் அந்த இன அடையாளத்தின் இருப்பை பேணக்கூடிய பெருவெற்றியாக அமையும் என்பதைத் திடமாக நம்பியவர். "மொழிதான் எமது பெரும்பலம்" - என்ற ஓர்மத்துடன் ஓயாமல் செயற்பட்டவர். தமிழுக்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் குருட்டுத்தனமானவையாக இல்லாமல் குறிக்கோளுடன் காணப்பட்டன.




பதினைந்து வருடங்களுக்கு முன்னரே ஆஸ்திரேலியாவுக்கு தமிழ் கீபோர்ட்டை தருவித்து இணையத்தில் தமிழை எவ்வாறு கொண்டு செல்வது என்றும் எதிர்காலம் இணையத்தின் ஊடாகவே எல்லாவற்றையும் இயங்க வைக்கப்போகின்றது என்பதையும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக பெரும்பாடுபட்டவர்.

மெல்பேர்ணில் தமிழ் பாடசாலைகளின் உருவாக்கம், தமிழர் தகவல் மைய உருவாக்கம், 'தமிழ் உலகம்' என்ற பத்திரிகை உருவாக்கம் என்று தமிழர்களின் முன்னேற்றத்தைத் தவிர வேறு எதனையும் சிந்திக்காத - சிந்திக்கத் தெரியாதவராக செயற்பட்டவர்.

தமிழகத்திலிருந்து பல தமிழறிஞர்களை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துவந்து அவர்களின் ஊடாக புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு தமிழ் மீதான பற்றைத் தொடர்ந்து பேணியவர். பிரதியுபகாரமாக தமிழகத்தில் உள்ள தமிழறிஞர்களுக்குப் பல இலட்சக்கணக்கான உதவிகளை வாரி வழங்கியவர். இந்த உதவிகளின் உச்சத்துக்கு ஓர் உதாரணம். தமிழகத்தில் உள்ள தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவர் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கும் வீடு மருத்துவர் சத்தியநாதனுடையது.

திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் அளவற்ற பாசம் கொண்டிருந்தார். இன்றும்கூட மெல்பேர்ணில் பெரும்பாலனவர்களினது வீட்டிலுள்ள வெள்ளை நிற திருவள்ளுவர் சிலை மருத்துவர் சத்தியநாதன் வழங்கியதாகத்தானிருக்கும். தன்னிடம் மருத்துவ உதவிக்காக வருகின்ற தமிழர்கள் அனைவரிடமும் மருத்துவத்துக்கு அப்பால் அவர்களது தமிழ் வாழ்வு பற்றி அதிகம் பேசுவார். வீட்டில் தமிழ் பேசவேண்டும். பிள்ளைகள் தமிழ் பாடசாலைகளுக்கு தவறாது போகவேண்டும். பெற்றோர்கள் அதற்கு கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று ஏகப்பட்ட போதனைகள். தமிழ் பேசத்தெரியாத தங்கள் பிள்ளைகளுடன் பொது இடங்களில் இவரைக் காணும் பெற்றோர்கள் தெறித்து ஓடுவார்கள். பிள்ளைகளுக்கு வருத்தம் என்று இவரது கிளினிக்குக்கு அழைத்து வந்தால்கூட தனது கணனி திரையிலிருக்கும் திருவள்ளுவர் படத்தை காண்பித்து அவரது பெயரை சொன்னால்தான் அடுத்த பேச்சு.

கிட்டத்தட்ட தமிழ் மீது தீராத வெறிகொண்டவராக - உச்ச போதைகொண்டவராக வாழ்ந்தார். தமிழ் மொழியின் சிறப்பும் அதன் இருப்பும் புலம்பெயர் வாழ்வென்ற பயணத்தினால் அழிந்துவிடக்கூடாது என்பதில் உறுதியோடு செயற்பட்டார்.

மத நம்பிக்கைகளை முற்றாக வெறுத்தார். கடவுள் நம்பிக்கை என்பது வெறும் பம்மாத்து. அது ஒரு வியாபாரம்தானொழிய அதற்கு அப்பால் எதுவுமே இல்லை என்று வழிபாடுகளையெல்லாம் கடுமையாக நிராகரித்தார். கடவுள் நம்பிக்கை பேசிக்கொண்டு அவரிடம் பணம் கேட்டு சென்று நன்றாக வாங்கிக்கட்டிக்கொண்டவர்கள் பலர்.

இப்படியாக நல்லதையே செய்துகொண்டிருந்த மருத்துவரை 2005 ஆம் ஆண்டு மறதி நோய் தாக்கத்தொடங்கியது. இதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்த மருத்துவர்கள், இவர் தொடர்ந்தும் மருத்துவப் பணிபுரிய முடியாது என்பதை அவரது மனைவியிடம் கூற, அவரது மனைவியும் ஒரு மருத்துவர் என்ற காரணத்தினால் இந்த நோயின் பாரதூரத்தைப் புரிந்துகொண்டார். இந்த நோயின் தாக்கம் காலம் செல்லச் செல்ல விசித்திரமாக விஸ்வரூபம் எடுக்கத்தொடங்கியது. அவரை முற்று முழுதாகவே இன்னொரு உலகத்தில் சஞ்சரிப்பவராக மாற்றியது. ஆட்களை அடையாளம் காணமுடியாத அளவுக்கு கொண்டுசென்றது.

அவர் தங்க வைக்கப்பட்டிருந்த வயோதிபர்கள் காப்பகத்தில் ஆரம்பத்தில் போய் பார்க்கும்போது எதுவுமே தெரியாதவராக இருந்தபோதும் தன்னை யாரோ வந்து பார்த்துப்போகிறார்கள் என்றளவுக்கு அவருக்கு ஏதோ ஒரு உணர்விருந்தது. விடைபெற்று வருகின்றபோது லிப்ட் வரைக்கும் கலைத்துக் கொண்டு வருவார். தாதிகள் அவரை வந்து அழைத்து போவார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் போய் பார்க்கும்போது நிலமை இன்னமும் மோசமாயிருந்தது.

அவர் வாழ்ந்த வாழ்வையும் கடைசியில் அவரை நோய் தின்றுகொண்டிருக்கும் காட்சியையும் பார்க்கும்போது இதயச்சோனைகள் எல்லாம் பற்றியெரிந்தது.

மாண்ட வாழ்வின் விதியென்பது தர்மத்தின் அச்சாணியில் சுழரவில்லை என்பதற்கு மருத்துவர் சத்தியநாதனின் நோய் பீடித்த வாழ்வு ஒரு உதாரணம் என்று மனது மீண்டும் மீண்டும் திட்டிக்கொண்டது.

அவர் நினைத்தது, செய்தது, செய்ய நினைத்தது சகலதும் நல்லவைதான். அதைத்தவிர வேறொன்றுமே இல்லை. தனக்கும் மனைவிக்கும் பிள்ளைகள் இல்லை என்ற குறையே இல்லாத அளவுக்கு எத்தனையோ பிள்ளைகளை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துக் கல்வி கற்பித்தார். எத்தனையோ எதிர்கால சிற்பிகளைத் தமிழ் சமூகத்துக்கு உருவாக்கினார்.

ஈழவிடுதலைப்போராட்டத்தில் மாமனிதர் ஜெயக்குமார், இலியேஸர், சோமா போன்றவர்கள் வேறொரு பரிமாணத்தில் பங்காற்றினார்கள் என்றால் மருத்துவர் சத்தியநாதன் இன்னொரு தளத்தில் சமூகத்துக்காக தன்னை அர்ப்பணித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் மருத்துவர் சத்தியநாதனை வயோதிபர் காப்பகத்திலிருந்து கட்டிலோடு சுமந்து வந்து ஈழத்தமிழ் சங்கம் கௌரவித்தது. அந்த முகம்தான் மெல்பேர்ண் தமிழ் மக்களில் பலருக்கு இன்னமும் நினைவிருக்கவும்கூடும்.

அன்று அவரைக் கண்டபோது இன்றோ நாளையோ என்று அவரது இதயம் விசும்பிக்கொண்டிருந்தது. கண்ணீரோடு விடைபெற்றுவந்தோம்.

அடுத்தநாள் இரவு - தியாக செம்மல் திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்த நாளன்று - செம்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி - தனது வாழ்நாளை தமிழுக்கும் தமிழர்களுக்கும் தியாகம் செய்த ஒப்பற்ற செம்மல் மருத்துவர் சத்தியநாதன் பிரிந்துவிட்டார்.

நிச்சயம் தன்னைக் கவர்ந்து செல்ல வந்த காலனிடமும் தமிழைப்பற்றிதான் பேசிக்கொண்டு போயிருப்பார்.

**- தெய்வீகன்**

# பாலியல் பழிவாங்கல்களுக்கு ஆஸ்திரேலியாவில் புதிய சட்டம்



இணையங்கள் - சமூகவலைத்தளங்கள் ஆகியவற்றில் பாலியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கத்தோடு அலைபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் கடந்த மாதம் மிகமுக்கியமான சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது.

இதன் பிரகாரம், தங்களுக்கு பிடிக்காதவர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு அவர்களது அந்தரங்கப் படங்கள் மற்றும் காணொலிகளை பொதுவெளியில் வெளியிடுபவர்களை சிறையில் அடைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பல நூற்றுக்கணக்கான சமூக வலைத்தளங்கள் நாளுக்கு நாள் பல்கி, பெருகிய வண்ணமுள்ள இணைய வெளியில், 18 வயதுக்கு குறைந்தவர்கள் உட்பட எல்லோரும் எதையும் எழுதலாம் - பகிரலாம் - பார்க்கலாம் என்ற வசதி வந்துவிட்டது. இந்த வசதியை ஆரோக்கியமாகப் பயன்படுத்தலாம் என்கின்ற நிலையை தாண்டி, வன்மங்களை தீர்த்துக்கொள்வதற்கான போர் ஊடகமாக பலர் பயன்படுத்தி வருகின்றமை ஒன்றும் புதிய விடயமல்ல.

காழ்ப்புணர்வோடு பதிவுகள் எழுதுவது, கரிபூசும் நோக்கத்தோடு போலி இணையத்தளங்கள் மற்றும் முகநூல் கணக்குகளுக்குள் ஒளிந்திருந்து சேற்றை வாரியிறைப்பது என்பவை எல்லாம் தமிழ் சமூகத்தின் மத்தியில் மலிந்துபோயிருக்கும் பாரம்பரிய இணையக் களியாட்டங்கள். இதில் உள்ள அற்ப உண்மை என்னவென்றால், இவற்றை செய்பவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சைக்கோத்தனமாக இன்பமடைகிறார்களோ படிப்பவர்களும் அவ்வளவுக்கு அவ்வளவு பரவசம் கொண்டு அதனை பகிர்ந்துகொண்டு அலைகிறார்கள். ஒவ்வொரு நாளும் யாரையாவது கழுவி ஊற்றி வருகின்ற 'வட்ஸ் - அப்' தகவல்கள், முகநூல் பதிவுகள் என்று எதைப்பார்த்தாலும் இந்த வியாதியே வியாபித்துக் கிடக்கிறது.

இந்தக் குற்றம் ஒரு படி மேலே போய், தங்களுக்கு பிடிக்காதவர்களின் அந்தரங்க படங்களை இணையத்திலும் சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்து அவர்களைப் பழிவாங்குவது என்ற நிலைக்கு இன்று சென்றிருக்கிறது. இது குறிப்பாக இளையவர்களிடம்தான் அதிகமாகியிருக்கிறது. நண்பர்களாக இருக்கும்போது எடுத்துக் கொண்ட நெருக்கமான படங்கள், நிர்வாணப்படங்கள், காணொலிகள் ஆகியவற்றை பொதுவெளியில் பகிர்வது. அல்லது வேறு நபர்களிடமிருந்து தங்களுக்கு எதிரானவர்களின் அந்தரங்கப் படங்களை பெற்று அவற்றை பொதுவெளியில் பகிர்வது என்று பல வழிகளில் பாலியல் ரீதியான இணையக்குற்றங்கள் மலிந்துபோயிருக்கின்றன.

இவற்றுக்கு முடிவு காணும் பொருட்டு ஆஸ்திரேலிய அரசு கடும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமொன்றை இயற்றி கடந்த பெப்ரவரி மாதம் நாடாளுமன்றுக்கு எடுத்து வந்தது. ஆனால், அந்த சட்டத்தில் சில மாற்றங்கள் செய்து தண்டனை முறைகளில் மேலதிக விவரங்களை சேர்த்துவிட்டு தற்போது மீண்டும் அறிமுகம் செய்திருக்கிறது.

இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரம், பொதுவெளியில் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியின்றி அந்தரங்க படங்களை பகிர்ந்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றம் செய்தவருக்கு 105,000 டொலர் அபராதமும் -

காணொலிகளை பகிர்ந்து பாலியல் ரீதியான தொந்தரவுகளை கொடுப்பவர்கள் மற்றும் பழிவாங்கும் நோக்கத்தோடு செயற்படுபவர்களுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனையும் -

இந்த குற்றத்தை மீண்டும் மீண்டும் செய்பவர்களுக்கு ஏழு வருட சிறைத்தண்டனையும் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் பொதுவெளியில் பாலியல் படங்களை பகிர்ந்தது தொடர்பாக 119 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து புதிய சட்டத்தை காலதாமதம் இன்றி கொண்டு வந்திருப்பதாக தொடர்பாடல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நடைமுறையிலுள்ள சட்டங்களைப் போலவே இணையத்திலும் சட்டங்களைக் கொண்டுவருதல் தற்காலத்தில் முக்கியமாகியுள்ளது. அனுமதியின்றி மற்றையவர்களின் அந்தரங்க வாழ்வில் நுழைந்து தொந்தரவு செய்கிறவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படுகிறதோ அதைத்தான் இணையத்திலும் அமுலுக்கு கொண்டுவந்திருக்கிறோம் என்று தொடர்பாடல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வின்படி, ஐந்து ஆஸ்திரேலியர்களில் ஒருவர் என்ற வீதத்தில் அனுமதியின்றி அந்தரங்கப் படங்கள் இணையத்தில் வெளியிடப்படுகின்ற பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர். 79 சத வீதமான சந்தர்ப்பங்களில் பெண்களே இந்தப் பிரச்சினையினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மூன்று முறைப்பாடுகளில் ஒரு முறைப்பாடு நிச்சயமாக 18 வயதுக்கு குறைந்தவர்களிடமிருந்தே கிடைக்கப்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில் வாழிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபமுள்ள...

PERPETUA MONEY TRANSFER
WorldWide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK
PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE
SEYLAN BANK PLC
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank
NSB
National Savings Bank
cash Xpress
easier - faster - safer

Send Money to any Bank in Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



# மெல்பேர்ன் இந்திய திரைத்திருவிழா 2018



மெல்பேர்னின் இந்திய திரைத்திரு விழா (Melbourne Indian Film Festival) இம்முறையும் மிகக்கோலாகலமாகநடைபெற்றது. இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த பல திரை நட்சத்திரங்கள், விருது நாயகர்கள், சாதனை மனிதர்கள் இவர்கள் எல்லோரையும்விட பல்லாயிரக்கணக்காக ரசிகர்கள் என்று களைகட்டி முடிந்திருக்கிறது வண்ணமயமான இந்த திருவிழா.

ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெற்ற இந்த நிகழ்வு தொடர்பாக தெரிந்திராதவர்களுக்கு ஒரு சிறு குறிப்போடு பதிவுக்குள் செல்லலாம்.

இந்தியதிரைப்படங்களின்திருவிழாவாகமெல்பேர்ணில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வு கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் விக்டோரிய அரச ஆதரவோடு நடைபெற்றுவருகிறது. இந்திய - ஆஸ்திரேலிய நட்புறவினை வலுப்படுத்தும் வகையில் விபரல் அரசு 2006 ஆம் ஆண்டில் கொண்டு வந்த இந்தயோசனைக்குசெயல்வடிவம்கொடுத்து, விக்டோரிய அரசின் அனுசரணையுடன் 2010 இல் நிதி ஒதுக்கப்பட்டு முதலாவது நிகழ்வு 2012 மார்ச் மாதம் நடைபெற்றது. முதல் கட்டமாக மூன்று வருடங்களுக்கு மாத்திரம் அரச நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்ற இந்த நிகழ்வு அதன் பின்னர், 2014 இல் மேலும் இரண்டு வருடங்களுக்கும் 2016 இல் இன்னொரு தடவையும் நீடிக்கப்பட்டு இந்தவருடமும் விக்டோரிய அரச ஆதரவோடு மிகக்கோலாகலமாக இந்த திருவிழா நடைபெற்று முடிந்திருக்கிறது.

கடந்த ஆறு வருடங்களாக இந்த நிகழ்வினை விக்டோரிய அரசாங்கத்தோடு இணைந்து Mind Blowing Films - Event Management நிறுவனமும் அதன் இயக்குனர் Mitu Bhowmick Lange அவர்களும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட நிகழ்வுக்கு முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் உட்பட பல இந்திய திரை நட்சத்திரங்கள் வருகை தந்திருந்தினர். நிகழ்வின் சிறப்பு நட்சத்திரமாக வந்திருந்த நடிகை ராணி முகர்ஜி, ஓக்ஸ்ட் மாதம் 11 ஆம் திகதி - இந்திய சுதந்திர தினத்தன்று பெடரேஷன் சதுக்கத்தில் இந்தியதேசியக்கொடியைஏற்றிவைத்துசிறப்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் சுமார் 60 ஆயிரம் ரசிகர்கள் கலந்துகொண்டு மெல்பேர்ண் நகர மையத்தை ஸ்தம்பித்துவிட்டார்கள். விக்டோரிய முதல்வர் அன்ட்ஷுரூஸ் உட்பட பல அரசியல் புள்ளிகளும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இம்முறை நிகழ்வில் Slumdog Millionaire திரைப்பட நட்சத்திரம் Freida Pinto மராட்டி சினிமா நட்சத்திரம் Mrunal Thakur மற்றும் Namrata Singh Gujral, Richa Chadha, Simi Garewal, Vicky Kaushal உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இவர்கள் எல்லோரையும்விட கண்ணுக்குள் பட்டாம்பூச்சியாக பறந்துகொண்டிருந்தவர் கீர்த்தி சுரேஷ்!

ஆம், நடிகை சாவித்திரியின் வாழ்க்கையை திரைக்காவியமாக்கிய "மகாநதி" படத்தில் நடித்த கீர்த்தி சுரேஷையும் இந்த நிகழ்வில் அழைத்து கௌரவித்திருந்தார்கள் திரைத்திருவிழா குழுவினர். நடிகர் தனுஷ் நடித்திருந்த THE EXTRAORDINARY JOURNEY OF THE FAKIR பிரஞ்சு திரைப்படத்துக்காக அவருக்கு விருது கிடைத்திருந்து. அவரும் இந்த நிகழ்வுக்கு வருவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கலைஞர் கருணாநிதியின் மறைவினையொட்டி அவரது வருகை இறுதி நேரத்தில் ரத்தாகியிருந்தது என்று அறியவந்தது.

திரை நட்சத்திரங்கள் அனைவரும் இந்தியாவிலிருந்து வருகை தந்து முதலில் கூட்டு ஊடகவியலாளர்மாநாட்டில்கலந்துகொண்டிருந்தனர். அதில் ஆஸ்திரேலிய ஊடகங்கள் உட்பட பல்வேறு செய்தியாளர்களும் திரைநட்சத்திரங்களை செவ்வி கண்டனர். அதன் பின்னர், தனித்தனியாக ஒவ்வொரு திரைநட்சத்திரமும் கேள்வி – பதில் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்வுகள் மெல்பேர்ணின் பல பாகங்களிலும் நடைபெற்றன.



ஓகஸ்ட் 12 ஆம் திகதி, Westpac வங்கி அனுசரணையுடன் பிரமாண்டமான விருது வழங்கும் நிகழ்வு The Palais அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள். இந்திய உணவுகள், இந்திய கலாசார நடனங்கள் என்று பல்வேறு களியாட்ட நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த விழாவில் தங்களது அபிமான திரை நட்சத்திரங்களை காண்பதற்கு ரசிகர்கள் அலை மோதினார்கள்.

நிகழ்வின் மிகமுக்கிய அம்சமாக, இம்முறை மெல்பேர்ண் பூராகவும் உள்ள திரையரங்குகளில் 22 மொழிகளை சேர்ந்த 69 இந்திய திரைப்படங்கள் திரையிடப்பட்டன. திரையிடப்பட்ட படங்களில் To-Let என்ற செழியனின் விருது பெற்ற தமிழ்த் திரைப்படம் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி Chandstone திரையரங்கில் காண்பிக்கப்பட்டது. தனுஷ் நடித்திருந்த THE EXTRAORDINARY JOURNEY OF THE FAKIR பிரஞ்சு திரைப்படம் Melbourne Central Hoyts திரையரங்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

புலம்பெயர்ந்த தென்னாசிய மக்களின் பேரபிமானத்துக்குரிய பெருந்திருவிழாவாக நடைபெற்று முடிந்த இந்த இரு வார நிகழ்வினை நேர்த்தியாக நடத்தி முடித்த Mind Blowing Films - Event Management அமைப்பின் இயக்குனர் Mitu Bhowmick Lange நிகழ்வு குறித்து கூறுகையில் அடுத்த வருடமும் இத்திரைத்திருவிழாவை அற்புதமாக நடத்துவதற்கு தாங்களாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்றார்.















**Cancer Council**

## நீங்கள் 50-74 வயதிற்கு இடைப்பட்டவராயின் இப் பரிசோதனை உபகரணத்தை தபால் மூலம் பெற்றவுடன் பரிசோதனையை மேற்கொள்ளவும்.

கூடுதலான குடல் புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், அவற்றை இலகுவில் குணப்படுத்தலாம். இந்த இலவசமான வீட்டிலேயே செய்யக்கூடிய பரிசோதனை **உங்களது உயிரை காப்பாற்றக்கூடும்.**

மேலதிக தகவலுக்கு உங்களது மருத்துவருடன் பேசவும். அல்லது, **13 14 50** என்ற எண்ணை அழைத்து உங்களது மொழி என்ன என்பதையும் கூறி, Cancer Council Victoria-வுடன் பேசவேண்டுமென கேளுங்கள்.




# SAHA SIDDHA

**HERBAL TREAMENT AND YOGA THERAPY**

**TREATMENTS FOR ALL AILMENTS ARE DONE THROUGH TRIO THERAPHY**
**(Herbal Treatment, Yoga & Diet plan)**

**A healthcare professional with a long track record of successfully diagnosing and treating patients using accurate Siddha (HERBAL) medicines along with therapeutic yoga techniques. A Gold Medallist in Doctor of Siddha Medicine**



- Abnormal Menstruation
- Arthritis
- Back and neck pain
- Diabetes Mellitus
- Eczema
- Epilepsy
- IBS
- Hemiplegia
- High Cholesterol
- Hypertension
- Impotence & Infertility

**DR SELVI MANI B.S.M.S, MD, Y.T.O.T**
**SIDDHA (HERBAL), YOGA PHYSICIAN**
**0412618953**
**74 CARLTON ROAD**
**DANDENONG NORTH, VICTORIA - 3175**
www.siddhaherbsaustralia.com.au

- Urinary Tract Infection
- Jaundice
- Mental disease & disorder
- Loss of Memory
- Obesity
- Peptic ulcer
- Prostate Problem
- Sleep Disorder
- Thyroid Problems
- Tonsillitis
- Wart etc...

# மொரிஸன் அமைத்துள்ள புதிய மந்திரிசபை


Prime Minister
**Scott Morrison**


Treasurer
**Josh Frydenberg**


Minister for Cities, Urban Infrastructure and Population
**Alan Tudge**


Deputy Prime Minister and Minister for Infrastructure, Transport and Regional Development
**Michael McCormack**


Minister for Finance and the Public Service
**Mathias Cormann**


Minister for Defence
**Christoper Pyne**



Minister for States
**Alex Hawke**


Minister for Foreign Affairs
**Marise Payne**


Minister for Trade, Tourism and Investment
**Simon Birmingham**


Attorney-General
**Christian Porter**


Minister for Home Affairs
**Peter Dutton**


Minister for Communications and the Arts
**Mitch Fifield**


Minister for Jobs, Industrial Relations and Women
**Kelly O'Dwyer**


Minister for Small and Family Business, Skills and Vocational Education
**Michaelia Cash**


Minister for Senior Australians and aged care
**Ken Wyatt**


Minister for Industry, Science and Technology
**Karen Andrews**


Minister for Education
**Dan Tehan**


Minister for Health
**Greg Hunt**



Minister for Families and Social Services
**Paul Fletcher**


Minister for Agriculture and Water Resources
**David Littleproud**


Minister for the Environment
**Melissa Price**


Minister for Energy
**Angus Taylor**


Minister for Human services and digital transformation
**Michael Keenan**


Minister for Indigenous Affairs
**Nigel Scullion**

பாரதி பள்ளி
BHARATHI ACADEMY
முதல் தரமான தமிழ் மொழிப் பாடசாலை.
24 years of service excellence







# OPEN DAY

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## East Burwood Campus

**Sunday 16th September 2018**
**Time 10.30 am to 12.30 pm.**
**Forest Hill College,**
**178 Mahoneys Rd, Forest Hill**

***A special information session will be held at 11.00 am.***

## Clayton Campus

**Sunday 16th September 2018**
**Time 2.00 pm to 4.00 pm.**
**Westall College,**
**88 Rosebank Ave, Clayton South**

***A special information session will be held at 2.30 am.***

தமிழே எங்கள் அடையாளம்.
அதை இழக்க வேண்டாம்.
எல்லாப் பிள்ளைகளுக்கும்
தமிழ் கற்பிப்போம்.

*Berwick, Clayton, Dandenong, East Burwood, South Morang.*
*www.bharathi.org.au PH.: 0433354401*

பாரதி பள்ளி
BHARATHI ACADEMY
முதல் தரமான தமிழ் மொழிப் பாடசாலை.
24 years of service excellence







# OPEN DAY

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## Berwick Campus

**Saturday 22nd September 2018.**
**Time: 10.15am to 12.15pm.**
**Kambrya College,**
**68 Bemersyde Drive, Berwick**

***A special information session will be held at 10.30 am.***

## Dandenong Campus

**Sunday 23rd September 2018.**
**Time 10.30 am to 1.00 pm.**
**Dandenong HS**
**Ann Street Campus,**
**23 Ann St., Dandenong**

***A special information session will be held at 11.00 am.***

தமிழே எங்கள் அடையாளம்.
அதை இழக்க வேண்டாம்.
எல்லாப் பிள்ளைகளுக்கும்
தமிழ் கற்பிப்போம்.

*Berwick, Clayton, Dandenong, East Burwood, South Morang.*
*www.bharathi.org.au PH.: 0433354401*



# Preparation for

# Selective Schools Exams

## (Yr 9 and Yr 10 Entrance)

## Year 7 Scholarship

## Years 3, 4 & 5

## Berwick & Notting Hill


ENROL NOW

*Tests every week;*
*Enriched by high quality face to face teaching.*

Over 15 years of exceptional results.

Email: info@edxinstitute.com.au
www.edxinstitute.com.au
**1300 933 922 / 0433 354401**

EdX Institute



# ஈழ அகதிக்கு ஏற்பட்ட மன அழுத்த மரணம்!

● ஜெ.பி.

சொந்த நாட்டில் இராணு-வக் கொடுமைக்கு முகங் கொடுக்க முடியாமல் தனது 4 பிள்ளைகளையும் மனைவியையும் தனியே தவிக்க விட்டு தஞ்சங்கோரி படகேறி வந்த அப்பாவி அகதி ஒருவரை ஆஸ்திரேலிய என்ற பெரும் தேசம் "வெற்றிகரமாக" பாடையில் ஏற்றியிருக்கிறது. இந்த உயிரையும் பலிகொண்டதன் மூலம் மிகத் திருப்தியாக தனது குடிவரவு கொள்கையை நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்று பெருமை கொள்ளுமளவுக்கு வசந்தகுமார் என்பவரின் சாவு அமைந்திருக்கிறது.

தற்போது அந்த அகதியின் குடும்பம் வட்ஸ் - அப் செய்தியில் ஒப்பாரி வைத்து தமது தகப்பனின் சடலத்தையாவது வீட்டுக்கு அனுப்பும்படி கெஞ்சுகிறது.

இதுவும் ஆஸ்திரேலியாவில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை இந்த நாடு உணர்கிறதோ இல்லையோ இங்குள்ள தமிழ் மக்கள் உணர்ந்திருக்கிறார்களா என்பதுதான் மிகப்பெரிய கேள்விக்குறி.

"ஊருக்கு உதவி செய்கிறோம்" - "அங்குள்ள மக்களின் அடிப்படை வாழ்வாதார மேம்பாடுகளை பிடுங்கி நடுகிறோம்" - என்று மேடைக்கு மேடை தங்களது அமைப்புக்களுக்கு முகவரி தேடி அலைபவர்களும் - போராட்டத்தினை மூலனதனமாகப் போட்டு "தேசியக்கம் பனிகள்" நடத்தி அரசியல் செய்யத்துடிப்பவர்களும் பொறுப்பாக செய்யவேண்டிய காரியங்கள் உள்ளூரில் எவ்வளவு இருக்கின்றன என்பதைத்தான் பிறிஸ்பனில் கடந்த மாதம் இடம்பெற்றுள்ள இந்தச்சாவு இன்னொரு பெரும் செய்தியாக சொல்லிச்சென்றிருக்கிறது.

தாயகத்தின் யுத்தத்தூவானத்தினால் உயிருக்கு அஞ்சி, படகேறி ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்தான் நல்லதம்பி வசந்தகுமார் என்ற 4 பிள்ளைகளின் தந்தை.

வவுனியாவில கோவில் குளத்தை சேர்ந்தவர். சிறந்த வாகன திருத்துநர். வவுனியாவில் சொந்தமாக கடை நடத்தி வந்தவர். ஆனாலும் நாட்டில் இடம்பெற்ற இராணுவ வன்முறையை அடுத்து, தமிழகம் சென்று அங்குள்ள அகதிமுகாமில் தஞ்சமடைந்திருந்தார். பின்னர் நாடு திரும்பியும் அவரை பல பிரச்சினைகள் துரத்த, அகதி கோரிக்கையுடன் ஆஸ்திரேலியா வந்தார். கிறிஸ்மஸ் தீவில் தரை தட்டியவருக்கு இங்கேயும் மிகப் பெரிய ஏமாற்றம்தான் காத்திருந்தது.

## சாவை நோக்கி விரட்டும் அரசுகளும் அவல வாழ்வும்!

2012 ஆண்டு லேபர் ஆட்சியின்போது, ஆகஸ்ட் 13க்கு பின்னர் படகில் வருபவர்களை பப்புவா நியூகினி மற்றும் நவ்று தீவுகளில் கொண்டுபோய் தடுத்து வைத்து அங்குதான் அகதி அந்தஸ்து தொடர்பாக விசாரிக்கப்படுவர் என்ற சட்டம் உச்சத்தை அடைந்திருந்தது. அந்த சட்டத்தின் பிரகாரம், வசந்தகுமார் நவ்று தடுப்பு முகாமுக்கு கொண்டுசென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டார். அந்தத்தடுப்புக்காலம் சுமார் ஒரு வருடமாக நீண்டது.

வசந்தகுமாருக்கு தடுப்புக்காவல் ஒன்றும் புதில்லை. அவர் இலங்கையிலும் பல இராணுவ தடுப்புக்காவல்களில் இருந்தவர். ஆனாலும் இந்த நாட்டிலாவது நிம்மதியாக வாழலாம் என்று வந்தவருக்கு இந்த தடுப்புக்காவல் எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்தது.

நவ்று தடுப்பு முகாமில் ஒருநாள் நண்பர்களுடன் பேசும்போது "நாட்டிலும் தடுப்பு, இங்கும் தடுப்பு. எங்களுடைய கருத்தை இந்த நாடும் நம்ப மறுக்கிறது இல்ல" - என்று துயர் நிறைய புலம்பியிருக்கிறார். நவ்று முகாமில் அனுபவித்த நீண்ட காலத்தடுப்பினால் ஏற்படத் தொடங்கிய மன அழுத்தம் வசந்தகுமாரின் மனநிலையை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கத்தொடங்கியது என்கிறார்கள் அவரது நண்பர்கள்.

முகாமில் தன்னை மறந்த நிலையில் அவர் பேசிக்கொண்டிருப்பார் என்றும் பின்னர் எதிர்பாராத வகையில் சுமுக நிலைக்குதிரும்புவார் என்றும் தெரிவித்த வசந்தகுமாரின் நண்பர்களில் ஒருவர், இரண்டு தடவைகள் தற்கொலைக்கும் முயற்சித்து தடுக்கப்பட்டார் என்று கூறினார்.

நவ்று முகாமில் வசந்தகுமாரின் மன நிலையை அவதானித்த ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் அவரை - *2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்* - நவ்று தீவிலிருந்து குயின்ஸ்லாந்து மாநிலத்துக்கு கொண்டுவந்து, அங்குள்ள தடுப்புமுகாமில் தடுத்துவைத்தது. அந்த முகாமிலிருந்து மணநல சிகிச்சைக்காக வைத்தியசாலையிலும் சேர்ப்பித்திருந்தது. சிகிச்சைகளின் பின்னர் கேர்ட்டின் பகுதியில் உள்ள தடுப்புமுகாமுக்கு மாற்றி அங்கு இரண்டு மாதங்கள் வைத்திருந்து விட்டு விடுவித்திருந்தது.

வசந்தகுமாரின் அகதிக்கோரிக்கையின் முடிவுகள் வெளியாகி அவர் நீதி மன்றில் தன்னை அகதி என நிரூபிக்க வேண்டிய நிலைமை உருவாகியிருந்தது. இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட (Medi Care) மெடிக்கெயர் வசதியும் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த தொடர் இழப்புக்கள் அனைத்தும் அவரை மேலும் மனஅழுத்திற்கு தள்ளியதாக அவரது நண்பர்கள் தெரிவித்தார்கள். ஒரு கட்டத்தில் சித்தன்போக்கு சிவன் போக்கு என்பதுபோல, சாமியார்கள் போல வேட்டியணிந்தவாறு பிரமை இழந்த நிலையிலிருந்தார் என்றும் அன்றாட உணவாக பழங்களை மாத்திரமே உட்கொண்டு வந்தார் என்றும் அவரது நண்பர்கள் கூறினார்கள்.



ஒருநாள் உடல் சோர்வுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு வழங்கப்பட்ட மாத்திரைகளை உட்கொள்வதற்கு தொடர்ந்து மறுத்துக்கொண்டிருந்தார். வைத்தியர்களின் பொறுப்பில் சேர்த்துவிட்டு அவரது நண்பர்கள் வீடு திரும்பிய நேரம் பார்த்து, தான் கட்டியிருந்த வேட்டியை கட்டில் கால்களுடன் இணைத்து தனது கழுத்தை தானே திருகியிருக்கிறார் என்றும் இதனால் மூளைக்கு செல்லும் இரத்த குழாய் சிதைந்து மூளை இறந்து கோமா நிலைக்கு சென்றுவிட்டார் என்றும் கூறப்படுகிறது. உடனடியாக சிகிச்சைகளை மேற்கொண்டு செயற்கை சுவாசமளிக்க தொடங்கிய வைத்தியர்கள், வசந்தகுமார் மீண்டும் உயிர்பிழைப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறியுள்ளனர். செயற்கை சுவாசத்தை கழற்றுவதற்கான அனுமதியை வைத்தியசாலை நிர்வாகம் இலங்கையில் உள்ள அவரது மனைவியிடம் கோரியிருந்தது - என்று கூறிய வசந்தகுமாரின் நண்பர்களில் ஒருவர் தனது அழுகையை நிறுத்த முடியாதநிலையில் மற்றைய நண்பரிடம் தொலைபேசியை கையளித்து சென்றார்.

தொலைபேசியை வாங்கிய அடுத்த நண்பர் தழுதழுத்த குரலில் -

'அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியிருக்கும் செயற்கை சுவாசம் கழற்றப்பட்டது. அதன் பின்னரும் சுமார் நான்கரை மணி நேரமாக உடலில் அவரது உயிர் நீடித்தது. கடைசியில் எங்களை விட்டு சென்றுவிட்டார். சுதந்திரமான காற்றை சுவாசிப்பதற்கு இந்த நாட்டுக்கு வந்த வசந்தகுமார் தனது கடைசி சுவாசத்தை பெரும் போராட்டத்தோடு இழுத்து வெளியில் விட்டார். அதன் பின்னர், அதுவும்கூட வேண்டாம் என்று சென்றுவிட்டார்."

"எங்களுடன் இருந்த ஒரு நண்பன் - சுதந்திரமாக வாழ வந்தவன் - சாவுக்கு முயற்சித்ததை எங்களால் ஏற்றுகொள்ள முடியவிலை. இதற்கிடையில் மூன்று முறை பால் பருக்கினோம். இப்போது எல்லாமே கண்முன்னால் திரும்ப திரும்ப வந்துமிரட்டுவதுபோலிருக்கிறது. சொந்த நாட்டில் தோற்றுப்போய் வந்த நாட்டிலும் தோற்றுப்போய் வாழ வழியில்லாமல் இடைவழியில் சாவிடமும் தோற்றுப்போவதே எமது வாழ்வாகிப்போய் விட்டது என்பதை நினைக்கும்போது இந்த வாழ்விலும் சமூகத்திலும் வெறுப்புத்தான் மேலிடுகிறது."

"வசந்தன் அண்ணர் அமைதியானவர். சிறந்த மெக்கானிக். பெடியளோடு நன்றாக பழகக் கூடியவர். எந்நேரமும் பிள்ளைகள், குடும்பம் என்றுதான் அவர் அடிக்கடி பேசிக்கொண்டிருப்பார்" - என்றார்.

அவர்களின் பிள்ளைகள் தந்தையின் செயற்கை சுவாசத்தை கழற்றிய பின்னரும் அவரது உயிர் இருப்பதை அறிந்து ஒரு வீடியோவை வெளியிட்டிருந்தனர்.

அதில் -

"அப்பாவின் உடலில் உயிர் இருக்கிறது தயவுசெய்து மீண்டும் செயற்கை சுவாசத்தை பொருத்த உதவுங்கள். எங்கள் அப்பா எங்களுடன் சின்னப் பிள்ளையில் இருந்தே வாழ்ந்ததில்லை. எங்களுக்கு அப்பா வேணும்" - என்று கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கண்ணீர் கோரிக்கை வசந்தகுமாரில் நிறைவேறாவிட்டாலும் பல வசந்த குமார்கள் எங்கள் சமூகத்தில் இன்னமும் இருந்துகொண்டுதானிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் குரல் வளையை நெரித்துக்கொண்டிருக்கும் இந்த நாட்டின் குடிவரவுக்கொள்கையினால் அணு அணுவாக செத்துக்கொண்டிருக்கும் வசந்தகுமார்கள் நீங்கள் நடமாடும் அதே தெருவிலேயே நடைப்பிணங்களாக திரிகிறார்கள்.

இன்னமும் பிந்தவில்லை!




அவுஸ்திரேலியாவில் இருந்து உலகெங்கும் தமிழ்மணம் பரப்பும்
உங்கள் தமிழ் வானொலி
தாயகம்
தமிழ் ஒலிபரப்பு சேவை
வையகம் தழுவிய வான்வழித் தோழன்
உலக நடப்புகள்
பாடல்கள்
உள்ளூர் நிகழ்ச்சிகள்
நகைச்சுவை நிகழ்ச்சிகள்
தாயகச் செய்திகள்
உலகச் செய்திகள்
சமூக அறிவிப்புக்கள்
அரசியல் கலந்துரையாடல்கள்
மற்றும் பல சுவையான, தரமான நிகழ்ச்சிகள் உங்களை மகிழ்விக்க...
எமது நிகழ்ச்சிகளை
www.thayagam.net இணையத்தளத்தினூடாகவும்
Mobile தொலைபேசியினூடாகவும்
எமது பிரத்தியேக வானொலிகளினூடாகவும் கேட்கலாம்.
Wifi
மேலதிக விபரங்கள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
0432 710 238 | 02 8458 2393
www.thayagam.net
/thayagam.tamil
Thayagam
Tamil Broadcasting Service (TTBS)


அன்புக்குரியவர்களே!
உங்களுடன் ஒரு நிமிடம்...
சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகத்தால் கொழும்பு கொட்டாஞ்சேனையில் பகவான் கிருஷ்ணருக்கு ஆலயம் அமைக்கப்படுவது பற்றி அறிந்திருப்பீர்கள். எத்தனையோ ஆலயங்கள் இருக்கும்போது புதிதாக இன்னொரு ஆலயம் எதற்கு என்னும் எண்ணம் உங்கள் மனதில் எழலாம். கிருஷ்ண பக்திக்கழகத்தின் ஸ்தாபகரும் எங்கள் ஆன்மீகக் குருவுமான பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் நோக்கம் மக்கள் மத்தியில் வேத கலாசாரத்தை மீண்டும் தோற்றுவிப்பதும் அமைதி, சமாதானம், மகிழ்ச்சி, செல்வச்செழிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதும்தான். ஆலயம் அமைப்பதால் இந்நோக்கம் எவ்வாறு நிறைவேறும் என்று நினைக்கலாம். ஆலயங்கள்தான் மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளன.
ஆன்மிகக் கல்வி, கலை, கலாசாரம் என்பன ஆலயங்கள் மூலமே வளர்க்கப்பட்டன. அந்த நிலைமையை மீண்டும் தோற்றுவிக்கும் வகையில்தான் கிருஷ்ண பக்திக்கழகத்தால் உலகெங்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே நோக்கத்தில்தான் பகவான் கிருஷ்ணருக்கான இந்த ஆலயம் பக்தி மயமாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலயம் தற்போது பூரணத்துவ நிலையை அடைந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்தபதியும் கட்டடக் கலைஞர்களும் ஆலயத்தை விரைவாகக் கட்டி முடிக்கும் வகையில் மும்முரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த ஆலயம் அமைக்கும் திருப்பணிக்கு பங்களிப்பு நல்க விரும்புபவர்கள் விரைந்து செயற்பட்டு தம் பங்களிப்பை நல்குமாறு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். ஆலய வரலாற்றில் உங்கள் பெயர் பதிக்கப்படுவதோடு, அது என்றென்றும் உங்களுக்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும், உங்கள் பரம்பரையினருக்கும் ஆசி வழங்கிக்கொண்டிருக்கும். ஆலயம் அமைப்பது, அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பனவற்றுக்கு எண்ணற்ற பலன்கள் கிட்டும் இதுபற்றி ஸ்கந்தபுராணம், அக்கினிபுராணம் என்பவற்றில் காணக்கிடைக்கின்றன.
ஆலயத் திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்க விரைந்து முன்வாருங்கள்
அருகிலுள்ள கூப்பனை நிரப்பி, கத்தரித்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அல்லது நிதியுடன் நேரில் கையளித்து ரசீது பெற்றுக்கொள்ளுங்கள். நிதியை காசோலையாக, போஸ்ரல், மணி ஓடராக Iskcon temple fund என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.
ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயக் கட்டட நன்கொடை
பெயர்............
தொழில்............
முகவரி............
நிதி விவரம்............
திகதி
கையொப்பம்
ஆலயத் தலைவர், ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம், இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13
Phone : 077 228 8166, E-Mail: iskcon@slt.lk - www.iskcon.lk
The Temple President, Sri Sri Radha Krishna Temple
188, New Chetty Street, Colombo - 13 Tel : 0112433325
நிதியை வைப்பிலிட விரும்புபவர்கள்
பின்வரும் வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்பிலிடலாம்.
COMMERCIAL BANK, KOTAHENA BRANCH
A/C Name : ISKCON, Temple Fund, A/C No: 1120017042
HATTON NATIONAL BANK - JAMPETTAH BRANCH
A/C Name: ISKCON, A/C No: 207010000891


4
ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்
நிரோசன்
நிர்ஷ்
19
09
2018
பிறந்தநாள் வாழ்த்துகள் அண்ணா!
19.09.2018 அன்று
தனது நான்காவது
பிறந்த நாளைக் கொண்டாடும்
எங்கள் அன்பு மகனை
வாழ்த்துகிறோம்.
அன்புடன்...
அம்மா, அப்பா

# யார் இந்த Peter Dutton



● பிரணி

தன் முயற்சியில் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி அங்கு தொங்கிய உடலை வீழ்த்தி அதனை சுமந்துகொண்டு மயானத்தை நோக்கிய நடந்த கதையாக எப்படியாவது ஆஸ்திரேலியாவின் தலையெழுத்தை மாற்றியே தீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு கன்பராவில் நின்று சதிராடிய பீற்றர் டட்டன் தான் நினைத்தவாறு மல்கம் ரேன்புல்லுக்கு கடைசியில் ஆப்படித்துவிட்டார். தான் நினைத்ததைப்போல பிரதமராக வருவதற்கு முடியாவிட்டாலும் கடந்த மாதம் ஆஸ்திரேலிய அரச இயந்திரத்தையே ஒரு உலுப்பு உலுப்பியெடுத்துவிட்டார் இந்த பீற்றர் ட்டடன்.

யார் இந்த பீற்றர் டட்டன்?

ரேன்புல் அரசாங்கத்தில் குடிவரவு அமைச்சராக வந்த பின்னர்தான் அதிகம் ஊடகங்களில் அடிபடத்தொடங்கினார். மிக்கொடூரமான குடிவரவுக்கொள்கையை கையில் சூலாயுதம் போல வைத்துக்கொண்டு நாட்டின் அத்தனை குடிமக்களையும் மிரட்டித்தொடங்கியதன் மூலம் ஆஸ்திரேலியாவின் அதி தீவிர - இனவெறி பிடித்த - வலதுசாரிகளின் செல்லப்பிள்ளையாக பிரபலமடையத்தொடங்கினார்.

ஆஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படு கொலைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் முன்னாள் பிரதமர் கெவின் ரட் நாடாளுமன்றில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டபோது, அந்த மன்னிப்புக் கோரலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்தைவிட்டு வெளிநடப்பு செய்த பீற்றர் ட்டடன், தனது இனவெறிக்கொள்கையின் உக்கிரத்தை பகிரங்கமாகவே வெளிப்படுத்தினார். பின்னொரு நாளில், அவ்வாறு வெளிநடப்பு செய்தமை மிகப் பெரிய தவறு என்று வருத்தம் தெரிவித்த போதும் செயல் வடிவில், எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை.

இவரது அரசியல் பின்புலம் என்ன? இன்று இவர் அடைந்துள்ள இடத்துக்கு பயணித்து வந்த பாதை என்ன?

பிறிஸ்பனின் வடக்கிலுள்ள பூண்டல் என்ற நகரில் ஐந்து சகோதர்களுடன் பிறந்து வளர்ந்த பீற்றர் டட்டன், சிறுவயதிலிருந்து பிரயாசையுடன் தனது முன்னேற்றமே கவனமாகச் செயற்பட்டுவந்த நபர் ஆவார். அதற்கு மிக எளிய உதாரணம், அவர் தனது 18 ஆவது வயதில் முதலாவது வீட்டை சொந்தமாக வாங்கியிருந்ததை கூறலாம். அதற்கு காரணம், அவரது கடின உழைப்பே என்கிறார்கள் அவரது நண்பர்கள். 13 - 14 வயதிலேயே தனது அயலில் சென்று பத்திரிகை விநியோகிப்பவராக வேலை செய்து பணம் சேகரிக்க தொடங்கிய இவர், பின்னர் இறைச்சிக்கடையொன்றில் பகுதிநேரமாக பணி புரிந்திருக்கிறார்.

பின்னாளில்தான், பொலிஸ் சேவையில் இணைந்தார். அந்தப்பாதையில்தனது தனித்துவத்தை நிலைநாட்ட முடியாது என்ற காரணத்தினால் பட்டப்படிப்பை நிறைவு செய்துகொண்டு சொந்த தொழில் முயற்சியில் இறங்குவதற்கு திட்டமிட்டு, குவீன்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்தார். தனது தந்தையுடன் சேர்ந்து கட்டடத் துறையில் பல கம்பனிகளை திறந்தும்முடியும்வியாபாரத்தில் ஒரு கரை காணவேண்டும் என்று முயற்சித்தார்.

இதற்கிடையில், 22 வயதில் - 1992ஆம் ஆண்டு - திருமணம் செய்து கொண்டார். அந்தத் திருமணம் வெற்றிகரமான வாழ்வுக்கு வழி கோலவில்லை. சில மாதங்களிலேயே அந்த உறவு முறிந்துவிட, இன்னொரு பெண்ணோடு காதல் வயப்பட்டு இணைந்து வாழ்ந்தார். அப்போது - 2002 இல் - இருவருக்கும் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த உறவும் அதிக காலம் நீடிக்கவில்லை.

அதன் பின்னர், மூன்றாவது பெண்ணை 2003 இல் கைப்பிடித்த பின்னர்தான், குடும்ப வாழ்வு அவருக்கு நிரந்தரமாக அமைந்தது. மூன்றாவது துணைக்கும்பீற்றர்டட்டனுக்கும்இரண்டு மகன்கள் உள்ளனர்.

குடும்பவாழ்க்கைஒருபக்கமாகசென்று கொண்டிருந்தபோதும், 2001 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றார். அதன்பின்னர், 2004 இல் அமைச்சராக தெரிவுசெய்யபட்டார். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக லிபரல் கட்சியின் உயர்மட்டத்தை நோக்கி நகர்ந்தார்.

2013 ஆம் ஆண்டு லிபரல் கட்சி ஆட்சி அமைத்தபோது இவருக்கு சுகாதார அமைச்சர் பதவியை தூக்கிக்கொடுத்தார் இவரது ஆஸ்தான சகாவும் அப்போதைய பிரதமருமான டொனி அபொட். அந்தக் காலப்பகுதியில் ஆஸ்திரேலிய மருத்துவர்கள் சங்கம் விடுத்த ஒரு அறிக்கையில் - "கடந்த 30 வருடங்களில் தாங்கள் சந்தித்த மிகக்கேவலமான சுகாதார அமைச்சர் இவர்தான்" - என்று கூறியிருந்தார்கள்.

அதன் பின்னர், 2014 முதல் தொடர்ச்சியாக குடிவரவு அமைச்சராக பணியாற்றி வருகிறார். இவரது வரவுக்குப் பின்னர், குடிவரவுத் துறையில் பல புதிய - இறுக்கமான - கொள்கைகள் கொண்டு வரப்பட்டன. புதிய நிர்வாக அலகுகள் உருவாக்கப்பட்டு, அந்த திணைக்களங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. முக்கியமாக, விமான நிலையங்களில் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. நாட்டுக்குள் வருபவர்களை சல்லடை போட்டு சோதனை செய்வது உட்பட பல இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகளை இவர் அறிமுகம் செய்தார். தனது திணைக்களத்திலுள்ளவர்களுக்கு புதிய சீருடைகளை அறிமுகம் செய்தார்.

> 2013 ஆம் ஆண்டு லிபரல் கட்சி ஆட்சி அமைத்தபோது இவருக்கு சுகாதார அமைச்சர் பதவியை தூக்கிக்கொடுத்தார் இவரது ஆஸ்தான சகாவும் அப்போதைய பிரதமருமான டொனி அபொட். அந்தக் காலப்பகுதியில் ஆஸ்திரேலிய மருத்துவர்கள் சங்கம் விடுத்த ஒரு அறிக்கையில் – "கடந்த 30 வருடங்களில் தாங்கள் சந்தித்த மிகக்கேவலமான சுகாதார அமைச்சர் இவர்தான்" – என்று கூறியிருந்தார்கள்.

இவரிடம்அமைச்சுப்பொறுப்புகொடுக்கப்பட்டதை ஆஸ்திரேலியாவின் ஜனநாயக விரும்பிகள் பலரும் கடுமையாக விமர்சித்தார்கள். பல்லின கலாசார விழுமியங்களை உயர்ந்த தரத்தில் வைத்து பாதுகாத்துவருகின்ற ஆஸ்திரேலிய தேசத்தின் சகல மதிப்பையும் பீற்றர் டட்டன் தனது கொடியசட்டங்களால்சிதைக்கிறார்என்று அவர்கள்கூறினர். ஒட்டு மொத்த தேசத்தையும் பூதக்கண்ணாடி வைத்து பார்த்துக்கொண்டு திரிந்தால் மக்கள் எப்படித்தான் சுதந்திரமாக இங்கு வாழ்வது என்ற சாரப்பட அவர்கள் பொருமினார்கள்.

இவரதுஇந்தநடவடிக்கைகள்மக்களையும் ஏனைய தரப்பினரையும் சீற்றத்துக்கு உள்ளாக்கியதே தவிர, அரசாங்கத்துக்கு அவரது நிர்வாகமும் அதிலிருந்து இறுக்கமும் பிடித்துப்போனது. கடந்த வருடம் புதிய அமைச்சுப்பொறுப்பொன்றை உருவக்கி அதையும் அவர் கையில் கொடுத்தது. அதுதான் உள்துறை அமைச்சு.

நாட்டின்தேசிய பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சட்ட அமுலாக்கம், அனர்த்த முகாமைத்துவம், குடிவரவு - குடியகல்வு, குடியுரிமை அதிகாரம், எல்லைப்பாதுகாப்பு மற்று பல்லின கலாசார விவகாரம் ஆகியவை அனைத்தும் இந்த உள்துறை அமைச்சுக்குள் அடங்கும். கிட்டத்தட்ட பிரதமருக்கு ஈடான அதிகாரம் கொண்ட அமைச்சு.

இந்த அமைச்சினை இவர் கையில் கொடுக்கும்போது பலர் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்கள். கிட்டத்தட்ட ஒட்டுமொத்த நாட்டையே இந்த ஒற்றை சண்டியனின் கையில் ஒப்படைக்கும் மல்கம் ரேன்புல் வரலாற்றில் மிகப்பெரிய தவறை இழைக்கிறார். இதன் விளைவை நிச்சயம் இவர் நிச்சயம் அனுபவிக்கப் போகிறார்" என்று கதறினார்கள்.

எல்லோரும் ஆரூடம் கூறியதைப் போலவே கடைசியில், பீற்றர்டட்டன் அந்த அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு அதனை தனக்கு அளித்த மல்கம் ரேன்புல்லுக்கு எதிராகவே கடந்த மாதம் கிளர்ச்சி செய்தார். தான் நினைத்ததை அடைய முடியாவிட்டாலும் ஓரளவுக்கு தனது முயற்சியில் வெற்றிகண்டுவிட்டார்.

இனிவரும் காலங்களிலும் அவரது கொடுங்கோலாட்டம் தொடரப்போவது தவிர்க்கமுடியாதது என்பதையே அரசியல் அரங்கு காண்பித்துக்கொண்டிருக்கிறது.

20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது
உலகத்தமிழரின் உரிமைத் தோழன்
இன்பத்தமிழ் ஒலி
24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை
Mobile App TUNE IN Inbathamil
www. inbathamil.com

Inbathamil Studio
2/251 Liverpool road,
Ashfield - NSW2131,
Australia
02-9798 2993
02-8542 2016
0451 051 767
0425 324 953
inbathamil@gmail.com
inbathamiloli


MATHY FOOD CORNER
Restaurant & Bakery
தாயக மணம் வீசும்
வெதுப்பக பண்டங்கள் மெல்பேர்ணில்!
சுடச்சுட தாயாரித்து தருகிறார்கள்
1/24 Langhorne Street,
Dandenong VIC 3175,
Australia.
Tel: +61 3 8753 5751
www.mathyfoodcorner.com.au
facebook
www.facebook.com/mathyfoodcorner
MATHY FOOD CORNER
Restaurant & Bakery
Gift
VOUCHER
$5
facebook
www.facebook.com/mathyfoodcorner
www.mathyfoodcorner.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI








# அகதிகளுக்கு ஆப்படிக்கும் ஆஸி. அரசு

## அரசியலில் தொடர்ந்தும் தத்தளிப்பு!

"ஆஸ்திரேலிய அரசியலில் அண்மையில் இடம்பெற்ற மாற்றத்தினால் அகதிகளாக வருபவர்களுக்கு ஏதாவது நல்லது நடந்திருக்கிறதா"

அண்மையில் ஆஸ்திரேலிய அரசியலில்நடந்த குழப்பத்தை அடுத்துஎம்மவர்களின் மத்தியில் எழுந்துள்ள ஒரே வினா இதுதான்.

ஏனென்றால், இன்றைய நிலையில் ஆஸ்திரேலிய அரசியலில் இடம்பெறுகின்ற மாற்றங்களை ஏனைய நாடுகளைவிட "ஏஜெண்டுகள்தான்" உன்னிப்பாக அவதானித்தவண்ணமுள்ளார்கள். சிறு சலசலப்பொன்றை கண்டுகொண்டாலும் உடனடியாக அதைக் காண்பித்து, லட்சக்கணக்கான பணத்தை சுருட்டிக்கொண்டு அப்பாவிகளை கப்பலில் ஏற்றி அனுப்புவதில் அந்த "பெருந்தகைகள்" குறியாக நிற்கிறார்கள். அவர்களை நம்பிய அப்பாவி மக்களும் அப்படியொரு மாற்றம் ஆஸ்திரேலியாவில் இடம்பெறவேண்டும் என்றுதான் ஊர்க் கோயில்களில் எல்லாம் விரதமிருக்கிறார்கள்.

அப்படியானால், ஆஸ்திரேலிய அரசியலில் அண்மையில் இடம்பெற்ற குழப்பம் என்ன? நாட்டின் பிரதமரே மாற்றுமளவுக்கு இடம்பெற்றிருக்கின்ற அசம்பாவிதங்கள் என்ன?

ஆஸ்திரேலியாவில் தற்போது ஆட்சியிலிருந்து லிபரல் கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசு கடந்த ஐந்து வருடங்களாக ஆட்சியிலிருக்கிறது. 2013ஆம்ஆண்டு லேபர்கட்சியிடமிருந்து ஆட்சியைபிடித்த லிபரல்கள் தங்களது வித்தியாசமான ஆட்சிமுறையினால் நாட்டை தங்களுக்கு ஏற்ற தனித்துவமான பாதையில் வழி நடத்திச்சென்றுகொண்டிருக்கிறார்கள்.

2013 ஆம் ஆண்டு லிபரல்கள் ஆட்சியை கைப்பற்றும் போது டொனி அபொட் பிரதமனார். அவர் பிரதமராக வரும்போதே பல விமர்சனங்கள் அவர்மீது வைக்கப்பட்டன. எத்தனையோ ஆளுமைமிக்க - தங்களின் தலைமைத்துவப் பண்புகளை நிரூபித்த - திறமைசாலிகள் எல்லாம் எதிர்க்கட்சித்தலைவர்களாக வந்து வந்து போய்க்கொண்டிருக்க, அவர்களுடன் ஒப்பிடும்போது ஒன்றுக்குமே உதவாத டொனி அபொட் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்துக்கொண்டிருக்கும்போது பார்த்து ஆட்சி மாற்றம் நிகழ்ந்துவிட்டது.

விளைவு, அந்த ஒன்றுக்கும் உதவாதவரே பிரதமரானார்.

எல்லோரும் எதிர்பார்த்தபடி, அவரின் தலைமைத்துவத்தின் கீழ் ஆஸ்திரேலிய அரசும் சரி, நாட்டு மக்களும்சரி எந்தப் பயனையும் அறுவடை செய்யவில்லை. அல்லாடத்தொடங்கியது.

மேற்குல நாடுகளின் தலைமைப்பதவிக்கு வருபவர்கள், ஒன்றுமே செய்யாமல் காலாட்டிக்கொண்டிருந்து நல்ல பெயர் வாங்கிவிடமுடியாது. நாட்டில் எல்லாம் சரியாக நடந்துகொண்டிருந்தாலும், புதிதாக ஆட்சிபீடமேறியவர் புதிதாக மக்களுக்கு என்ன செய்யப்போகிறார் என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக இருப்பர். அதன் அடிப்படையில்தான் தங்கள் தலைவர் செயல்திறன் உடையவரா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பர். வெறுமனே தேர்தல் கால கூத்துக்களை அரங்கேற்றுபவர்களையெல்லாம் மக்கள் ஒருபோதும் தொடர்ந்து அனுசரித்துக்கொண்டிருப்பதில்லை.

மேற்கு நாடுகளில் நடைபெறுகின்ற இன்னொரு விடயம், அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற கருத்துக்கணிப்பு. இது மிகப்பெரிய அளவில் ஆட்சியிலிருக்கும் அரசின் அடிவயிற்றில் புளியை கரைத்துக்கொண்டிருக்கும்.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, தேர்தல் முடிவடைந்து ஆளும் கட்சி தனது ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தாலும் இந்த தனியார் கருத்துக்கணிப்புக்கள் கண்டபடி நடைபெற்றுக்கொண்டிருக்கும். இந்த கருத்துக்கணிப்பில், அவ்வப்போது அரசாங்கம் கொண்டுவரும் கொள்கைகள், அவர்கள் அதற்கு எதிர்வினையாற்றும் பாணி, நாட்டின் தலைவராக உள்ளவருக்கு மக்களிடமுள்ள விருப்பம் - மதிப்பு என்பவை குறித்தெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டவண்ணமிருக்கும்.

ஆக, 2013 ஆம் ஆண்டு ஆட்சிபீடமேறிய டொனி அபொட் தலைமையிலான அரசுக்கு மக்கள் மத்தியிலிருந்து எதிரொலிக்கத் தொடங்கிய கருத்துக்கள் மிகப்பாரதூரமாக அமைந்தன. பதவியேற்ற கொஞ்சக்காலத்திலேயே டொனி அபொட் என்பவரை மக்கள் அறவே வெறுத்தார்கள். இப்போது அமெரிக்காவின் ட்ரம்பை அமெரிக்கர்கள் பார்ப்பதுபோலவே அப்போது ஆஸ்திரேலிய மக்கள் டொனி அபொட்டை பார்த்தார்கள். அதேவேளை, எதிர்க்கட்சியான லேபரின் கை மக்கள் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக ஓங்கத்தொடங்கியது.

அப்போது, ஆளும் லிபரல் கட்சியை பின்னிருந்து இயக்குபவர்கள், இராஜதந்திர முதலாளிகள் ஆகியோர் இதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்று திட்டமிடத்தொடங்கினார்கள். இப்படியே டொனி அபொட்டின் தலைமையில் ஆட்சி போய்க்கொண்டிருக்குமேயானால், அடுத்த தேர்தலிலேயே ஆட்சியை மீண்டும் லேபர் கட்சியிடம் பறிகொடுக்கவேண்டி வந்துவிடும். ஆகவே, உடனடியாக தலைமைத்துவ மாற்றம் ஒன்றைக்கொண்டுவந்து, கட்சியை மறுசீரமைக்க வேண்டும். மக்கள் மத்தியில் லிபரல் கட்சி இழந்துகொண்டிருக்கும் மதிப்பை தூக்கி நிமிர்த்தவேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்தார்கள்.

அதற்கான திட்டமிடலில் அவர்கள் பிரதானமாக கவனம் செலுத்திய விடயம், தங்களின் கடுமையான வலதுசாரி தத்துவங்களை வெளிப்படையாக மக்களிடம் பீய்ச்சியடிக்காதவராக ஒருவரை ஆட்சியில் அமர்த்தினால்தான், மக்களுடன் சிரித்து சிரித்து அரசியல் செய்து அவர்களின் ஆதரவை பெறலாம் என்பதாகும்.

லிபரல்களின் வலதுசாரி அரசியல் கொள்கையை ஆஸ்திரேலியா போன்றதொரு பல்லின மக்கள் வாழுகின்ற நாட்டில் சந்தைப்படுத்துவதென்பது மிகக்கடினமான விடயம். அதற்காக, அந்த கொள்கையில் நெகிழ்ச்சித் தன்மைகளை காண்பித்தால், பிறகு அவர்களுக்கும் இடதுசாரிகளான லேபருக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போய்விடும்.

ஆகவே, ஆஸ்திரேலிய லிபரல்களை பொறுத்தவரை அவர்களுக்கு தங்களிடம் காலாதி காலமாக ஊறிப்போயுள்ள இனவெறிபிடித்த அதி தீவிர வலதுசாரிக் கொள்கையும் வேண்டும். அதேவேளை, மக்களை மயக்கி மடக்கி வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு வசதியான இடதுசாரி முகமும் வேண்டும்.

இந்த மாதிரியான ஒரு தேவைக்கு டொனி அபொட் பயன்படமுடியாதவர் என்பதை தெரிந்துகொண்ட காலப்பகுதியில் - 2015 ஆம் ஆண்டு - லிபரல்கள் கண்டுபிடித்த நபர்தான் மல்கம் ரேன்புல்.

எப்போதும்சிரித்த முகம். கிட்டத்தட்ட ஒரு நடிகருக்குரிய தோற்றம். அவரை லிபரல் என்று சொன்னால் லேபர்கூட நம்பமாட்டார்கள். அப்படியொரு தயவான பார்வையும் தாய்மை மிக்க பரிவும்கொண்டவர்போல தோற்றம். 2004 ஆம் ஆண்டுதான் அரசியலுக்குள் முழுமையாக வந்து தனது நேர்த்தியான கொள்கைகளின் மூலம் மக்கள் மத்தியில் நல்ல பெயரெடுத்தவர். அரசியலுக்கு அப்பால் மிகப்பெரியபணக்காரராகவும்சொந்தத்தொழிலில்மேதையாகவும் காணப்பட்டவர்.

ஆக, இவருக்குரிய இதுமாதிரியான சகல தகுதிகளையும் பயன்படுத்தி இவரை பிரதமராக கொண்டுவந்து லிபரல்களுக்கு மக்கள் மத்தியில் சரிந்துகொண்டுபோகும் செல்வாக்கை தூக்கி நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு அது நடைபெற்றது. திடுதிடுப்பென்று அப்போதைய பிரதமர் டொனி அபொட்டுக்கு எதிராக சகல லிபரல்களையும் ஏவி விட்டு ஒரே இரவில், மல்கம் ரேன்புல் பிரதமராக்கப்பட்டார்.

கட்சியின் நலனுக்காக தனக்கு பொறி வைக்கப்பட்டது என்பதை உள்ளூர உணர்ந்துகொண்டாலும் தனது பதவிக்கு வைக்கப்பட்ட வேட்டு டொனி அபொட்டுக்கு ஆறாத வடுவை ஏற்படுத்தியது. மட்டுமல்லால், மல்கம் ரேன்புல் தனது புதிய அமைச்சரவையில் டொனி அபொட்டுக்கு எந்த இடமும் வழங்காதது இன்னமும் பெரிய காயத்தை அவருக்கு ஏற்படுத்தியது.

ஆனால், ஆட்சிக்கு வந்த ரேன்புல் நினைத்ததுபோலவே மக்களின் விருப்பத்துக்குரிய பிரதமராக பணிசெய்யத்தொடங்கினார். எதையும் ஜனநாயக ரீதியாக அணுகுபவராகவும், எல்லோரிடம் பேசக்கூடிய அரசியல் மொழி தெரிந்தவராகவும் அரசியல் விழுமியங்களை ஒழுக்கத்தோடு பேணுபவராகவும் அவர் காணப்பட்டார். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், வலதுசாரிகளின் மத்தியில் ஒரு மென்மையான இடதுசாரியாக அவர் காணப்பட்டார். உட்கட்சியில் இடம்பெற்ற பதவிக்கவிழ்ப்பினால் பிரதமராக வந்தவர் என்ற பெயர் தனக்கு தொடர்ந்தும் இருந்துவிடக்கூடாது என்பதற்காக, தான் பதவியேற்று லிபரல் கட்சி கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் ஆதரவை பெற்றுக்கொண்டுவருகின்றபோது தேர்தலை அறிவித்து, லிபரல்களை வெற்றிகரமாக ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினார்.

டோனி அபொட் பதிவியிலிருந்தபோது அவரது கையாலாகாத்தனத்தினாலும் அதன்பின்னர் லிபரல் கட்சியிலேற்பட்ட உட்பூசல்களினாலும் வெறுப்படைந்த மக்கள் தங்களிடம் ஆட்சியை தருவார்கள் என்று எதிர்பார்த்திருந்த எதிர்க்கட்சியான லேபர்களுக்கு ரேன்புல்லின் இந்த நகர்வுகளினால் பெரும் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

இந்த மாதிரியான ஆட்சிப்பயணம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மல்கம் ரேன்புல்லின் பாதையில் எப்படியாவது குழி பறித்து அவரை வீழ்த்தவேண்டும் என்று டொனி அபொட் இரகசியமாகவும் - மிகப்பெரிய வன்மத்தோடும் - திட்டம் போட்டுக்கொண்டேயிருந்தார்.

மறுபுறத்தில், பொதுவிலேயே ஆட்சியை தாங்கள் பிடிக்கவேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராமல் லேபர் திட்டமிட்டவண்ணமிருந்தது.

இவர்கள் எல்லாரையும் எதிர்த்து அரசியல் செய்யவேண்டிய நிலையில்தான் மல்கம் ரேன்புல் பயணப்பட்டுக்கொண்டிருந்தார்.

பழிவாங்கும் எண்ணத்தோடு தனக்கு எதிராக தொடர்ந்து பணியாற்றிக்கொண்டுவரும் டொனி அபொட் லிபரல் கட்சிக்குள் தனக்கு எதிராக தீவிர வலதுசாரிகள் எவரையும் அணிசேர்த்துவிடக்கூடாது என்பதற்காக மல்கம் ரேன்புல், கட்சியிலிருந்த தீவிர லிபரல்களுக்கு முக்கிய பதவிகளைக்கொடுத்து தன்வசப்படுத்துவதற்கு முயற்சித்தார். அவர்களில் முக்கியமானவர்தான் பீற்றர் ட்டடன் என்பவர்.

அவர் மிகத்தீவிரமான டொனி அபொட் ஆதரவாளர். டோனி அபொட்டிடமிருந்து மல்கம் ரேன்புல் ஆட்சியை பறித்தெடுக்கும்போதுகூட டொனி அபொட்டுக்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தார். ஆனால், அவர் போன்றவர்களை தனது பக்கம் கொண்டுவரவேண்டும் என்பதற்காக பீற்றர் ட்டடனுக்கு குடிவரத்துறை அமைச்சு என்று மிகவும் பலம்வாய்ந்த அமைச்சினை மல்கம் ரேன்புல் தூக்கிக் கொடுத்தார்.

பதவியைப்பெற்றுக்கொண்ட பீற்றர் ட்டடன் எவ்வாறு நடந்துகொண்டார்என்றுசொல்லித்தெரியவேண்டியதில்லை.

ஆஸ்திரேலிய குடிவரவுக்கொள்கையை சகல நாடுகளும் காறி உமிழாத குறையாக திட்டும் வகையில் அந்த அமைச்சினை சின்னாபின்னமாக்கினார். ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையம் வரைக்கும் நவுறு தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் விவகாரம் போனது. நவுறு தீவில் உள்ள அகதிகள் நோய், பிணி வந்து இறந்தார்கள். உள்ளூர்வாசிகளுடன் கைகலப்பு ஏற்பட்டும் இறந்தார்கள். 40 குழந்தைகள் தடுப்பிலேயே பிறந்தன. கிட்டத்தட்ட 160 சிறுவர்கள் அங்குள்ள திறந்தவெளி சிறையில் உள்ளார்கள்.

ஆனால், அந்த இரண்டாயிரத்து சொச்சம் பேரை நாட்டுக்குள் அனுமதித்துவிட்டால் நாடே இரண்டாகிவிடும் என்பதுபோல கொடூரமான கொள்கையை கடைப்பிடித்தார் பீற்றர் ட்டடன். மறுபுறத்தில், ஆஸ்திரேலியா வருடாந்தம் உள்வாங்கும் அகதிகளை குறைக்கவேண்டும் என்றார். இங்குவருகின்ற அகதிகளையும் மெல்பேர்ன், சிட்னி போன்ற முக்கிய நகரங்களில் குடியமர்த்தாமல், பொதுமக்கள் இன்னமும் குடியேற்றத்துக்கு அதிகம் உபயோகிக்காத மேற்கு ஆஸ்திரேலிய, தெற்கு ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் கொண்டுபோய் குடியமர்த்தவேண்டும் என்றார்.

படகுகளில் வந்துகொண்டிருக்கும் அகதிகளுக்கு எதிரான அவரது கர்ண கொடூரமான நிலைப்பாடு இவ்வாறிருக்க -

மறுபுறத்தில், தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களால் தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உள்ளாகும் வெள்ளையின பண்ணை மக்களுக்கு ஆஸ்திரேலியா தஞ்சமளிக்க வேண்டும் என்றார். தான் வெளிப்படையாகவே நிறவெறி பிடித்த ஆஸ்திரேலியன் என்று பிரகடனம் செய்வதற்கு பீற்றர் ட்டனுக்கு இதைவிட வேறு என்ன வழி வேண்டும்.

மல்கம் ரேன்புல்லை பொறுத்தவரைக்கும் அவருக்கு பீற்றர் டட்டனின் இந்த வன்மம் நிறைந்த அரசியல் கொள்கையும் பாதையும் தனது அரசியல் சிந்தனைக்கு முரணானதாக காணப்பட்டபோதும், லிபரல் முகாமிலுள்ள தீவிர வலதுசாரிகளை சமாளிப்பதற்காகவும் அவர்களின் ஆதரவை தன் வசம் தக்கவைத்துக்கொள்வதற்காகவும் ட்டடன் போன்றவர்களின் அதி தீவிர வலதுசாரி அரசியல் அட்டகாசங்களை பொறுத்துக்கொண்டார். கண்டும் காணாதவர் போலிருந்தார்.

போதாக்குறைக்கு உள்துறை அமைச்சு என்ற - தனக்கு சமனான அதிகாரங்களைக்கொண்ட - அமைச்சையும் பீற்றர் ட்டனுக்கு அண்மையில் கொடுத்திருந்தார்.

ஆனால், பீற்றர்ட்டடன் மறுமுனையில்டொனிஅபொட்டின்தீவிர விசுவாசியாகத்தான் தொடர்ந்தும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதையும் அவர்கள் கூட்டாக மற்றவர்களுடன் சேர்ந்து மேற்கொள்ளக்கூடிய பதவி கவிழ்ப்பு சதி எந்நேரமும்தன்னைபிரதமர்கதிரையினால்தூக்கியெறியலாம் என்பதையம் ஏனோ மல்கம் ரேன்புல் உணரவே இல்லை. அல்லது உணர விரும்பவில்லை.

இந்த நேரம் பார்த்து, அரசியலிலும் மல்கம் ரேன்புல் கொஞ்சம் கொஞ்சமாக தடுமாறத்தொடங்கியிருந்தார்.

மக்கள்கருத்துக்கணிப்பில்லிபரல்கட்சிதொடர்ச்சியாக லேபர் கட்சியிடம் அடிவாங்கத்தொடங்கியிருந்தது.

மல்கம் ரேன்புல் அமுல்படுத்துவதற்கு அவதிப்பட்டுக்கொண்டிருந்த சில அரசியல் கொள்கைகளை லிபரல்களே ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அவர் உள்ளுக்குள் லிபரல்களிடமும் வெளியே லேபரிடமும் அடிவாங்கினார். இது மக்கள் மத்தியில் அவரை பரிதாபமான தலைவராக காண்பிக்கத்தொடங்கியது.

இந்த நேரம் பார்த்து, லிபரல் கட்சியின் எதிர்காலத்தை எடைபோடுகின்ற கட்சி முதலாளிகள் இம்முறை மல்கம் ரேன்புல்லின் பல்லைபிடித்துப்பார்த்தார்கள். முன்பு டொனி அபொட் காணப்பட்ட அதேநிலைக்கு மல்கம் வந்துவிட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். இவரால் கட்சிக்கு வேண்டியதெல்லாம் நடந்தேறிவிட்டது. இனி இவர் பதவியில் நீடிக்கும் ஒவ்வொரு கணமும் கட்சிக்குத்தான் ஆபத்து. மறுபுறத்தில் லேபர் கட்சியின் கை என்றுமில்லாதவாறு ஓங்கியவண்ணமிருக்கிறது. இப்போதாவது, இவரைத்தூக்கிவிட்டு இன்னொருவரை கொண்டுவராவிட்டால், கட்சியின் நிலை அதோகதியாகிவிடும். ஆக, மல்கமுக்கு ஒரு கூரான ஆப்பு ஒன்றை செய்து செருகிவிடுவதுதான் சரி என்று திட்டம்போட்டார்கள்.

இந்த திட்டம் மறுபுறத்தில் டொனி அபொட் தனது பழிவாங்கும் படலத்தை நேர்த்தியாக தீர்த்துக்கொள்வதற்கும் சரியாக அமைந்துவிட்டது. இரண்டு ஒத்த தேவையுடைய தரப்பினர் ஒரே புள்ளியில் சந்தித்துக்கொண்டபோது மல்கமின் தலை கொய்து எறியப்பட்டது.

மல்கமின் இடத்துக்கு பீற்றர் ட்டடனை கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை மல்கம் ரேன்புல் முறியடித்தாரே தவிர, தன்னை காப்பாற்றிக்கொள்ள அவரால் முடியவில்லை. புதியவராக தற்போது பதவிக்கு வந்திருக்கும் ஸ்கொட் மொறிஸன் என்பவரும் லிபரல்களின் தீவிர வலதுசாரி முகாமிலிருந்தவர்தான். இப்போதும் அந்த முகாமில் இருப்பவர்தான். டொனி அபொட்டின் ஆதரவாளர். அவர் பிரதமராக பதவி வகித்தபோது குடிவரவு அமைச்சராக பணியாற்றியவர்.

தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றமானது லிபரல் முகாமில் உள்ள அதி தீவிர வலதுசாரிகளால் முற்று முழுதாக ஜீரணிக்கமுடியாதது என்றாலும் ஓரளவுக்கு திருப்தி தரக்கூடியதாக இருக்கக்கூடும். அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம் ரேன்புல்லை கூடாசிவிட்டு ட்டடனை கொண்டுவர வேண்டும் என்பதே ஆகும். ஆனால், ரேன்புல் தரப்பு கடைசி நேரத்தில் மேற்கொண்ட சில இராஜதந்திர முன்னெடுப்புக்களினால் அந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அனுமதிக்காமல் முறியடித்திருக்கிறது.

விளைவு, ஆஸ்திரேலியா கடந்த ஐந்து வருடங்களில் ஐந்தாவது பிரதமரை கண்டிருக்கிறது.

ஒருவரின் கோமணத்தை உருவிக்கொண்டு மற்றொருவர் ஓடுகின்ற இந்த ஒட்டுமொத்த அரசியல் அரியண்டமும் தமிழத்தில் எடப்பாடி கூட்டத்தினர் அரங்கேற்றிவந்த அதேவகையான கீழ்த்தரமான அரசியல்தான். ஆனால், வெள்ளைக்காரர்கள் செய்வதால் அதற்கு தனித்துவமான ஏதோ அர்த்தமிருப்பதுபோல எங்களில் பலர் வாயை மூடிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.



தற்போது இந்தக்கட்டுரையின் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு வருவோம்.

இந்தப்பதவி மாற்றம் அகதிகள் விடயத்தில் என்ன மாற்றத்தை கொண்டுவரலாம்?

ஸ்கொட் மொறிஸன் தனது தலைமையிலான அரசாங்கத்திலும் பீற்றர் ட்டடனையே குடிவரவு அமைச்சராக பதவியில் அமர்த்துவதற்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஆக, புதிய ஆட்சியில் குடிவரவு விடயத்தில் துளியளவும் மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

அப்படியே, இந்த ஆட்சியை மக்கள் விரும்பாமலோ அல்லது அடுத்த தேர்தல் நடைபெறவேண்டிய எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னதாக வேறேதாவது அசம்பாவிதம் நடைபெற்று உடன் தேர்தல் நடைபெற்றாலோ -

இம்முறை லேபர் கட்சிக்குத்தான் ஆட்சியை பெற்றுக்கொள்ளும் அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

இன்றைய நிலையில், லிபரல் கட்சியினரை நாட்டு மக்கள் காறி உமிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். "இப்படியொரு கேவலமான அரசியல் செய்வதற்குத்தான் உங்களை தெரிவு செய்தோமா" - என்று லிபரல் ஆதரவாளர்களே சமூக வலைத்தளங்களில் சினந்துகொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால், லேபர் கட்சி அடுத்த தேர்தலில் ஆட்சிக்கு வந்தால் அகதிகள் விவகாரத்துக்கு என்ன நடைபெறலாம்?

நிச்சயமாக, படகுகளில் வருகின்ற அகதிகள் விடயத்தில் கறாரான கொள்கையைத்தான் அவர்களும் கடைப்பிடிப்பார்கள். லேபரின் ஆட்சியில் - கெவின் ரட் அரசாங்கத்தினால்தான் - நவுறு தீவு முகாம் மீண்டும் திறக்கப்பட்டது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது.

ஆக, குடிவரவுக்கொள்கையில் வேறு விதமான மாற்றங்கள் ஏற்படுவதற்கு சாத்தியங்கள் உண்டு என்று எதிர்பார்க்கலாம். அதாவது, நவுறு தீவில் தற்போதுள்ள அகதிகளுக்கு துரிதமான ஒரு முடிவை லேபர் கொண்டுவரலாம். அதேவேளை, வருடமொன்றுக்கு ஆஸ்திரேலியாவுக்கு உள்வாங்கும் தஞ்சக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். பல்லின மக்கள் வாழுகின்ற இந்த நாட்டின் விழுமியங்களுக்கு மதிப்பை ஏற்படுத்துகின்ற வேறு பணிகளில் கவனம் செலுத்தலாம்.

ஆனால், படகுப்பயணத்துக்கு எப்போதுமே ஆஸ்திரேலியா இனிமேல் கதவுகளைத் திறந்துகொள்ளப்போவதில்லை.

● விதுசா



ஈழத்தின் நட்சத்திர கவிதாயினி "ஆழியாள்" அவர்கள் எதிரொலியுடன் கைகோர்த்திருப்பது மிக்க மகிழ்ச்சி. "ஆழியாள்" என்ற பெயர் ஈழத்தையும் அதனைத் தாண்டியும் வசீகரமான பல படைப்புக்களால் பலரது கவனத்தை ஈர்த்துக்கொண்டது என்பது தமிழ் படைப்புலகத்துக்குப் பரிச்சயமானவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். மதுபாஷினி என்ற பெயரில் ஓர் ஆங்கில விரிவுரையாளராகத் தனது தொழில்சார் பணிகளை முன்னிறுத்தியபொழுதும் "ஆழியாள்" என்ற பெயரிலான கவிதைகளும் மொழிபெயர்ப்பு ஆக்கங்களும்தான் இவரைப் பலருக்கு அறிமுகம் செய்திருக்கின்றன. திருகோணமலை-யை பிறப்பிடமாகவும் தற்போது கன்பராவை வதிவிடமாகவும்கொண்ட ஆழியாளின் எழுத்துக்களை ஆஸ்திரேலிய வாசகர்களுக்காக எடுத்துவருவதில் "எதிரொலி" பெரு மகிழ்வும் பேருவகையும் அடைகிறது.



ஆழியாள் பக்கம்

# கூற்று
# பெண்களின் குரல்– 25 வருடங்கள்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் 25 ஆண்டு கால நிறைவை (1991 - 2016) சிறப்பிக்குமுகமாகக் "கூற்று" வெளிவந்திருக்கிறது. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கடந்த 25 வருட செயல்வாதத்தின் முக்கிய பரிமாணங்களையும், தருணங்களையும் கையகப்படுத்தி அவ்வரலாற்றை ஆவண வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள் கூற்றின் பதிப்பாசிரியர்களான சித்திரலேகா மௌனகுருவும், மர்லின் வீவரும். இவர்களைவிட, அனுராதா இராஜரட்ணம், சரளா இமானுவல், இ.வினிபிரட் ஜெயசாந்தினி, விஜயலட்சுமி சேகர் ஆகிய நால்வரும் கூற்றின் ஆசிரியர் குழுவாக தம் பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள்.

"எங்கள்
மூச்சுக் காற்றுடன் இணையும் - எம்
சகோதரிகளின் சுவாசம்
கலந்துள்ள காற்றுக்கே




அர்ப்பணம்"

- என்ற விஜயலட்சுமியின் கவிதையோடு தொடங்கும் இவ்வெள்ளி மலரில் காணப்படும் விடயதானங்களின் உட்சரடாக மூன்று அம்சங்களை "ஆசிரியை கூறுவது" பகுதியில் காணலாம்.

அவை 1) ஒரு பெண்நிலை அமைப்பாக சூரியாவின் உருவாக்கச் சூழமைவும், அதன் பயணமும் 2) சூரியாவின் செயற்பாடுகள் 3) அலுவலர்களின் படிப்பினைகள், எதிர்கொண்ட சவால்கள் பற்றிய கருத்துகளும், மதிப்பீடுகளும் என சித்திரலேகா குறிக்கிறார்.

மலரினுள்ளே, "சூரியா" என்ற பெயர் எப்படி வந்தது என்ற காரணத்தை முன்னாள் அலுவலர் ரெஜி டேவிட் மூலமாக அறிந்து கொள்கிறோம். அவர் "ஒளிதரும் சூரியனின் பெண்பாலாக சூரியாவைக் கருதியதுடன் ஒளியைத்தேடும் மக்களுக்கு இது ஆழ்ந்த அர்த்தத்தைத் தரும் எனவும் நம்பினோம்" - என்கிறார்.

கூட்டு முயற்சியே சூரியாவின் இயங்குதளம் என்பதை இம் மலரில் காணப்படும் அத்தனை அனுபவப் பகிர்வுகளும், கட்டுரைகளும் நமக்குச் சொல்கின்றன. பெண்கள் கூட்டாக தமக்கான வெளிகளில் இயல்பாக இயங்குவதற்கும், தமக்கான வெளிகளைக் கண்டு கொள்வதற்கும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனமானது நுண்வெளிகளை உருவாக்கித்தருவதுடன் எதிர்கால தரிசனத்தோடு சகோதரித்துவத்தின் நீண்ட தொரு உரையாடலுக்கும் அது வழிவகுக்கிறது என்பதையே சூரியாவின் இந்த 25 ஆண்டுகால செயற்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன.

"கூற்று" முழுவதும் காணப்படும் கூட்டு முயற்சிகளும் செயற்பாடுகளும் வியக்க வைக்கின்றன. ஓவியக் கண்காட்சிகள், வில்லுப்பாட்டுகள், நடமாடும் நூலகங்களை அமைத்தல், நாடகப்பயிற்சிப் பட்டறைகள், குழுவாக நாடகங்களை உருவாக்குதல் (நிராகரிக்க முடியாதபடி), கவிதா நிகழ்வுகள் (வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றி கொள்ள), கண்ணுக்குப் புலனாகாத அரங்க நிகழ்த்துகைகள் (கனகம்மாவின் கதை), பாரமூறி விளையாட்டு, மட்டுநகர் கண்ணகைகள், நிசப்த இரைச்சல், இது எமது படைப்பு, ஒரு பிடி அன்பு, காவலம்மா போன்ற நாடக உருவாக்கங்களையும் சொல்லலாம்.

இவற்றைவிட, கலாசாரக் குழுவினர் எழுதிய கவிதைகள் "கனல்", "வெளிப்படுதல்" என இரு தொகுதிகளாகவும், பாடல்கள் "பெண்களின் குரல்" என்ற ஒலிநாடாவாகவும் வெளிவந்துள்ளன. ஜெயந்தி தளையசிங்கத்தின் "எமது கலாசரக்குழுவின் பயணம்" மங்கையின் "அரங்கம்-கொதிநிலம் தணிக்கும் ஊற்று", சித்திரலேகாவின் "ஒருபோதும் தனித்தல்ல" கட்டுரைகள் இக் கூட்டு முயற்சிகளைப் பெரிதும் பிரதிபலிக்கின்றன.

பெண் சஞ்சிகை பற்றிய குறிப்பு, முன்னாள் மற்றும் தற்போதைய சூரியா அலுவலர்களின் வாக்குமூலங்கள், அ.இலங்கேஸ்வரி, கு.கல்யாணியின் உரையாடல், வாசுகி, அனுராதாவின் உரையாடல், ஜெயசாந்தினியின் "சூரியாவின் நூலகமும், ஆவணமாக்கலும்" பகுதி, சரளாவின் "பெண்கள் மற்றும் சிறுமியருக்கெதிரான பாலியல் வன்முறைகளை எதிர்கொளல்" கட்டுரை, யமுனாவும், குழந்தை, உம்மாவும் பற்றிய சித்திரலேகாவின் அனுபவப் பகிர்வு எல்லாம் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பல்வேறுபட்ட சமூக ஆக்கச் செயற்பாடுகளை நம் கண்முன்னால் கொண்டுவருவதுடன் அவர்கள் எதிர்கொண்டதும், கொள்ள வேண்டியிருக்குமான சவால்களையும் எமக்கு உணர்த்துகின்றன.

ஒரு பொருள் பல துண்டு ஓவியங்களில் பரந்து வரையப்பட்ட "பாய்" அட்டை ஓவியத்தை அருந்ததி ரட்ணராஜ் கூற்றுக்காக வரைந்திருக்கிறார். பாய் இழைத்தல் மட்டக்களப்புப் பெண்களிடையே காணப்படும் கைவினைத்திறனாகும். இந்த ஓவியத்தில் மட்டக்களப்பினதும், பெண்களின் கதைகளினதும் வாசனையைக் கொண்டுவர முயன்றுள்ளேன் என்கிறார் அவர்.

மறைந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரும், "பெண்நிலை அரசியலையும், எமது கதைகளையும், கனவுகளையும் பகிர்ந்து கொண்ட சுனிலா அபேசேகரவிற்கு 25 வருட பெண்களின் குரல்களால் நன்றி தெரிவித்திருப்பது சாலப் பொருத்தமானதே.

பின்னட்டையில் உள்ள லோகநாயகியின் கவிதை "அப்போதுதான்" இந்த இடத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தையும், அதன் பயணத்தையும் அழகாக உருவகிக்கிறது.

"தன்னைத்தானே கிள்ளிப் பார்க்கிறாள்
நானா நானா இவள்
அப்போதுதான்
கடந்து வந்த பாதையை
நினைத்துப் பார்க்கிறாள்
காலடித் தடத்தினை"

வெள்ளிவிழாக் காணும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்துக்கும், தோழமைகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

# கொம்பூச்சா

கடந்த வருடத்திலிருந்து நண்பர்கள் கொம்பூச்சாவை உணவுப்பழக்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். பெயரே கொஞ்சம் இடக்குமுடக்காக இருக்கிறதே அது என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ள நண்பி "முவு" யைக் கேட்டேன். அது தேயிலைச் சாயத்திலிருந்து செய்யப்படும் பானம் என்று அவர் சொன்னதும் எனக்குள் உற்சாகம் பிறந்தது. "டீ" என்றால் சிலோன், சிலோன் என்றால் "டீ" என்று ஒருகாலத்தில் உலகின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் முன்னணியில் இருந்த நாடு இலங்கை அல்லவா! தேயிலையை இலங்கையிலிருந்து Ceylon Tea என்ற பெயரில் வெள்ளைக்காரர் - கிழக்கிந்தியக் கொம்பனிக்காரர் உலகமெல்லாம் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள்.

இந்தப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் - பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கு மிகவும் இன்றியமையாத மலையக மக்களின் உழைப்பால் இலங்கைக்குக் கிடைத்த - கிடைக்கும் - வருமானம் மிகக் கணிசமானது மட்டுமல்ல, இப்பயிர் சிறியதொரு நாடான இலங்கையை உலக வரைபடத்தில் முக்கியமாகக் குறித்துச் சொல்லக் கூடிய நாடாக அடையாளப்படுத்தியிருக்கிறது. பிற்காலத்தில் தேயிலையைவிட வேறு பல துயரந்தரும் விடயங்களுக்காக இலங்கை உலக வரைபடத்தில் அடையாளப்படுத்தப்பட்டதை என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

கடுந்தேத்தண்ணி, பால்த்தேத்தண்ணி என்று இருவகைகளைத்தான் சிறுவயதுகளில் ஊர்ப்பக்கம் அறிந்திருக்கிறேன். இடைக்கிடையே இஞ்சி தட்டிப்போட்ட தேத்தண்ணியும், என்றைக்கோ ஒருநாள் எதுவுமில்லாத திருவிழாவாய் ஏலக்காய் போட்ட தேத்தண்ணியும் தருவார் அம்மா.

ஆனால் ஆஸ்திரேலியாவில் இன்றைக்கு கிடைக்கும் எத்தனையோ வகைத் தேயிலைகளையும் தேநீர் வகைகளையும் நாளுக்கொன்றாகக் குடித்தால்கூட அத்தனை வகைகளையும் குடித்து முடிக்க ஒரு வருடம் போதாது போல எனக்குப்படுகிறது. அப்பாடா எத்தனை ரகம்! கொழுந்துகளாக வேண்டுமா, மொட்டுகளாக வேண்டுமா, இலைகளா, எந்தப் பருவத்து இலைகள் வேண்டும், அரைக்காமலா, அரைத்ததா, அரைத்த தாயின் எப்படி அரைத்திருக்க வேண்டும், எப்படிக் காயவைத்தது வேண்டும், எந்தத் தரத்தில் சாயம் வர வேண்டும், எந்த மலையில், எந்தப் பிரதேசத்தில் விளைந்திருப்பது வேண்டும், பந்துபோல சுருட்டியதா, முத்துப்போல உருண்டதா, ஊசிபோல நீண்டதா, இப்படித் தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டே போகலாம்.

நாம் இப்போது கொம்பூச்சாவுடன் நிற்போம்!

கொம்பூச்சாவை "நொதித்த தேநீர்" என்று சொல்லலாம். கொம்பூச்சாவின் பூர்வீகம் சீனா. பல தலைமுறைகளாக சீனாவில் இதைப் பாவித்து வருகிறார்கள். சமிபாட்டுக்கும், வயிற்றுக்கும் உகந்தது கொம்பூச்சா என்று அவர்கள் ஆண்டாண்டு காலமாக அறிந்திருக்கிறார்கள். இன்றைக்கு விஞ்ஞான விளக்கங்களுடன் கொம்பூச்சாவில் காணப்படும் probiotics எனப்படும் வயிற்றுக்கு நன்மை பயக்கும் பக்டீரியாக்களும், ஈஸ்ட் நுண்ணுயிர்களும், டீ வகை விற்றமின்கள் உண்டு என்பதையும் அதிலுள்ள antioxidants போன்றவை பற்றியும் அன்றைய காலத்தில் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் உடலுக்கு நன்மை பயக்கும் என்று பாவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு சந்தையில் இருக்கும் குளிர்பானங்கள் பலதிலும் சீனிப்பாகை அளவுக்கு மீறி ஊற்றி, செயற்கை நிறமூட்டி, இன்னும் என்ன வெல்லாமோ கலந்து, நெளிந்து வளைந்த பிளாஸ்டிக் போத்தல்களில் வைத்திருக்கிறார்கள். இக்குளிர்பானங்களை நவீன விற்பனை உத்திகளோடு சந்தைப்படுத்தி, அவற்றில் ஒரே ஒரு மிடறைக் குடித்தால் போதும் இந்த உலகமே ஸ்தம்பித்து நின்று குடித்தவரைத் திரும்பிப் பார்ப்பது போலவும் அவரின் உடல் முழுவதும் புத்துணர்ச்சியும், உற்சாகமும் கொப்பளிப்பது போலவும் பல விளம்பரங்களைப் பார்க்கிறோம். உலக வணிக சந்தையானது, மக்களின் சுவையறியும் நாவை தனதாக்கிக் கொள்ள எப்படியெல்லாமோ முயல்கிறது. அச்சந்தையின் முழு நோக்கமும் பணம்! பணம்! பணமே ஒழிய மக்களின் நலம் அல்ல.

இந்தச் செயற்கைக் குளிர்பானங்களைவிட இளநீர், பதனீர், பாணக்கம், நீராகாரம், மோர், தேநீர், பருத்திப்பால் போன்ற பானங்கள் உடலுக்கு நன்மை தருபவை. இவற்றோடு கொம்பூச்சாவையும் நாமே செய்து பழகுவோம். உணவுப் பழக்கத்தில் சேர்த்துக் கொள்ளுவோம். கொம்பூச்சாவின் நொதித்த சுவையும், மணமும் பழகப் பழகத்தான் பிடிபடும். பழகப் பழக கொம்பூச்சா இனிக்கும்!!!




MADRASBROTHERS.COM.AU

FOLLOW THE BROS @MADRASBROTHERS

மதராஸ் பீரோஸ்.

MADRAS BROS.

*Authentic:* TAMIL EATERY & BAR

*No.* 129, SMITH STREET,
FITZROY 3065.
*PH.* +61 3 9416 2767

# Blinds Screens Security Doors

*Factory Direct*



Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans

**OUR SERVICES :**

- PLANTATION SHUTTERS
- TIMBER BLINDS
- SCREEN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- ROMAN BLINDS
- SECURITY DOORS ( All Types)
- FLY SCREENS
- WARDROBE DOORS
- CANVAS AWNINGS
- SPLASH BACKS
- MIRRORS

**Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770**

Email: galalxyoz@bigpond.com

**GalaxyOZ (PVT) Ltd.** Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061

# சாம்பார் சரித்திரம்

அண்மையில் "மஹாநடி" என்ற தெலுங்குப் படத்தின் தமிழ் பதிப்பான நடிகையர் திலகம் என்ற படத்தைப் பார்த்தேன். நடிகை சாவித்திரியின் ரசிகர் பட்டாளம், அதனை ஆஹோ ஓஹோ என்று சமூக வலைத்தளங்களில் புகழ்ந்திருந்தது. சாவித்திரியின் ரசிகர்கள் 'அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே' எனப் பழைய ஞாபகங்களில் மூழ்கித் திளைத்திருக்கலாம்.

அப்படியாக எதுவும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் கீர்த்தி சுரேஸ் சாவித்திரியை அப்படியே கண் முன்னாலேயே கொண்டு வந்து நிறுத்தினார்.

தமிழில் இலக்கிய வடிவத்திலேகூட வாழ்க்கை வரலாறுகள்,தன்வரலாறுகள்முதலியனஅதிகமாகவெளியாக வில்லை. இந்த லட்சணத்தில், தமிழ்த் திரைப்படத்தைப் பற்றிக்கேட்கவே வேண்டாம். அவை இன்னமும் ஹீரோ, ஹீரோயின், வில்லன், கொமெடியன் என்ற வாய்ப்பாட்டுக்குள்ளேயே சுற்றிச் சுழல்கின்றன.

நடிகையர் திலகத்தின் ஹீரோ (ஆமாம் ஹீரோதான்!) சாவித்திரி. ஹீரோயின் கீர்த்தி சுரேஸ்! வில்லனைத் தேடிக் களைத்து, வேறு வழியில்லாமல் ஜெமினி கணேசனைப் போட்டிருக்கிறார்கள். வில்லனை ரசிகனது மனதில் தரம் இறக்குவதற்காக, மணக்க மணக்க 'சாம்பாரை' அவர்மீது அள்ளி ஊற்றியிருக்கிறார்கள்.

ஜெமினி கணேஸ் ஸ்ரீ சாம்பார் கணேசன்!

ஆனால் ஜெமினி கணேஸ், தமிழ் சினிமாவின் நல்லதொரு நடிகன். எமக்கு முந்தைய தலைமுறையின் யதார்த்த பாணி நடிகன். மகா நடிகன் சிவாஜிக்கு ஈடு கொடுத்து நடிக்க வல்ல மிகச் சிலரில் ஜெமினி கணேஸும் ஒருவர்.

நடிகையர்திலகத்தில் வெளிப்படையாகவே ஜெமினி கணேஸை, சாம்பார் கணேசனாக இகழ்கிறார்கள். ஜெமினியாக நடிக்க முயலும் துல்க்கர் சல்மான், ஒரு காட்சியில்... 'சாம்பார் தயார்! அசல் கும்பகோணம் சாம்பார்!' என்று தங்களது வீட்டின் சமையலறையில் கூவுகிறார்.

சரி இந்த இடத்திலிருந்து நாங்கள் சாம்பார் பக்கமாக ஒரு சுற்று சுற்றிவிட்டு வரலாம்!

தஞ்சாவூருடன் ஒட்டிப் பிறந்த இரட்டையான கும்பகோணம், சாம்பாரில் மட்டுமல்ல, வேறு பல விடயங்களிலும் மகா பிரசித்தி பெற்றது.

தி. ஜானகிராமன், மௌனி, எம். வி. வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு, தஞ்சை பிரகாஸ் போன்ற எழுத்தாளர்களாகட்டும், பெரும் கீர்த்தியுடைய சங்கீத வித்வான்களாகட்டும், நாதஸ்வர வித்வான்களாகட்டும், சங்கீத உற்சவங்களாகட்டும், சின்னமேளங்கள் என அழைக்கப்பட்ட, பரதநாட்டிய சிரோண்மணிகளாகட்டும் -

பழம்பெரும் கோயில்களாகட்டும் ஸ்தபதிகள், சிற்பிகள் ஆகட்டும்

மல்லிகைப்பூ போன்ற இட்லி, டிக்ரி காப்பி, (பேஸ் பேஸ்) நரசூஸ் காப்பியாகட்டும் -

கும்பகோணத்தை எந்த ஊராலும் விஞ்ச முடியாது!

கும்பகோணம், பிற்காலச் சோழர் காலத்தின் (ராஜராஜ சோழன் - த கிரேட் ) தலைநகரங்களில் ஒன்று என்பதுதான், இதற்கெல்லாம் அடிப்படை. கும்பகோணம் அந்தக் காலத்தில், குடந்தை என அழைக்கப்பட்டது. ராஜராஜசோழனது ஆட்சிக்காலத்தில் தஞ்சை தலைநகராக நிலைபேறடைந்த பின்னரும், கும்பகோணத்தின் கீர்த்தி மங்கவில்லை.

ராஜசேவை செய்த மக்கள் கூட்டம், அங்கே செறிவாக வாழ்ந்து பெருகியது. அதன் வழியாக பழம்பெரும் பண்பாட்டை அது கொண்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளாகப் பேணிப் பாதுகாத்து எமது இன்றைய தலைமுறை வரைக்கும் கடத்துகிறது.

அந்தப் பழம்பெரும் பண்பாட்டின் ஒரு அங்கம் தான் சாம்பார்!

அரசனையும், கோயில்களையும் அண்டிப் பிழைத்து வளர்ந்த பண்பாட்டுக் கருவூலங்களான இலக்கியத்துக்கும், சங்கீதத்துக்கும், பரதநாட்டியத்துக்கும், பட்டுச் சேலைக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை சாம்பாருக்கும் நாங்கள் கொடுத்தே ஆக வேண்டும்! ஏனெனில், உணவும் எமது பண்பாட்டின் ஒரு அங்கம். தவிர்க்க இயலாத மிக முக்கியமான அங்கம்!

உண்மையில், ஜெமினியை விட சிவாஜிக்குத்தான் சாம்பாருடன் பிறவித் தொடர்பேயிருக்கிறது!

நடிகர்திலகம், சிம்மக்குரலோன், செவாலியே சிவாஜி கணேசனுக்கு அல்ல, மராட்டிய சிங்கம் சத்ரபதி சிவாஜி போன்ஸ்லேயிற்கு!

சோழர்களின் தோள்வலிமை குன்றிய பின்னர் மராட்டியர்களும், தெலுங்கு நாயக்கர்களும் தமிழ்நாட்டை ஆண்டார்கள். பிறகு, மேலைத்தேசத்தவர். மராட்டியர்கள் தஞ்சையை ஆண்ட காலத்திலேதான், அவர்களது அரண்மனைச் சமையலறைகளில் சாம்பார் புகுந்தது. பின்னர், படிப்படியாக சாதாரண மக்களது வாழ்வில் கலந்து, வெகு சாதாரண உணவாக மாறி, இன்றைய சைவக் கடைகளில் பரிமாறப்படும் மரக்கறி மிதக்கும் சுடுநீராக பரிமாண வளர்ச்சி அடைந்தது.

சிவாஜி, மராட்டியத்தின் புனேயில் அரசு கட்டில் ஏறி, முகலாயர்களின் ஆதிக்கத்தை அடக்கி, ஹிந்தவி சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முயன்ற காலத்தில் அவரது தமையனாராகிய ஏகோஜி, தஞ்சாவூரில் அரசனாக இருந்தார். சிவாஜியின்



மகனான சாம்பாஜி, பெரியப்பாவை பார்ப்பதற்காக தஞ்சாவூருக்கு ஒரு தடவை விஜயம் செய்தார். அவருக்கு விசேட விருந்து தருவதற்காக அரண்மனையில் தடல்புடலாக ஏற்பாடுகள் நடந்தன.

சாம்பாஜி இளவரசர் ருசித்திராத புதிய ஒரு சமையலைச் செய்வதற்கு தஞ்சை அரண்மனையின் சமையல்காரர்கள் முயன்றார்கள். அதுவரையிலும் புழக்கத்திலிருந்த சாதாரண பருப்புக் குழம்புக்குள், பலவகைக் காய்கறிகளையும் துண்டுகளாக வெட்டிப் போட்டு அவித்துப் பாரிமாறினார்கள்.

சின்ன எஜமான் சாம்பாஜி மிகவும் ருசித்துச் சாப்பிட்டாராம். சாம்பாஜி யுவராஜாவுக்குப் பிடித்த அந்தப் புதிய சமையல் அவரது பெயரைக் கொண்டு சாம்பார் என ஆனது என்கிறது ஒரு கதை.

சாம்பாஜியே சமையல்கலையில் ஒரு நவீன நள மஹாராஜன் என்கிறது இன்னொரு கதை. சாம்பாரை அவரே-தான் உருவாக்கினாராம்!

எனவே, உண்மையான சாம்பார் வெகு ருசியாகத் தான் இருந்திருக்க வேண்டும்!

தஞ்சாவூர் பகுதியில், மீன் சாம்பார்கூட இருக்கிறதாம்!

ராஜாக்கள் நாக்குப் பழுக்கும் வரை விதம் விதமாக உண்பதிலும், உடல் புழுக்கும் வரை காமத்தில் ஊறித் திளைப்பதிலும் வல்லவர்கள்.

சமையலில் அவர்கள் வல்லவர்களாக இருப்பதில் ஆச்சரியமென்ன?

பீமனும், நளனும், சாம்பாஜியும் மட்டுமல்ல ஏனைய பல ராஜாக்களும், ஜமீன்தார்களும் சாப்பிடுவதிலும், சமைப்பதிலும் அதீத கவனம் செலுத்தினார்கள்.

'இந்தியச் சமையல்' தொடர்பான விவரணங்கள் பலவற்றை நான் பார்த்திருக்கிறேன். சொல்லி வைத்தாற் போல எல்லாமே அரண்மனைகளில் தொடங்குகின்றன! பல ஆயிரக்கணக்கான சமையல் குறிப்புக்களை எழுதி, அழகான புத்தகங்களாகத் தொகுத்து, தமது அரண்மனைகளின் படிப்பறைகளில் அவர்கள் சேகரித்திருக்கிறார்கள். ஏனைய நூல்களை விட அவைதான் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனவாம்!

செவாலியே சிவாஜி கணேசனது புண்ணியத்தில் முதலாவாது சிவாஜியை மட்டுமே நாங்கள் அறிவோம். இரண்டாவது சிவாஜி ஒருவரும் இருந்தார். அவர்தான் தஞ்சையின் கடைசிச் சுதந்திர மன்னர். அடடா... பரி-தாபம்! ஆனால், அவரது தந்தையாரான இரண்டாம் சரபோஜிக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு உன்னதமான இடம் இருக்கிறது.

வெள்ளையர்களுடன் சமாதான (சரணாகதி) உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்ட அவர். பின்னர் படிப்பதிலும், படிப்பிப்பதிலும் கவனம் செலுத்தினாராம்.

தஞ்சையில் உள்ள சரஸ்வதி நூலகத்தை ஸ்தாபித்தவர் அவரே. உலகிலுள்ள பழம்பெரும் நூலகங்களில் அதுவும் ஒன்று. அதிக அளவிலான கையெழுத்துப் பிரதிகள் அங்கே இருக்கின்றனவாம். அவற்றுள் அதிகமானவை அரண்மனைச் சமையல் குறிப்புக்கள்!

யாழ்ப்பாணத்திலும் தமிழ் அரசு இருந்தது. தமிழ் ராஜாக்களும் இருந்தார்கள். யாழ்ப்பாண அரசர்கள் நிறுவிய ஒரு நூலகம் நாயன்மார்கட்டில் இருந்தது. அதன் பெயரும்சரஸ்வதி நூலகம்! தமதுயாழ்ப்பாணவெற்றியின் அடையாளமாக, போர்த்துக்கேயர்கள் அதனை எரித்து விட்டார்கள். பின்னர் சிங்கள இனவாதிகள் எரித்த யாழ் நூலகத்திலும், யாழ்ப்பாண அரசு காலத்திலிருந்து பாதுகாத்துப் பேணப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் எரிந்து சாம்பராயின.

அவற்றுள் சமையல் குறிப்புக்களும் அனேகமாக இருந்திருக்கலாம். அவற்றுள் சாம்பாரைப்பற்றிய சமையல்குறிப்புஇருப்பதற்கானவாய்ப்புக்கள்இல்லாவிட்டாலும், ஒடியல்கூழின் சமையல் குறிப்பாவது இருந்திருக்கும்!

யாருக்குத் தெரியும்?


படித்து முடித்த தமிழர்கள், பிறகு வேறெதையும் வாசிப்பதே இல்லையே!





ரஞ்சகுமார்

# ஈழக்காற்றில் அழியாத இசைச்சிற்பி தேசியக்கலைஞன் ரமணன்





கருணாகரன்

"ஓ.... மரணித்த வீரனே... உன் சீருடைகளை எனக்குத்தா... உன் ஆயுதங்களை எனக்குத்தா... உன் பாதணிகளை எனக்குத்தா..."

ஒரு காலம் இந்தப் பாடல் எங்களுக்குள்ளே சூடான ரத்த நதியைப் பாய்ச்சியது. இதைப்போல இன்னொரு பாடல், "தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா...?".

இந்த இரண்டு பாட்டுகளும் ஈழப்போராட்டத்தில் 1980 களில் போராளிகளாக இருந்தவர்களின் மனதிலும் நினைவிலும் உயிர்ப்பூட்டும் ரத்தமாகக் கலந்திருந்தவை. அந்த நாட்களில் இந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டு காடு, மேடு, ஆறு, குளம், களம் என்றெல்லா இடங்களிலும் ஆயுதங்களைத் தாங்கியவாறு அணியாகப் போயிருக்கிறோம். ஒரு புறம் இந்தப் பாடல்கள். இன்னொரு புறத்தில் ரஷ்ய, சீன, வியட்நாமிய, லத்தீன் அமெரிக்க விடுதலைப்போராட்டக்கதைகளும், போராட்ட வரலாற்றுப் பாடங்களும். இரண்டுமே எங்களுக்குப் பக்கத் துணையாக, தூண்டிகளாக, பெருவிசைகளாக இருந்தன. சமர்க்களங்களில் தோழர்கள் வீழ்ந்தபோதெல்லாம் உயிர் உருக, பெருகி வரும் துக்கத்தையும் பாயத்துடிக்கும் கண்ணீரையும் அடக்கிக் கொண்டு இந்தப் பாடல் வரிகளை மனதிலே பாடியிருக்கிறோம். அதிலும் சில சந்தர்ப்பங்களில், "ஓ.... மரணித்த வீரனே... உன் சீருடைகளை எனக்குத்தா... உன் ஆயுதங்களை எனக்குத்தா... உன் பாதணிகளை எனக்குத்தா..." என்ற இந்தப் பாடலை சத்தமாக ஒலிக்க விட்டதும் உண்டு. அந்தக் கணங்களில் உடலும் மனமும் தீயாகிச் சுடரும். அந்தளவுக்குப் போராளிகளுடைய மனதிலும் நினைவிலும் கலந்த பாடலிது.

போராளிகளின் வாழ்வையும் உணர்வையும் வெளிப்படுத்தும் பாடல் என்பதால் மட்டுமல்ல, மிக எளிய இசையில், எளிதாகவே யாருமே பாடக்கூடிய மெட்டில், மிகச் சாதாரணமான குரலில், ஒரு போராளியே பாடுவதைப் போல இந்தப்பாடலை ரமணன் உருவாக்கியிருந்ததும் காரணம். இதிலேதான் ரமணனின் வெற்றியும் சாதனையும் இருக்கிறது.

பாடல்களைக் கேட்பதும் ரசிப்பதும் வேறு. அந்தப் பாடல்களைப் பிரதிபலிப்பாளரிடம் கலக்க வைப்பது வேறு. யாருடைய பாடலாக, யாருக்கான பாடலாக ஒரு பாடல் இருக்கிறது என்ற புரிதலோடு இசைக்குறிப்புகளை எழுதுவது ரமணனின் திறன். அப்படியான புரிதலோடு எழுதப்படும் இசைக்குறிப்புகளும் உருவாக்கப்படும் இசையும் அவற்றுக்குரியவர்களிடம் அந்தப் பாடல்களை எளிதாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். வெற்றியடைந்த பெரும்பாலான பாடல்களின் அடிப்படைக் குணமிது. இதுவே சிறந்த இசையாளரின் சாதனை. இவ்வாறு பாடல்கள் உருவாக்கப்படும்போது அந்தப் பாடல்களும் பாடல்களுக்குரியவர்களும் ஒன்றாகி விடுவர். "ஓ... மரணித்த வீரனே..." எங்களுக்குள் கலந்து கரைந்தது இப்படித்தான். இவ்வளவுக்கும் இந்தப் பாடல் பலஸ்தீனக் கவிதை ஒன்றிலிருந்து உருவாக்கப்பட்டது. பலஸ்தீனக் கவிதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, ரமணனே இதை எழுதியதாக அவருடைய இசை நண்பர்கள் குறிப்பிடுகிறார்கள். எப்படியோ ஒருபோதுமே இதை நாம் இன்னொரு சூழலிலிருந்தும் இன்னொரு மொழியிலிருந்தும் எடுக்கப்பட்ட பாட்டாக உணர்ந்ததேயில்லை. அந்தளவுக்கு ரமணன் தன்னுடைய இசைத்தல் முறையினால் இதை ஈழப்போராட்டத்தோடு இணைத்துக் கரைத்திருந்தார்.

ரமணனின் இசைக்குறிப்புகள் எளிமையானவை. ஆனால் நுட்பமானவை. நுண்ணிய கற்பனை விரிவைக் கொண்டவை. எப்போதும் சூழலின் யதார்த்தத்திலிருந்து பிறந்தவை. மெல்லிசைக்கும் மரபிசைக்கும் இடையில் ஆடும் ஊஞ்சலானவை. அவர் இசையமைத்த பெரும்பாலான பாடல்களில் இதனை எவரும் உணரலாம். "நீரடித்து நீரிங்கு விலகாதம்மா..." "பூத்த கொடி பூக்களின்றித் தவிக்கின்றது...." "மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்...." போன்ற பாடல்களைக் கேட்டவர்களுக்கு இது இன்னும் எளிதிற் புரியும்.

மிகச் சாதாரணமானதாகத் தென்படும் இசைக்கோலங்களின் வழியே மிக ஆழமாக ஊடுருவிச் சென்று கேட்போரிடத்திலே ஊறிவிடும் நுட்பம் ரமணனின் திறன். இதனால்தான் தொகையில் குறைவான பாடல்களைத் தந்திருந்தாலும் இசை நினைவில் பெரும் சிகரமாகி நிற்க ரமணனால் முடிகிறது.

1980 களில் இளைய கிற்றார் இசைக் கலைஞராக இசைக்குழுக்களில் தோன்றியவர் ரமணன். அன்றைய இசை ரசிகர்களை பேராச்சரியமாக வியப்பூட்டிப் பிரமிக்க வைத்தார். இசைநுட்பத்தோடு தோற்றத்திலும் கவர்ச்சிகரமாக இருந்த ரமணன், பிறகு "யாழ் ரமணன்" எனத் தனியான இசை அமைப்பாளரானார். ரமணன் தனியாக இசைக்குழுவை (யாழ் ராஜன்ஸ்) நண்பர்களோடு இணைந்து பொறுப்பேற்றபோது அவருக்கு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பெரிய வரவேற்பிருந்தது. அதற்கு முன் ராஜன்ஸ் இசைக்குழு பொறியியலாளரும் இசைக்கலைஞருமான குணசேகரம், பாடகர் கே.எஸ்.பாலச்சந்திரன் (இவர் போராளிப் பாடகர் மேஜர் சிட்டுவின் சகோதரர்) ஆகியோரின் ஆளுகையின் கீழிருந்தது. பின்னாளில் ரமணன் அதைப் பொறுப்பெடுத்தார். அப்படியே இலங்கை வானொலியில் புகழோடு சிறந்திருந்த அப்துல் ஹமீத் தொகுத்து வழங்கிய "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சியில் மோகன் - ரங்கன் ஆகியோருடன் இணைந்து கிற்றார் வாசித்து மேலும் அறியப்பட்டார்.

ஆனாலும் ரமணனை நான் நேரில் சந்தித்தது 1987 லேயே. மேடைகளில் தூர நின்று பார்த்து ரசித்த ரமணனை 1987 இல் சந்தித்து "சில பாடல்களுக்கு இசை அமைக்கலாமா" - என்று கேட்டேன். "கவிதைகளைத் தாருங்கள். முயற்சிக்கலாம்" - என்றார். அப்பொழுது அவர் பலஸ்தீனக் கவிதைகள் சிலவற்றுக்கு இசைக்குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தார். அதிலொன்றே ரமணனுக்கு அழியாப்புகழ்வரத்தைப் பெற்றுத்தந்த "ஓ.... மரணித்த வீரனே... உன் சீருடைகளை எனக்குத்தா... உன் ஆயுதங்களை எனக்குத்தா... உன் பாதணிகளை எனக்குத்தா..." - என்ற பாடல். ஆனால், இந்தப் பாடலை பிறகு 1990 களில் மீளச் செம்மையாக்கி வெளியிட்டிருந்தார் ரமணன் என்று ஞாபகம். என்னுடைய கவிதைகளும் பாடல்களும் ரமணனிடம் நீண்டகாலமாக இருந்தன. பிறகு அவற்றைச் சில காரணங்களால் பாடல்களாக்க முடியாமல் போய்விட்டது. ஆனாலும் ரமணனைச் சந்திக்கும் போதெல்லாம் அவர் அவற்றைப் பற்றி நினைவுபடுத்திப் பேசுவார். சில பாடல்களுக்கான இசைக்குறிப்புகளையும் எழுதி வைத்திருந்தார். ஏனோ தெரியவில்லை. அவரும் அவற்றைப் பாடல்களாக்கவில்லை. நானும் அவற்றைப் பாட்டுகளாக வெளியிட முயற்சிக்கவில்லை. காலம் இன்று எல்லாவற்றையும் தூர்த்து மூடி விட்டது.

ரமணன் தான் தேர்ந்தெடுத்த கவிதைகளுக்கும் வேறு கவிஞர்கள் எழுதிய பாடல்களுக்கும் இசை அமைத்துக் கொண்டிருந்தார். மேடைகளிலும் இசைக்கச்சேரிகளை நடத்திக் கொண்டிருந்தார். இடைக்காலத்தில் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கே இசையமைப்பாளர் தேவாவுடன் இணைந்து சில வேலைகளைச் செய்ததாகத் தகவல். ஆனாலும் அவருக்குத் தனியடையாளத்தைத் தந்தது போராட்டப்பாடல்களே. போராட்டவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இசைக்கோலங்களை ரமணன் எப்போதும் தன்னிச்சையாக உருவாக்கிக் கொண்டேயிருந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் படிக்கிறபோதே ரமணனுக்கு இசையில் ஈடுபாடுண்டு. யாழ்ப்பாணத்தில் இசையமைப்பாளர் கண்ணனிடம் (கோபாலகிருஸ்ணன்) கிற்றார் படித்தார். அப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிற்றாரில் புகழ்பெற்றிருந்தவர்கள் சகாதேவன், மகிமைநாதன், அருமைத்துரை, திருக்குமார், வின்சன், சீலன், பேணாட், ரங்கன், மாணிக்கவாசகர், சம்பந்தன், சுந்தர் ஆகியோர். ஆனாலும் திருக்குமாருடைய கிற்றார் இசையே ரமணனுக்குப் பிடித்தது. இதனால் தொடக்கத்தில் திருக்குமார் பாணியிலேயே கிற்றாரை வாசித்தார். பிறகு தனக்கென ஒரு தனிப்பாணியை உருவாக்கிக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணன் கோஷ்ரி, அருணா இசைக்குழு, கலாலயா இசைக்குழு, ரங்கன் இசைக்குழு, மண்டலேஸ்வரன் இசைக்குழு எனப் பல இசைக்குழுக்கள் அமர்க்களமாக இயங்கிவந்த காலகட்டம் அது. இவற்றில் பல இசைக்கலைஞர்கள் இணைந்திருந்தனர். ஏராளம் பாடகர்களும் பாடிக் கொண்டிருந்தனர். ஈழத்தில் மெல்லிசைப் பாடல்கள் எழுச்சியடைந்த காலமும் இதுவே. இதில் பின்னாளில் சுண்டுக்குழி ராஜன்ஸ் இசைக்குழு ஒன்றாகியது. சுண்டுக்குழி ராஜன்ஸ் இசைக்குழுவிலேயே ரமணனின் பங்களிப்புகள் கூடுதலாக இருந்தன.

1990 களிலிருந்து புலிகளின் குரல் வானொலி, கலை பண்பாட்டுக்கழகம், நிதர்சனம், புலிகளின் பெண்கள் அணி போன்ற பல பிரிவுகள் உருவாக்கிய பாடல்கள், குறும் படங்களுக்கும் ந.கேசவராஜனின் "பிஞ்சுமனம்" மற்றும் "திசைகள் வெளிக்கும்" உள்ளிட்ட முழுநீளப்படங்கள் போன்றவற்றுக்கும் இசையமைத்திருக்கிறார் ரமணன். இதற்கப்பால் தனி இசை அல்பங்களையும் உருவாக்கியுள்ளார்.

இப்படியே முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசையில் வாழ்ந்த ரமணன், ஈழத்தில் ஆயிரக்கணக்கான இசை அரங்குகளை ஆட்சி செய்தார். ஈழத்தின் மூத்த இசையாளர்கள், ஒளி, ஒலிபரப்புத் துறை கலைஞர்கள் எனப் பன்முக ஆளுமைகளுடன் இணைந்து இசைப் பயணத்தைச் செய்து, தன்னடையாளத்தையும் இசைப் பயன்களையும் உருவாக்கியிருக்கிறார். தன்னுடைய இசைக்குழுவில் மட்டுமல்லாது, வேறு இசைக்குழுக்களிலும் இயங்கிய ரமணன் ஒரு சட்டவாளர். ஊடகவியலாளர். ஆனாலும் அவரை உலகம் அறிந்தது இசையின் வழியேதான். இசையில்தான் ரமணன் வாழ்ந்தார். இசையிலேயே ரமணனின் அடையாளமும் நினைவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இனியும் அப்படித்தான்.

"ஓ... மரணித்த இசைஞனே... உன் இசைக்குறிப்புகளை எனக்குத்தா... உன் இசைக் கருவியை எனக்குத்தா... உன் பாடல் வரிகளை எனக்குதா..."



'எதிரொலி'யின் சிறுகதைப் பகுதியில் இந்த மாதம் வெளியாகியுள்ள படைப்பு கிஷோகருடையது. கிஷோகர் இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த துடிதுடிப்பான இளைஞர். முகநூலில் நூற்றுக்கணக்கில் விருப்பக்குறிகளை அள்ளிச்சுருட்டிக்கொள்ளும் பதிவாளர். சமூக வலைத்தளவாசிகளின் கதாநாயகன் என்று கூறினாலும் தப்பில்லை. அப்படியொரு சரளமான எழுத்துக்கு சொந்தக்காரர். பல்வேறு விடயங்களையும் முகநூலில் தொடர்ந்து எழுதி வருபவர். மொரட்டுவ பட்டதாரி. தற்போது ஆஸ்திரேலியாவில் மேற்படிப்புக்காக வந்திருப்பவரை, ஆஸ்திரேலிய படைப்பாளியாக அவர் மாறியிருப்பதை நினைவூட்டி எதிரொலிக்கான கதையொன்றை அவரிடம் உருவியெடுத்திருக்கிறோம். அருமையான புனைவொன்றினை தனக்கே உரிய பாணியில் வெளுத்து வாங்கியிருக்கிறார். படித்துப்பாருங்கள்.



# நல்லாயனின் ஆடு

ஆடாக இருப்பது மகா கேவலம். எனக்குத் தெரிந்து யுகம் யுகமாக ஆடாக இருப்பதை குறித்து நான் வெட்கமும் கிலேசமும் அடைந்து அதையே கடும் உதைகளாகவும் பலத்த "மே..மே.." களாகவும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறேன் என்றே நினைக்கிறேன். அந்த யுகங்களின் தொடர்ச்சியே இப்போது நான். ஆனாலும் ஆடாக இருப்பதன் வெட்கமும் அவமானமும் கலந்த உணர்வுக் கலவையை சந்தேகமே இல்லாமல் யுகங்கள் கடந்து காவிக்கொண்டிருக்கிறேன். ஆடாகப்பிறந்ததைக்கூட மன்னிக்கலாம். ஆனால் இந்த ஆட்டு வாழ்க்கை மகா மட்டமானது. அயோக்கியத்தனமானது. கிஞ்சித்தும் தன் மட்டில் சுவாரசியங்களைப் புதைத்து வைத்திருக்காத சலித்த வாழ்க்கை இது.

மனித குலம் வகுத்துக்கொண்ட காலையையும் மாலையையும் கணக்கில் கொண்டு பட்டியில் உலாத்தச் சம்மதித்தமையே ஆடுகள் மேல் எனக்கு இருக்கும் பிரதான வெறுப்பாக இருக்கலாம். ஆடாக இருப்பதால் அதற்கும் ஒழுகவேண்டியிருக்கிறது. சுய புத்தி இல்லாத மட்டமான ஆட்டு வாழ்க்கை.

சுத்தம் கொஞ்சமும் கிடையாதது ஆட்டுவாழ்க்கை. மிக மோசமாக நாறும் ஆட்டுப்பட்டிகளில் அங்கேயே மூத்திரம் பெய்து, புழுக்கை பேண்டு, காய்ந்தது பாதி காயாத பாதியாக கிடக்கும் சொந்த மலக் குவியலில் தொம்மென்று விழுந்து தூங்கும் வாழ்க்கை. அந்த நாற்றம் என்னில் ஏறிக்கொண்டு என்றைக்குமாக என்னில் தங்கிகொண்டது குறித்தும் ஆட்டு வாழ்க்கையை வெறுத்தேன்.

ஆடுகளின் இந்த சுத்தமில்லாத தனத்தால் நான் கடும் கோபத்துக்கு ஆளாகியிருக்கிறேன். உண்மையில் இப்போதும் கோபமாக இருக்கிறேன். அதனாலேயே சக ஆடுகளை முட்டித்தள்ளுவேன். கீழே விழுத்தி மிதித்துச் சவட்டுவேன். முரட்டு ஆடு என்று என் இடையன் என்னைப் பிரித்து தனியாக அடைத்துவைத்தான். அதுவும் ஒரு சவுகரியம். இந்த கெலிட்டு ஆடுகளின் சாங்காத்தமே இல்லாமல் தனியாக ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்தேன்.



அடைத்து வைக்கப்படுதலையும் நான் வெறுக்கிறேன். ஆடாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக அடைபடுதல் உச்சக்கட்டமான வன்முறை.

அதோ! அங்கே பரந்து விரிந்து பிரபஞ்சம் அனைத்திற்குமாக நீண்டுகிடக்கின்ற மலைகள் எனக்கும் சொந்தம். அதன் ஒவ்வொரு சரளைக் கற்களையும் உருட்டி மிதிப்பதற்கும், தள்ளி விளையாடுவதற்கும் பூரண உரிமை எனக்கும் உண்டு. அங்கே குழுமியிருக்கும் காட்டு ஒலிவ் செடிகளின் இலைகள் எனக்குமானது. அடைபடுதல் கொடுமையானது. வஞ்சகமாக சிந்திக்கத் தெரிந்த புத்தியும் குரூர சிந்தனையும் இருப்பதால் மனிதனால் எங்களை அடைத்து வைத்துவிட முடிகிறது. அதை மனிதர்கள் பகுத்தறிவு என்று கூறிக்கொள்வதைக்கேட்டு பெருத்த "மேஹேஹேஹேஹேஹே" போட்டு கெக்கட்டிச் சிரிப்பேன். நான் புணர்ச்சிக்கு அலைவதாக நினைத்து என் இடையன் தேவதாரு மரத்தின் தடியால் என்னை அடித்து விரட்டுவான். ஆனால் வேடிக்கையாக மனிதர்கள் இன்னொரு மனிதனிடம் அடிமையாக இருப்பதை வெறுக்கிறார்கள். அதற்கு எதிராக சங்கம் அமைக்கிறார்கள். போராடுகிறார்கள்.

மனிதனிடம் அடைபடுவதற்காகச் சரணடைந்த என் மூதாதையர்களையும் வெறுக்கிறேன். அவர்களால் ஏன் போராடமுடியாமல் போனது என்று சிந்தித்தே பெரும்பாலான என் பகற்பொழுதுகள் கழிந்துபோகும். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆடுகள் மத்தியில் சுதந்திர உணர்வோடு எழுந்த தனி ஆடுகளையும் மனிதர்கள் 'முரட்டு ஆடுகள்' என்ற முத்திரையோடு தனித்து பட்டியில் அடைத்தார்கள். அந்த ஆடுகள் பிறகு ஒருநாள் ஞாயிறு பொதுச் சந்தையில், கூச்சல்களோடும், குடிபோதையிலும் கத்திக் கூப்பாடு போட்டு கொண்டிருந்த மனிதக் கூட்டத்தின் மத்தியில் வேறேதோ பட்டியில் புரட்சி செய்த இன்னொரு ஆட்டோடு அவை முட்டிக்கொண்டன. அந்த மோதலுக்கு மனிதர்கள் பந்தயம் கட்டினார்கள். எங்களை வைத்தே எங்கள் சுதந்திர தாகத்தை மனிதன் இப்படித்தான் அடக்கிகொண்டிருக்கிறான். இரத்த வெள்ளத்தில் இறந்து போன புரட்சியாளனை சமைத்து உண்டார்கள். மனிதர்களைப் போலவே ஆடுகளுக்கும் தமது சுதந்திரம் குறித்த தெளிவு இல்லை. அவை சக போராட்ட வீரனைக் கண்டால் தனது பிரதான எதிரியான மனிதனை மறந்து தன் சகாவை முட்டித்தள்ளுவதிலேயே குறியாக இருந்து கால காலமாக ரத்த வெள்ளத்தில் சாகின்றன. ஆனால் நான் அப்படியாக சாகப்போவதில்லை. அது போலவே நான் ஆடுகளுக்கு சுதந்திரமும் விடுதலையும் வாங்கித்தரப் போவதில்லை. விடுதலை என்றும் சுதந்திரம் என்றும் ஆடுகளிடம் பேச முடியாது. பேசினால் அவைகள் அத்தி மரத்தின் குழைகளை சப்பியபடியே என் முகத்தின் முன்னால் மூத்திரம் பெய்யும். ஆனால் நான் சுதந்திரமான ஆடு ஆகுவேன். என் விடுதலையை தேடிப்போய் கொண்டாடுவேன்.

நான் ஒரு முரட்டு ஆடு என்பதில் என் இடையன் பெருமைப்பட்டான்.

நான் தனியே பட்டியில் அடைபட்டிருந்தபோது என் வாளிப்பான உடலைக் கண்ட வேறு இடையர்கள் தங்கள் பட்டியில் உள்ள இளம் மறிகளுடன் இணைசேர என்னைக் கேட்டார்கள். சில நாணயங்களை வாங்கிக்கொண்டு என் இடையன் என்னை அவர்களுடன் அனுப்பினான். அந்த சுற்றுவட்டாரத்தில் இருந்த திணெவெடுத்த அத்தனை பெட்டை ஆடுகளுடனும் புணர்ந்தேன். என் இடையனும் என்னை வாடகைக்குப் பெற்ற இடையர்களும் நான் கொடுத்துவைத்த ஒரு ஆடு என்றார்கள். எனக்கு அதிக யோனிகள் கிடைத்தது குறித்து நான் மிகுந்த அதிஷ்டக்காரன் என்றார்கள்.

ஆனால், மனிதர்களின் எண்ணங்கள் மட்டமானவை. அவை எப்போதும் மனிதர்களைப் போலவே சிந்திக்கின்றன. ஒரே வட்டத்தில் இருந்து அவை வெளியே வருவதே இல்லை. ஒரு குருவியைப் போல சிந்திப்பதற்கும் கழுதைகளைப் போல சிந்திப்பதற்கும் மனிதன் எப்போதும் தவறியே வந்திருக்கிறான். மனித மனநிலையில் இருந்து குருவியைப் புரிந்துகொள்ளவே முடிவதில்லை. ஆடுகளையும் அப்படித்தான். மனிதர்கள் தாங்கள் சம்பந்தப்படாத விடயங்களில் தங்களின் நிலையில் இருந்து யோசிக்க ஆரம்பிக்கும்போது பிரச்சினை வருகிறது. அவன் அரக்ககுணம் கொண்டவன் ஆகிறான். சாத்தானைப் போல நடந்துகொள்கிறான். எப்போதும் தன் தரப்பில் இருந்து உலகத்தைக் காணுவது துரோகம் என்பதை அவன் அறிந்திருப்பதே இல்லை.

பெண் சுகம் எனக்கு பிடித்திருந்தது உண்மைதான். எப்போதாவது ஒரு நாள் நான் சுதந்திரம் ஆனபின் என்னை மிகவும் நேசிக்கும் - என்னால் மிகவும் நேசிக்கப்படும் - ஒரு பெண் ஆட்டைக் கண்டுபிடித்து அடர்ந்த கற்பக மரங்களுக்கிடையில் கூட்டிச்சென்று சிருங்காரிக்க கனவு கண்டிருந்தேன். அந்த கற்பகமர சோலைகளுக்குள் என் வம்சத்தை விருத்தி செய்வேன். கழுதைப் புலிகளும் மலைச் சிங்கங்களும் அங்கே வரும். எங்களைத் தாக்கும். நானோ அல்லது என்னைச் சார்ந்த யாரோ இறப்போம். ஆனால் நாற்றமெடுக்கும் எந்தப் பட்டிகளிலும் அவலமாய் சாகாமல் - எங்கள் உடலை மிருகங்கள் தின்னத்தக்கதாக - கொடும் கொலையால் திறந்திருக்கும் எங்கள் மருண்ட பெரும் கண்கள் சுதந்திரமான பரந்த ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்.

மனிதர்கள் வெட்கங்கெட்டு நான் வெறிகொண்டு புணர்வதை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் இன்னொரு பெண் ஆட்டை புணரும் நோக்கில் அவள் முதுகில் என் முன் காலை வைத்து ஏறினேன். என்னை வாடகைக்கு வாங்கிய இடையன் அவசரமாய் ஓடிவந்து தன் கையில் இருந்த களியால் என்னை அடித்தான். அந்த பெட்டை ஆடு அவனது விருப்பத்துக்குரிய ஒன்றாக இருந்தது. அவனது மனைவி ஊரில் இல்லாத சமயத்தில் எல்லாம் அவன் அந்த பெண் ஆட்டைப் புணர்ந்தான். ஆடு மேய்ச்சலுக்கு போயிருந்தால் மனைவியைப் புணர்ந்தான்.

நானும் என் சுற்றமும் என் பட்டியிலிருந்த அத்தனை ஆடுகளும் வெள்ளாடுகளாக இருந்தோம். ஆனால் எப்போதுமே செம்மறிகள் போல நடந்துகொண்டோம். எங்களைவிடவும் செம்மறிகள் பாவமாகவும் மானங்கெட்ட இனமாகவும் இருந்தன. ஆனால் மிகுந்த கர்வத்துடன் அவைகள் நடந்துகொள்ளுவதைக் கண்டிருக்கிறேன். செம்மறிகள் புதிய இடையனின் காலை நக்குகின்றன. 'லொள் லொள்' என்று நாய்கள் போல குரைத்து நன்றி விசுவாசம் காட்டுகின்றன. இடையர்களுக்கு வெள்ளாடுகளை விடவும் செம்மறிகளை மிகவும் பிடித்துப்போகின்றது. செம்மறிகள், செம்மறிகள் போல நடந்துகொள்கின்றன.

இப்போது வெள்ளாடுகளும் செம்மறிகள் போல நடந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. கொஞ்சமும் சுரணையே இல்லாத மூத்த ஆடுகள் அதை ராஜதந்திரம் என்றன. எங்கள் இனம் காட்டில் சுதந்திரமாக அலைந்தபோது இருந்த விடுதலை உணர்வு மரித்துப் போனது குறித்தும், அடிமையாக இருப்பதற்கு முழுவதுமாக தம்மைக் கையளித்து அதற்கு சோடனையான வேறு பெயர்களை இட்டு தம்மையும் தம் இனத்தையும் ஏமாற்றிக்கொண்டிருக்கும் ஆடுகள் குறித்து கோபமும் கவலையும் அடைந்தேன்.

சில சமயங்களில் எனக்கு கனவு வரும். அந்தக் கனவுகளில் நான் ஒரு மனிதனாக இருப்பேன். தாடியும் மீசையும் தொப்பியும் கன்னக்குழி சிரிப்புமாக இருக்கும் அதிசிறந்த வீரனாகவும் விடுதலை உணர்வாளனுமாக இருந்தேன். பிறகு ஒரு நாள் சக மனிதர்களாலும் நண்பர்களாலும் சொந்த இனத்தாலும் வஞ்சிக்கப்பட்டு வாழத்தகுதி இல்லாத கரடுகளுக்கும் நகரின் ஒதுக்குப் புறங்களுக்கும் விரட்டப்பட்டேன். அங்கே பசிபொறுக்காமல் குனிந்து இருந்து புல்லை மென்றேன். அப்போது என் உதடுகள் முரட்டுதனமானதாகவும் பற்கள் பெருத்தும் உருமாறின. ஒழிந்துகொள்ள ஏதுவாக இருந்த பாறை இடுக்குகளை எதிர்கொள்ள வசதியாக என் கைகளும் கால்களும் இறுகி அவற்றில் குளம்புகள் தோன்றின. எந்தக் குலத்துக்காக போராடினேனோ எவரின் விடுதலைக்காக குரல் கொடுத்தேனோ அவர்கள் எல்லாம் இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கிவிடுகின்ற குளிர்காலத்தில் நான் தேவதாரு மரங்களின் அடியில் வெடவெடுத்து நடுங்கிக்கொண்டிருப்பேன். அதற்கு அடுத்துவந்த குளிர்காலத்துக்கிடையில் என் உடலை ரோமம் போர்த்தியது. இப்படியாக நான் ஆடாக மாறிப்போனேன். நான் குறித்த குழப்பங்கள் எப்போதும் என்னை துரத்திக்கொண்டே இருந்தன.

(23ஆம் பக்கம் பார்க்க)



எதிரொலி ETHIROLI



# பித்தப்பை கற்கள் சரிசெய்ய முடியும்




"வருமுன் காத்தலே மிகச் சிறந்த வைத்தியம்" - சித்தர் வாக்கு

மேல்வயிற்றில் வலி மற்றும் அந்த வலியானது முதுகு இடுப்பு வரை பரவுதல், செரிமானக் கோளாறுகள், நெஞ்சு எரிச்சல், வயிறு உப்பிசம் போன்ற குறிகுணங்கள் இருப்பதால் பித்தப்பை கற்களாக இருக்க வாய்ப்புகள் உண்டு. ஆனாலும் Ultva sound பரிசோதனை முறையின் மூலமாக கற்களின் அளவு மற்றும் அது தங்கியுள்ள இடம் அனைத்தையும் தெளிவாக கண்டறிய முடியும்.

கொழுப்பு சேர்ந்த உணவுகளை அடிக்கடி சாப்பிடக்கூடிய நபர்கள் மற்றும் நொறுக்குத் தீனியாக Chips போன்றவைகளை சாப்பிடக் கூடிய சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பித்தக்கற்கள் உருவாக வாய்ப்பு அதிகம்.

உடல் எடையை கட்டுக்குள் வைத்திருத்தல் மிக அவசியம் ஏனெனில் அதிக உடல் எடையும் இதற்கு முக்கிய காரணியாக உள்ளது.

நம்மில் பலபேர் உடல் எடையைக் குறைப்பதாக கூறி பட்டினி இருத்தல், உணவின் அளவை (crash diet) அதிரடியாகக் குறைத்தல் போன்ற செயலைச் செய்வார்கள் இதன் காரணம் அதிக பித்தநீர் சுரப்பு உண்டாகி கற்களாக மாற வாய்ப்பு உண்டு.

பெண்களைப் பொறுத்தவரை அடிக்கடி விரதம் என்ற பெயரில் பட்டினி கிடந்து பித்தப்பை கற்களை உண்டாக்கி கொள்வார்கள்.

சித்தமருத்துவத்தில் உடல் சூடு அதிகமாதலை பித்தம் என்று குறிப்பிடுவோம். அதனால் உடல் சூட்டைக் குறைக்க வாரம் ஒருமுறை சீரகம் சேர்ந்த தைலம் அல்லது சுத்தமான நெய் இவற்றை தேய்த்து தலைமுழுக வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வர பித்தஆதிக்கத்தின் தன்மை குறைந்து கற்கள் கரைய வாய்ப்புக்கள் அதிகம்.

மன அழுத்தம் (stress) எப்போழுதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பவர்கள் பித்தப்பை கற்கள் இருக்கிறதா என பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

வலது பக்க நெஞ்செலும்புக்கு கீழே உள்ள ஈரலில் சுரக்கக்கூடிய பித்தநீரை வடிவமாக சேமித்து வைக்கின்ற இந்த அழகிய சிறு பித்தப்பையில் உள்ள பித்தநீர் கற்களாவோ அல்லது திட கொழுப்பாகவோ (Sludge) மாறுவதற்கு நமது உணவு முறையே காரணமாக அமைந்து விடக் கூடாது. ஏனென்றால் நாம் சாப்பிடக் கூடிய உணவு அமிர்தமாகவே இருந்தாலும் கூட இந்த பித்தநீர் சரிவர செரிக்கவில்லையென்றால் உணவுகள் சத்துக்களாக மாற்றப் படாமல் போய்விடும் அதனால் அறுவைசிகிச்சை செய்து எந்த உறுப்பையும் அகற்றி எடுப்பதற்கு முன்னால் இந்த பிரச்சினையைப் பற்றி ஆராய்ந்து தெளிதல் வேண்டும்.

நம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியம் அதனால் கற்களின் அளவானது 1.2 CM அளவுக்கு மேல் இருந்தால் மட்டுமே அறுவை (Surger) சிகிச்சையை பற்றி சிந்திக்க வேண்டும் என்பது நியதி சிறுசிறு பலகற்களை மூலிகை மருத்துவத்தால் கண்டிப்பாக சரிசெய்து விட முடியும். ஆனால் சதைக் கட்டிகளாக (Polyps) இருந்து மற்றும் சர்க்கரை நோயும் சேர்ந்து இருந்தால் உடனடி சிகிச்சை தேவைப்படும்.

80% பித்தப்பை கற்கள் அதிகப்படியான கொழுப்பின் காரணமாக உண்டாகின்றன. அதனுடன் 20% பித்தஉப்புகளும் சேர்ந்திருக்கும் அதனால் இதை எளிதாக வெளியேற்ற உணவு முறை மாறுபாடு மிக அவசியம். முதலில் நார்ச்சத்துக்களை பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகளவு உணவுப்பட்டியலில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நார்ச்சத்துக்கள் அடர்த்தியான மற்றும் கடினமான கொழுப்புக்களை கரைக்க கூடிய தன்மை வாய்ந்தவை. முக்கியமாக கீரைகள், அப்பிள் பழம், பீட்ருட், கரட், வெள்ளரிக்காய், தர்பூசணி, முள்ளங்கி, வாழைத்தண்டு சாறு, பார்லி கஞ்சி மிகச் சிறந்த வகையில் பித்தக்கற்களை வெளியேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

Apple cider vinegar சீன மருத்துவத்தில் உபயோகப் படுத்தப்படும் மிகச் சிறந்த மருந்து இதனை 2 டீஸ்பூன் அளவு பெறும்வயிற்றில் உணவுக்கு முன்பாக காலை, மாலை இருவேளை ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து சாப்பிட கற்களின் கடினத்தன்மையை மிருதுவாக்கி வெளித்தள்ளும்.

எவை உள்ள எலுமிச்சை பழத்தில் pectin என்ற இயற்கை நார்ச்சத்து பித்தக்கற்கள் உண்டாகாமல் தடுக்கும்.

பித்தப்பை சதைக்கட்டிகள் (polys) புற்றுநோய் கட்டியாக மாற வாய்ப்புகள் அதிகம். அதனால் அலட்சியம் செய்யாமல் பரிசோதனை செய்வது அவசியமாகும்.

இந்த பிரச்சினைக்காக சித்த மருத்துவரை அணுகும் போது அவர்கள் செய்யக்கூடிய முதல் மருத்துவம் எண்ணெய் குளியலாகத் தான் இருக்கும். ஏனெனில் எண்ணெய் குளியல் (மூலிகைகள் கலந்து செய்யப்பட்ட எண்ணெய்) பித்தத்தை அதாவது உடற்சூட்டை குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. அதனால் பித்தம் குறைந்தவுடன் கற்களை வெளியேற்றுவத்கான நீர்முள்ளி, கரிசாலை, சிறுபீளை, கீழாநெல்லி போன்ற மருந்துகளை கொண்டு ஈரலையும் வலுப்படுத்தி சிகிச்சையை தொடர்ந்து செய்து வந்தால் 3 மாதங்களில் பித்தப்பை கற்கள் நீக்குவத்கான தீர்வை நோக்கி நகரலாம்.

3 முதல் 3.5 litle தண்ணீர் குடித்தல் மிக அவசியம் இது கரைக்கப்பட்ட கற்களை வெளியேற்ற உதவும்.

இரவு வெகுநேரம் விழித்திருத்தல் பித்தத்தை அதிகரிக்கும். அதனால் ஆழ்ந்த 8மணி நேர தூக்கம் மற்றும் நடைபயிற்சி இவை அனைத்தும் கற்கள் வராமல் தடுக்கும்.

மூச்சுப்பயிற்சி மனஅழுத்தத்தை குறைத்து ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். மேலும் பித்தக்கற்களை குணப்படுத்த தேவையான மூச்சுப்பயிற்சியை கற்று அதனை தினமும் 3 வேளை உணவுக்கு முன் செய்து வருதல் அவசியம்.

சர்க்கரை, எண்ணெய், மற்றும் வாயு சேர்ந்து உணவுப் பொருட்களை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

ஆரோக்கியமான உணவுகளை தேடி சமைத்து சாப்பிடுவதால் ஆயுள் கூடும்.

## நல்லாயனின் ஆடு

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் விடுதலை அடைவது என்ற ஒரே நோக்கம் மட்டும் தேவாலயக் குருவின் வெண்ணிற அங்கியில் பட்டு உறைந்து போய்விட்ட ஆட்டு இரத்தம் போல என்றைக்குமாக தங்கியேவிட்டது.

பிறகு ஒருநாளில் எங்கள் பட்டிக்கு புதியதாக ஒரு இடையன் வந்தான். நீண்ட சுருள் கேசமும் தாடியும் ஓங்கு தாங்கான உடலையும் கொண்டிருந்தான். ஆடுகள் குறித்த அவனது பார்வையின் கோணங்கள் மற்ற இடையர்களை விடவும் வேறு மாதிரியாக இருந்தன. அவன் எங்களை அணைத்து முத்தமிட்டான். எங்கள் மேல் பரிவு உள்ளவன் போல நடந்துகொண்டான்.

எங்களை நல்ல மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்துப் போனான். தித்திக்கும் நீர்வருகின்ற சுனைகளுக்கு அழைத்துப் போனான். எங்கள் பட்டியில் இருந்த ஆடுகள் அத்தனையும் நன்றாக தின்று கொழுத்தன. நானும் அப்படியே ஆனேன். பட்டியில் மிகுந்த சந்தோசம் நிலவிற்று. ஆடுகள் என்றைக்குமாக மீட்கப்பட்டதாக பட்டிக்குள் கொண்டாட்டக்களை ஒழுங்கு செய்தன. குதித்துக் கொண்டாடின. ஆனால் நாங்கள் இன்னமுமே அடிமைகளாகவே இருக்கிறோம் என்பதை நான் மறந்துவிடுவதில்லை. தப்பித்து விடுதலையாகிவிடுவது என்பதில் கருத்தாக இருந்தேன். முன்பாவது என் விடுதலை கதைகளைக் கேட்டால் சக ஆடுகள் வெறுமனே மூத்திரம்தான் பெய்யும். ஆனால் இப்போது இந்த நல்லாயனின் கண்காணிப்பில் சந்தோச மிதப்பால் இருக்கும் இவைகள் என்னைக் கொலைகூட செய்யலாம். நல்லாயனின் கைகளில் அவைகள் ரட்சிக்கப்பட்டதாக நினைத்து உன்மத்தம் அடைந்தன.

ஒவ்வொரு தடவை மேய்ச்சலுக்குப் போகும்போதும் நான் தப்பித்துப் போக வழி தேடினேன். வன்முறை காட்டாத புதிய இடையனின் போக்கு எனக்கு வழிகளை திறந்து காட்டின. எனக்கு அனுகூலமான காலம் சமீபித்திருப்பதை உணர்ந்தேன்.

ஒரு நாள் என் புதிய ஆயன் மலை முகடுகளில் அமர்ந்து தன் நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த நேரம் நான் தப்பித்து ஓடினேன்.

கடைசியில் நான் சுதந்திரம் அடைந்தேவிட்டேன். இதோ இங்கே கண்ணில் தென்படும் அத்தனையும் எனக்கும் சொந்தம் என்பதைவிட நான் யாருக்கும் சொந்தமானவன் கிடையாது என்ற உணர்வு அலாதியானது. உலகின் ஆகச்சிறந்த உணர்வு அதுவாகத்தான் இருக்க முடியும். காதலோடு புணர்வதைக் காட்டிலும் இது சுகமாக இருந்தது. நான் இந்த மலைக் கணவாய்களிடையே சுந்தந்திரமானதும் எதிர்த்துப் போராடும் குணமுடையதுமான என் சந்ததிகளை உருவாக்குவேன். இதே கணவாய்களில் என் துணையும் என்னைப்போலவே சுதந்திர உணர்வின் உந்துதலால் அலைந்து திரியக்கூடும். நான் அவளைக் கண்டுபிடிப்பேன். அவளைக்கூடுவேன். சந்ததிகளைஉண்டாக்குவேன். பல்கிப்பெருகுவேன். அவைசேமைட்டையான ஆட்டுச் சந்ததிகள் போல அல்லாது இயற்கையின் பிள்ளைகளாக - சுதந்திரமாக - அலையும் என்று நினைத்துப் பார்க்கவே பேரானந்தமாக இருந்தது. பிறப்பில் இருந்தே நான் கண்டுகொண்ட கனவை இப்போது அனுபவித்துக் கொண்டிருப்பதில் ஆனந்தக்கூத்தாடினேன்.

நான் விடுதலை அடைந்த இரண்டாம் நாளில் மதிய நேரம் தேவதாரு மரங்களின் நிழலில் படுத்திருந்து அசைபோட்டபடியிருந்தேன். என் தலைக்குப் பின்னால் அரவம் கேட்டது. என் புதிய ஆயன் மேலேறி வந்துகொண்டிருந்தான். நான் ஓடிப்போய் ஒரு காட்டு முட்புதர் செடியின் மறைவில் நின்றுகொண்டேன். அவன் என்னைத்தான் தேடிக்கொண்டிருக்கிறான் என்பது எனக்கு தெள்ளத்தெளிவாக தெரிகிறது. அவன் என்னைக் கடந்து கீழே இறங்கிப்போனான். நான் ஆசுவாசமாகி வெளியே வந்த நேரம் நயவஞ்சகமாக பின்னேயிருந்து என்னைப் பற்றிப் பிடித்தான். என்னைத் தன் தோள்களில் போட்டுக்கொண்டு கீழே இறங்கினான்.

பின்னொரு நாளில், அவன் கடவுளாக ஆகவிருந்தான். அவன் சிலுவையில் அறையப்பட்டு உயிர்விடவிருந்தான். அவன் பெயரில் உலகமெங்கும் லட்சக்கணக்கில் வணக்கஸ்தலங்கள் எழும்பவிருந்தன. அவனை நோக்கி பெருங்குரலெடுத்து அழவும் அவனை நோக்கி பிரார்த்திக்கவும் கோடிக்கணக்கில் மக்கள் திரளவிருந்தார்கள். அவன் கடவுளாவதற்கு அன்பு என்ற ஆயுதத்தை கையில் எடுத்தான். தன்னை தானே மாய்த்துக்கொண்டு தற்கொலை செய்வதன் மூலம் கடவுளாகும் உத்தி அவனிடம் இருந்தது. அதையும் அன்பினால் செய்வதாய் அவன் மக்களிடத்திலே சொல்வான்.

என்னைக் கொண்டு போய் அவனை பின் தொடரும் கூட்டத்தின் மத்தியில் காட்டுவான். அப்போது நான் வழி தவறி போய்விட்டதாகவும் முட்செடிகளில் சிக்குண்டு சாகக் கிடந்ததாகவும் அதனால் தான் மற்ற ஆடுகளை சமவெளியில் விட்டுவிட்டு வழிதவறிப்போன என்னை தேடிக் கண்டடைந்ததாகவும் சொல்வான்.

அந்தப் பெரும் கூட்டம் அவனை புகழ்ந்து தள்ளும். ஆனால் அவன் கடவுளாக தன்னை பிரகடனப்படுத்தும்கூட தனது கண்ணோட்டத்தில் மட்டுமே என்னைப் பர்த்தான். ஆடுகளைப் பற்றி யோசிக்கமுடியாதபடிக்கு மனிதர்களிடம் இருக்கும் ஊனமான கண்ணே அவனிடத்திலும் இருந்தது. அவனது கோணத்தில் அவன் என்னை பாதுகாப்பாக அழைத்துச் செல்வதாக நம்பினான். ஆனால் நானோ மீண்டும் அடிமையாய் ஆகிவிட்டிருந்தேன். என் கனவுகள் அதனையும் சிதைத்துவிட்டு இவன் அதனால் கடவுளாகப்போகிறான். நான் அவன் தோளில் விடுதலை பெற முடியாதபடிக்கு சிறைப்பட்டபோது அவன் பாதி கடவுளாக இருந்தான். அவனுக்கு பின்னால் ஒரு பெருங்கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டத்தின் மத்தியில் அவன் நல்லாயன் என்று பெயர் எடுத்திருந்தான். உண்மையில் அவனேதான் அப்படிச் சொன்னான். நல்லாயன் என்பதைக்கூட அவன் மனிதர்களின் கணிப்புகளின் அடிப்படையில்தான் தீர்மானித்தான். அவன் கடவுளாக இருந்தும் கூட மனிதர்களின் அனுமானமே அவனுக்கு உதவியது.

மனிதர்களைப் போலவே கடவுள்களும் ஆடுகளைப் பற்றி யோசிப்பதில்லை. அவர்கள் தங்கள் இருப்பை உறுதிசெய்ய ஆடுகளை பலியிடுகிறார்கள். ஆடுகள் சுந்ததிரமானவை என்றும் அவைகள் விடுதலை விரும்பிகள் என்றும் இந்த பெருத்த சமவெளியில் ஆளுகைக்கு உட்படாத கட்டற்ற சுதந்திரத்தை அனுபவிக்க உரித்துடயவை என்பதை கடவுளும் அறிந்திருக்காதது எனக்கு வேதனை அளித்தது. அவன் கடவுளாவதற்கு என் சுதந்திரத்தைப் பறித்துகொண்டது குறித்து நான் அவனை வெறுத்தேன். அவன் தோளில் இருந்தபடியே அவன் முதுகிலும் முகத்திலும் மூத்திரம் அடித்தேன். அப்போதும் அவன் தான் அன்பானவன் என்று காட்ட புன்னகைத்தான். அது எனக்கு இன்னமும் எரிச்சலைக் கிளப்பியது. அவனை முட்டுவதற்காக திமிறினேன். ஆனால் நான் நகர்ந்துவிட முடியாதபடிக்கு அவன் என் நான்கு கால்களையும் இறுகப்பிடித்திருந்தான்.

அவன் என்னை சிறைப்பிடித்து அடிமைப்படுத்திய கதையை காலாகாலத்துக்கும் மக்கள் சொல்லுவார்கள். அவர்கள் என்னை நெறிதவறிய ஒருத்தன் என்று சொல்வதோடு ஆடுகளை பற்றி இம்மியும் தெரியாத ஒருவனை கடவுள் என்றும் நல்லாயன் என்றும் கொண்டாட இருக்கிறார்கள்.

மொத்தத்தில், மனிதர்களும் கடவுள்களும் ஆடுகளைப் பற்றி சிந்திக்கபோவதில்லை. அவர்கள் தமக்கு வசதிப்பட்ட கோணத்தில் உலகத்தையும் ஆடுகளையும் பார்க்கிறார்கள்.

அவன் திரும்பவும் அடிமைகளின் குழிக்குள் என்னைத் தள்ளினான். எங்களது அந்தப் பட்டி, கடவுளாக இருந்த நல்லாயன் சொல்லும் கதையில் வரும் ஒரு பெரும் பணக்காரனுக்குச் சொந்தமாய் இருந்தது. அந்தப் பணக்காரனுக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னர் தன் தகப்பன் சொத்தில் தனக்குரிய பங்கை பிரித்து எடுத்துக்கொண்டு போன ஒரு ஊதாரி மகன், கெட்டொழிந்து ஒட்டாண்டியாக திரும்பவும் தன் தந்தையின் வீட்டுக்கு திரும்பி வந்திருக்கிறான். அதைக் கொண்டாட அந்தப் பணக்காரன் கொழுத்த ஒரு ஆட்டை அடிக்கசொல்லியிருக்கிறான். அவனது வேலைக்காரர்கள் என்னைப் பிடித்துக் அறுத்து உண்பதற்காக கட்டியிருக்கிறார்கள்.

இது இப்படியாக இருக்க, கடவுளான நல்லாயன் என்பவன் என் சுதந்திரத்தை அவன் பறித்த கதையையும், அதனால் நான் ஒரு பணக்காரனின் வீட்டு ஊதாரிப்பிள்ளையின் நிமித்தம் விருந்தாகிப் போன கதையையும் தனக்கே உரிய பாணியில் உண்மைகளை புரட்டி ஒரு கட்டுக்கதை சொல்வான். பெரும் கூட்டம் ஒன்று அதையே உண்மை என்று நம்பி மயிர்க் கூச்செறிந்து "அன்பின் வடிவே" என்று அவனைக் கொண்டாடும். அவர்கள் ஆடுகளைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. காரணம் மனிதர்களைப் போலவே கடவுள்களும் ஆடுகளை தமது கோணத்தில் இருந்தே பார்க்கின்றார்கள்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி - 2018

## நியூசவுத்வேல்ஸ் மாகாண மாணவர்களின் போட்டி முடிவுகள்

| பெயர் | போட்டி | பெறுபேறு |
|---|---|---|
| வாகிஸ்வரன் தமிழரசன் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| அனோஷ் ராஜேந்திரா | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| அஜய் கோபிகரன் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| தீஷ் ராம் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| திருக்குமரன் கேதாரணி | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| தன்யா விஜிதன் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| அஸ்மிகா நகுலன் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| நாபிகா நந்தகுமார் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| சகஸ்ரா பாலஈஸ்வரன் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஷெரோனா சுதாகரன் குருஸ் | கவிதை மனனப் போட்டி - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அஷ்வின் சுகந்தன் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| ஜினோஷ் ராஜேந்திரா | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஆகில் மீரான் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| ரிஷிகரன் சகிலன் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| பூர்ணிஷா சூரியகுமார் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| கவிநந்தினி மனோஜ் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| அஸ்வினா ஜனார்த்தனன் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஜோனா ஜோசீ ஆல்வின் பிரபாகரதாஸ் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| லவங்கி பகீரதன் | கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஆ தி த் யா கி ரு ஷ் ண கு மா ர் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| லக்ஷமன் லெனின் சுதர்ஷன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| அருத்தன் பார்த்திபன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| சஹானா ஆனந்த் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | முதலாம் பரிசு |
| பிரதாநாராயணி சத்யன்பரமதேவா | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| மதுரஞ்சினி மனோஜ் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| நிதின் கருணாகரன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| ரக்ஷன் ரகுபரன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| டர்சன் தயாபரன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| கரிஸ் சதீஸ்கரன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| இனியா ஸ்ரீமுருகதாஸ் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | முதலாம் பரிசு |
| ஹைறஸ்ணி சரதன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஜாதனா பகீரதன் | கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு - 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அபிநயன் ராஜ்குமார் | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| சிஜர்தன் ஜசிதரன் | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| விஷால் குன்னத்தூர் செந்தில்குமார் | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| மீரா தயாபரன் | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவ (பெண்கள்) | முதலாம் பரிசு |
| வர்ஷினி கேதீஸ்வரன் | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவ (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| கிரிஷனா ஞானராஜா | பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவ (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| திகாஷ் பாலஈஸ்வரன் | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| ஸ்ரீநிகேதன் சரவண பிரபு | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| அவிஷ்னன் சிவகாந்தன் | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| அபிராமி சசிசுதன் | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| ராகவி ரகுபரன் | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| அக்ஷயா ராஜ்குமார் | பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஆகாஸ் ரஞ்சித் | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| அஷ்வின் ராஜ்குமார் | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| யாழினியன் ஜசிதரன் | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| இலக்கியா முரளி | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| நித்யா நிமலன் | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| பிரசித்தா முருகானந்தம் | பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| சிஜர்தன் ஜசிதரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| அபிநயன் ராஜ்குமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| விஷால் குன்னத்தூர் செந்தில்குமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| பிரதிக்ஷா சதீஷன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| அவன்ரிகா அனுஜிதன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| வர்ஷினி கேதீஸ்வரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| வாகிஸ்வரன் தமிழரசன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| ஜெனோஸ் சிரன்ஜ/வன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஆதேஷ் ரிஷிகேசன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| அங்கதன் பார்த்திபன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| நயனபாஷினி பிரவீணன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| அவந்திகா வினோத் விக்ரம் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| தக்சிகா தேவகுமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| யதுஷன் ஜெயராசா | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| கஜன் ஹறி குமாரலிங்கம் | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| சித்தார்த் ராமசுப்பிரமணியன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| அஞ்சலா ரஞ்சித் | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| தனஜா அருண்மொழித்தேவர் | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| ப்ரீதி சக்தி சிவபாலன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - இளைஞர் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அத்ரித் அன்ஜெய் | வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 6 வயது) | முதலாம் பரிசு |
| கிரிஷ் வெங்கட்டராஜ் | வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 6 வயது) | இரண்டாம் பரிசு |
| அபீஷ்னன் வரதன் | வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 6 வயது) | மூன்றாம் பரிசு |
| ஸ்ரீநிகேதன் சரவண பிரபு | வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 7 வயது) | முதலாம் பரிசு |
| சேயோன் அரவிந்த் | வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 7 வயது) | இரண்டாம் பரிசு |

# நியூசவுத்வேல்ஸ் மாகாண மாணவர்களின் போட்டி முடிவுகள்

| பெயர் | போட்டி | பெறுபேறு |
|---|---|---|
| விசாகன் சுரேந்திரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (ஆண்கள் – 7 வயது) | மூன்றாம் பரிசு |
| லக்ஷனா செந்தில்குமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 6 வயது) | முதலாம் பரிசு |
| விவேக்கா கோணேஸ்வரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 6 வயது) | இரண்டாம் பரிசு |
| பூர்ணிஷா சூரியகுமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 6 வயது) | மூன்றாம் பரிசு |
| கவிநந்தினி மனோஜ் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 7 வயது) | முதலாம் பரிசு |
| ஜோனா ஜோசீ ஆல்வின் பிரபாகரதாஸ் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 7 வயது) | இரண்டாம் பரிசு |
| சாருக்கா சிரன்ஜீவன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – கீழ்ப் பிரிவு (பெண்கள் – 7 வயது) | மூன்றாம் பரிசு |
| தஷ்வின் சிவராசா | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| டிஷாந் மயூரதன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| லக்ஷமன் லெனின் சுதர்ஷன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஆருசா பிரதீபன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| மிர்திகா வினோதன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| டிலோசிகா சிறிசெல்வகாந்தன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – பாலர் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| திகாஷ் பாலஈஸ்வரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| மகீன்ராஜ் ஞானராஜா | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| திலன் தியாகராஜா | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| அக்ஷயா ராஜ்குமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| மெஜிரின் வினோத் றியன்சி பீரிஸ் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| சர்விகா ராம் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மத்திய பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அஷ்வின் ராஜ்குமார் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| மாயவன் ரதன்தாஸ் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஆகாஸ் ரஞ்சித் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| இலக்கியா முரளி | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| அஷ்விதா செந்தில்குமரன் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| நிதிலா சக்தி | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| சிந்து செந்தில் | வாய்மொழித் தொடர்பாற்றல் – மேற் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| மிதுல் ஜகதீஸ்வரன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| அகிஷான் முரளிதரன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| விஷால் பாலாஜி | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| நாபிகா நந்தகுமார் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| திருக்குமரன் கேதாரணி | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| அகன்வீ அருண் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அவந்திகா வினோத் விக்ரம் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஷெரோனா சுதாகரன் குருஸ் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – ஆரம்பப் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| அக்ஷதா தயானந் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | முதலாம் பரிசு |
| றிமைரா பிரதீபராஜ் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| விசாலி செந்தூரன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின் பிறந்தவர்கள் (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஆ தி த் யா கி ரு ஷ் ண கு மா ர் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின்பிறந்தவர்கள் (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| அருத்தன் பார்த்திபன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின்பிறந்தவர்கள் (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| ஜோயல் தோமினிக் சாவியோ | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின்பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| லக்ஷமன் லெனின் சுதர்ஷன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 இன் பின்பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| அமீர் மீரான் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| டக்சனகாந் ஸ்ரீகாந் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| டர்சன் தயாபரன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஹைஸ்ணி சரதன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | முதலாம் பரிசு |
| டிலோசிகா சிறிசெல்வகாந்தன் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| மாயா முருகானந்தம் | விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) – பாலர் பிரிவு – 2013 பிறந்தவர்கள் (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| நிரோஷ் பிரபாகரன் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| விஷால் குன்னத்தூர் செந்தில்குமார் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| மகின் வேலுசாமி | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| வர்ஷினி கேதீஸ்வரன் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| மீரா தயாபரன் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| அஷ்விதா செந்தில்குமரன் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – அதிமேற் பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஸ்ரீநிகேதன் சரவண பிரபு | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (ஆண்கள்) | முதலாம் பரிசு |
| மயூக் மண்டலா | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (ஆண்கள்) | இரண்டாம் பரிசு |
| அக்ஷயன் ஜெயகணேஷ் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (ஆண்கள்) | மூன்றாம் பரிசு |
| ஜோனா ஜோசீ ஆல்வின் பிரபாகரதாஸ் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (பெண்கள்) | முதலாம் பரிசு |
| சுடர்க்கொடி முத்தரசு | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (பெண்கள்) | இரண்டாம் பரிசு |
| மெஜிரின் வினோத் றியன்சி பீரிஸ் | விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – மத்திய பிரிவு (பெண்கள்) | மூன்றாம் பரிசு |
| திகாஷ் பாலஈஸ்வரன் | விசேட தனி நடிப்புப் போட்டி – மேற் பிரிவு | முதலாம் பரிசு |
| ஸ்ரீநிகேதன் சரவண பிரபு | விசேட தனி நடிப்புப் போட்டி – மேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| ஹறிணி கனகசபாபதி | விசேட தனி நடிப்புப் போட்டி – மேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| ப்ரீதி சக்தி சிவபாலன் | விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி – அதிஇளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| புவன் செந்தில் | விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி – அதிஇளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |
| ஜஸ்மின் ஆய்ஷா உஷாம் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | முதலாம் பரிசு |
| மீரா தயாபரன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | முதலாம் பரிசு |
| பிரதிக்ஷா சதீஷன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | முதலாம் பரிசு |
| சன்சிதா வேலாயுதர் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | முதலாம் பரிசு |
| வர்ஷினி கேதீஸ்வரன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | முதலாம் பரிசு |
| அமிதேஷ் செந்தில்குமரன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| அவன்ரிகா அனுஜிதன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| கிரக்ஷனா சுகுமார் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| கோபிரம்யா ஜெயகாந் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| யாதவன் செல்வஷரூபன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | இரண்டாம் பரிசு |
| அன்புக்கரசி தனபால் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| லக்ஷிமி பிரியதர்ஷினி ஆலப்பாக்கம் ஜவஹர்லால்நேரு | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| பிரணவ் ஜெகதீசன் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| சுஷாந்த் செல்வம் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| ஸ்ருதிக்ஷா ராஜசேகர் | வினாடி வினாப் போட்டி – அதிமேற் பிரிவு | மூன்றாம் பரிசு |
| பரத்ராஜ் செல்வராஜ் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| ஹர்சிதா ஜெயபிரகாஷ் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| நிரஞ்சனா கண்ணன் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| சுதிக்ஷா ராஜ்குமார் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| சுஜன்மூர்த்தி சருவா சுந்தரமூர்த்தி | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | முதலாம் பரிசு |
| அபினவ் சரவணன் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |
| புவன் செந்தில் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |
| மணி ஸ்ரீ ஹரிஷ் மகேந்திரபிரபு | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |
| ப்ரீதி சக்தி சிவபாலன் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |
| சித்தார்த் ராமசுப்பிரமணியன் | வினாடி வினாப் போட்டி – இளைஞர் பிரிவு | இரண்டாம் பரிசு |

# விக்டோரிய தமிழ்க் கலை கலாசாரக் கழக 'முத்தமிழ் கலைவிழா - 2018'









விக்டோரிய தமிழ் கலை கலாசார, கழகம் கடந்த 28 ஆண்டுகளாக நடத்திவரும் "முத்தமிழ் கலைவிழா – 2018" கடந்த மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய விழாவில் பல கண்கவர் நிகழ்வுகள் இடம்பெற்றன. அவற்றில் ஒன்று பரதநாட்டிய ஆசிரியைகளின் மாணவர்கள் இணைந்து வழங்கிய நடன நிகழ்வாகும். இன்னொரு சிறப்பம்சமாக "கலாவித்தகர் 2018" விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இம்முறை இந்த விருது, கடந்த 28 வருடங்களாக தமிழுக்கும் கலைக்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டி பிரபல மிருதங்க வித்துவான் திரு. பாலசிறீ ராசையா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை பல்லின – கலாசார சபை உறுப்பினர் திரு. சிதம்பரம் சிறினிவாசன் அவர்களை வழங்கி கௌரவித்தார்.

கழகத் தலைவர் திரு. பிரகாஷ் மனோகரன் அவர்கள் தலைமையுரை வழங்குவதையும் கழகத்தின் காப்பாளர் திரு. சச்சிதானந்தன் அவர்கள் நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டவருக்கு மதிப்பளிப்பதையும் விக்டோரிய தமிழ் கலை கலாசார கழத்தின் செயலர் திரு. குகதாஸ் நவநீதராஜா நன்றியுரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பிறிஸ்பேன் தமிழ்ப் பாடசாலையின் 33ஆவது வருடாந்த கலைவிழா




குயீன்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள பிறிஸ்பேன் தமிழ்ப் பாடசாலையின் 33ஆவது வருடாந்த கலைவிழா நிகழ்வுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை அன்று மிகவும் சிறப்பாக இன்டோரோபில்லி உயர்நிலைப் பாடசாலை அரங்கத்தில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய நூற்றுக்கும் அதிகமான மாணவ, மாணவியர் தமது தமிழ் மொழிப் புலமையாலும், கலை கலாசாரத் திறமையாலும் அரங்கத்தை அதிரவைத்தனர். மேலும் இவ்விழாவில் பிரதம அதிதியாக Mr Michael Berkmen (MP for Maiwar) உம் சிறப்பு அதிதிகளாக Ms Irene Bayldon Tavutavu(ESAQ President) மற்றும் கலாநிதி ஆ. சி. கந்தராஜா (பேராசிரியர்–எழுத்தாளர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் தமிழ் பாரம்பரிய கலைகளாகிய கும்மி, கோலாட்டம், பறை, காவடி ஆகியவற்றுடன் குழந்தைகளின் பேச்சுத்திறன், நடிப்புத் திறனை வளர்க்கும் நாடகங்களும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. எழுநூறுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்குகொண்ட இந்த நிகழ்வில், தமிழ்க் குழந்தைகளால் மிகச் சிறந்த முத்தமிழ் விருந்து வழங்கப்பட்டது. பார்வையாளர்கள் தமது கரகோஷங்களால் குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்கள். பிறிஸ்பேன் தமிழ் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாக குழுவினர் என அனைவரது ஒத்துழைப்பினாலும் மிகச் சிறந்த முறையில் இவ் விழா நடைபெற்று தமிழ் மாணவர்களின் பாடசாலைக் கீதத்துடன் இனிதே நிறைவுபெற்றது.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


உங்கள் நிகழ்வுகள் பிரகாசமாக வேண்டுமா?
EVENTS & DECORATIONS
WE PROMISE TO MAKE YOUR DAY THE MOST MEMORABLE AND SPECIAL FROM START TO FINISH...!
• Wedding and Reception
• Engagement
• Anniversary parties
• Birthday parties
• Puberty ceremony
• Traditional home functions
• Valaikappu Function
• baby shower
• Mehindi Functions
• Religious Events
• Balloon and flower decoration
• Indoor of outdoor Decorations
Our packages includes everything you will need for your function.
We will have your function organised from start to finish
Example : Wedding pachages
• Mandap
• chair and table setting
• Walkway with pillars and entrance Decoration (Ganesh and Kumbam etc)
• Rangoli Kolam
• Bridal Bouquet
• Kuttu Villaku, Flower plates, Flower Basket, Nirai kudam, Kaamachi Villaku
Extras: Flower Garlands, Cake, Photography
For more information head to our facebook & instagram page or contact us Directly anytime
milpark, melbourne, ABN : 98314136010, suthan : 0415602956
S&T Events And Decorations
st_decorations
umasuthanuma@gmail.com

# அழகியதோர் நாடகவிழா















பாரதி பள்ளி ஆண்டுதோறும் சிறப்பான நாடகங்களை மேடையேற்றி வருவதை நாம் அறிவோம். கடந்த மாதம் பாரதி பள்ளியின் நாடக விழா மெல்பேர்ண் ஹம்டன் பார்க்கிலுள்ள 'ரிவர்கம்' கலையரங்கில் இரு தினங்கள் நடைபெற்றது.

முதலாவது நாள், மழலைகளும் இளைய மாணவர்களும் தந்த நிகழ்ச்சிகள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தன. மண்டபம் நிறைந்த பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்யும் விதத்தில், குழுக் குழுவாக மாணவர்கள் தோன்றி, தமது திறமைகளைக் காண்பித்துச்சென்றனர். அழகான தமிழிலும் நல்ல உச்சரிப்புடனும்கூடிய இந்த நாடகங்களை மண்டபத்தில் இருந்த சிறு பிள்ளைகள் கூடத் தம்மை மறந்து பார்த்துக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. சின்னஞ்சிறுசுகள் கியாங் கியாங் குருவி என்ற பாட்டைக் காட்சிப்படுத்திய விதம் மிக அழகு. நெல்மணி, பலசாலியும் புத்திசாலியும், கோழிகளும் நரிகளும் ஆகிய நாடகங்கள் அருமையான நடிப்புடன் அமைந்திருந்தன.

பெருந்தொகையான மாணவர்களை உள்ளடக்கிய இருபது நிகழ்ச்சிகளை, ஒரே மேடையில் தடையின்றி தொடர்ச்சியாகத் தந்த விதம் பிரமிக்கச்செய்தது. நிகழ்வின் எந்தக்கட்டத்திலும் திரை மூடப்படவில்லை. சோர்வு தட்டவில்லை. இந்த நிகழ்ச்சி, அளவாக 2 மணி 45 நிமிடங்களில் முடிவுக்கு வந்தவந்தபோது, பெரும் எண்ணிக்கையில் மண்டபத்திலிருந்த சிறிய முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 17 வயது வரையிலான உயர்நிலை மாணவர்கள் பங்குகொண்டு ஒன்பது நாடகங்களை வழங்கினர். மூன்றரை மணி நேர நிகழ்ச்சி. குறித்த நேரத்துக்கு ஒரு நிமிடம் கூடப் பிந்தாமல் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

நிகழ்ச்சி நிரலின் முதல் பக்கத்திலேயே, நிகழ்ச்சி முடியும் நேரத்தையும் போட்டிருந்தார்கள். இதை எப்படிச் சாதிக்கப் போகிறார்கள் என எண்ணியிருந்த வேளையில், அறிவித்த நேரத்துக்கு மூன்று நிமிடங்கள் முன்னதாக நிகழ்ச்சியை நிறைவுக்குக் கொண்டுவந்தமை, வேறெங்கும் நான் காணாத அதிசயமாகும்! நேரத்தை மதிக்கும் பாரதி பள்ளி, எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு நல்ல முன்னுதாரணம் ஆகும்.

ஒன்பது நாடகங்களில் "விருந்தாளி" என்ற ஒரு முழுநீள நகைச்சுவை நாடகம். தொலைக்காட்சி பார்க்கக் குடும்பத்துக்குள் முக்கோணப் போட்டி. எல்லாவற்றையும் கெடுக்கும் விருந்தாளி போன்ற சிக்கல்களைப் பின்னி அவிழ்ப்பதாக அமைந்தது. மகா பாரதத்தைப் பின்னணியாகக் கொண்டவை "தர்ம நெறி", "ஏகலைவன்" ஆகிய இரு நாடகங்கள். "ஒன்று.. இரண்டு... மூன்று..." மூடத்தனமான ஒரு அரசனை ஒரு மூடன் வெற்றி கொள்ளும் வினோத மான கதை. ஒரு நாயை ஊர்த் தெருவால் அழைத்துச் செல்லும்போது நடக்கும் சுவையான காட்சிகளின் கோவையே "நாய்க்குட்டி ஊர்வலம்" என்னும் அழகான நாடகம்.

நாடகங்களின் எழுத்துருக்கள்: மாவை நித்தியானந்தன், யோகன், சூசைராஜா ஆகியோர். பாரதி பள்ளி ஆசிரியர்கள் நெறியாள்கை செய்திருந்தனர்.

# வலைஞர் பதிகம்

பையன் கேட்டான் அப்பாவிடம்..
"அப்பா.., நீயும் அம்மாவும் ஹனிமூன் போனப்ப நான் உன்கூட வந்தேனா, அம்மாகூட வந்தேனா?"
சற்றும் யோசிக்காமல் அப்பா சொன்னார். "போகும்போது என் கூட வந்தாய், வரும்போது அம்மா கூட வந்தாய்."

Not everything you enjoy is good 😂



When you set your alarm every 5 minutes in the morning







காவலர்: உன்னை நாளைக்கு காலைல 5 மணிக்கு தூக்குல போடப்போறோம்.

கைதி: ஹா ஹா ஹா

காவலர்: எதுக்கு சிரிக்கிற?

கைதி: நான் எழுந்துக்குறதே 9 மணிக்குத் தானே?

காதலன்: உனக்கு ஏதாவது பரிசு தரணும். என்ன வேணும்?

காதலி: ஒரு தங்க மோதிரம் வாங்கிக்கொடு.

காதலன்: வேற எதாவது பெரிசாச் சொல்லு.

காதலி: ஒரு MRF டயர் வாங்கிக்கொடு.




அப்பா - ஏம்மா என்னை Daddy எண்டு கூப்பிடுறாய். அப்பா எண்டே கூப்பிடு..!!

மகள் - அப்பா எண்டு கூப்பிட்டா Lipstick அழிஞ்சு போகும்பா...Daddy எண்டு கூப்பிடுறதுதான் Make-Up க்கு Safe

## எதார்த்தமான உண்மைகள்

❒ கல்லுக்கு உருவம் கொடுக்கும் வரை நான் சிற்பி, நீ கல்., உருவம் கொடுத்த பின்பு நீ கடவுள், நான் தீண்டத்தகாதவன்..!
(நம்ம ஊரு டிசைன் அப்படி)

❒ கும்பிடும் வரை கடவுள். திருட்டுப் போனால் சிலை...!
(ஒண்ணும் சொல்றதுக்கு இல்லை)

❒ தெருவில் குப்பை போடுகிறவனை மரியாதையாகவும் அதை பொறுக்கி சுத்தம் செய்பவனை கேவலமாக பார்க்கும் சமுதாயம் உள்ளவரை நாடு சுத்தம் ஆகாது...!
(ஆகவே ஆகாது...)

❒ ஒரு மெழுகுவர்த்தியின் தியாகத்திற்கு சற்றும் குறைவில்லாதது ஒரு தீ குச்சியின் மரணம்..!
(மரணம் ஒரு முடிவு அல்ல... !)

❒ வேலைக்குப்போகிறவர்களின் திங்கட்கிழமையை விட வேலை கிடைக்காதவர்களின் திங்கட் கிழமைகள் கொடூரமானவை...!
(நிதர்சனமான உண்மை)

❒ அவசரத்துக்கு ஒரு கொத்தனாரைக் கூட தேடுனா ஊர்ல ஒரு பய இல்ல, தெருவுக்கு நாலு இஞ்சினியர் மட்டும் இருக்கானுங்க ..! ஏன் இந்த கொடுமை..!
(ஊருக்கு ரெண்டு இன்ஜினீயரிங் காலேஜ் தான் காரணம்)

❒ இவன் என்ன நினைப்பான் அவன் என்ன நினைப்பான்னு நினைச்சே வாழ்றோம். ஆனா உண்மையில ஒருத்தனும் நம்மளைப் பத்தி நினைக்கிறதேயில்ல...!
(எல்லாத்துக்கும்காரணம் இந்தஎண்ணங்கள் தான்)

❒ இந்த டாக்டர்கள் வசதி இல்லாதவன பாத்து அது சாப்புடு இது சாப்புடுனு சொல்லுவான். வசதி இருக்கவன பாத்து எதையும் சாப்புடகூடாதுனு சொல்லுவான்.!
(எல்லாம் பீஸ் தான் காரணம்)

❒ இறுதிவரை வாழ்க்கை இப்படியே இருக்க வேண்டுமே என்ற கவலை சிலருக்கு, இப்படியே இருந்துவிடுமோ என்ற கவலை சிலருக்கு...!
( ஒரு முழம் கூடப்போறதும் இல்லை குறையப் போறதும் இல்லை)

❒ 250 ரூபாய்க்கு பளிச்சென்றும் 100 ரூபாய்க்கு சுமாராகவும் இலவச தரிசனத்திற்கு படுமங்கலாகவும் காட்சி தருகின்றார் கடவுள்...!
(லஞ்சம் தான் காரணம்)


❒ தூக்கம் வராமல் முதலாளி... தூங்கி வழியும் வாட்ச்மேன். என்ன ஒரு முரண்பாடு..!
(காசு பண்ற வேலை)

நமக்கு 20வயசு நடக்கும்போது, 30 வயசுகாரங்களுக்குத்தான் பெரும்பாலும் "கல்யாணம்" நடந்துச்சு,

நமக்கு 30வயசு நடக்கும்போது, 20 வயசு பசங்களுக்கே பெரும்பாலும் "கல்யாணம்" நடக்குது..!!



உள்ள இருந்தாலும் சாப்பிடறானுங்க.. வெளிய வந்தாலும் சாப்பிடறானுங்க..



என்ன பண்றதுன்னே தெரியலையே.. 😂😂😂

பிறை வந்தவுடன் நிலா வந்தவுடன்
பிறை வந்ததென்று உள்ளம் துள்ளும்...
பிறை கண்டவுடன் பிரியாணி என்று
நெஞ்சம் நெஞ்சம் மின்னும்!!!





கல்யாணம் பண்றதும் செல்போன் வாங்குறதும் ஒன்னு..
ரெண்டுமே கொஞ்சம் வெயிட் பண்ணியிருந்தா
நல்ல மாடல் கிடைச்சிருக்குமேன்னு
பீல் பண்ண வைக்கும்..!

# மாத ராசிபலன்



## மேடம்

வேகமாக நடைபெற்று வந்த காரியங்களில் சிறிது தாமதத்தைச் சந்திக்க நேரிடும். என்றாலும் அவ்வகையில் உண்டாகும் தாமதமும் உங்களுக்குச் சாதகமான பலனைத் தரும் வகையிலேயே என்பதால் கவலை கொள்ளத் தேவையில்லை. புதிய சொத்து வாங்கும் முயற்சியில் இந்த மாதத்தில் இழுபறி காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இடம்பிடிக்கும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். கடன்பிரச்சினைகள் தலையெடுக்கும். முன்பின் தெரியாத மனிதர்களை நம்பி புதிய முயற்சிகளில் இறங்குவதைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கும், வேலைவாய்ப்புத் தேடி அலைவோருக்கும் கால நேரம் சாதகமாக உள்ளது. வாகனங்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்துக்குத் தேவையான புதிய ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் அதிக நாட்டம் செல்லும். பிள்ளைகளின் செயல்கள் பெருமை தரும் வகையில் அமையும்.

## இடபம்

இந்த மாதத்தில் உண்டாகும் கிரகங்களின் மாற்ற நிலை வாழ்வியல் தரத்தை உயர்த்தும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும் வாய்ப்பு உண்டு. வீட்டில் ஆடம்பரப் பொருட்கள் சேரும். கூடுதலாகச் செலவு ஆனாலும் சுகமான சூழலை அனுபவிக்கத் தொடங்குவீர்கள். நெடுநாளைய குடும்பப் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழல் நிலவும். குடும்பத்தோடு உல்லாசப் பயணம் செல்லத் திட்டமிடுவீர்கள். முக்கியமான பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் சிறப்பான நற்பெயரை அடைவீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். தங்கம், வெள்ளிப் பொருட்களை வாங்க நேரம் சாதகமாக அமையும். பேச்சில் நகைச்சுவை உணர்வு வெளிப்படும். உடன்பிறந்தோர் உங்கள் உதவியை நாடி வரக்கூடும். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்கள் பணிகளுக்கு பெரிதும் துணையாய் அமையும். மாணவர்களின் கல்வி நிலை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணும்.

## மிதுனம்

மற்றவர்கள் அசரும்படியான காரியங்களைத் திறம்படச் செய்து முடிப்பதன் மூலம் தனிப்பட்ட முறையில் உங்களது கௌரவம் உயரும். சுற்றி நடக்கும் பிரச்சினைகளில் தலையிட்டு சுமுகத் தீர்வு காண முற்படுவீர்கள். இந்த மாதத்தில் வரவு நிலை கூடினாலும், ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கலாம். குடும்பத்தினருடன் உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. கேளிக்கை, கொண்டாட்டங்கள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காக அதிகம் செலவழிப்பீர்கள். பணத் தேவை குறித்த கவலை ஒரு புறம் இருந்தாலும் செலவழிக்கத் தயங்கமாட்டீர்கள். குடும்பத்தில் கலகலப்பும் சலசலப்பும் கலந்திருக்கும். உடன்பிறந்தோர் சாதகமாகச் செயற்படுவார்கள். மாணவர்கள் கல்வி நிலையில் சிறப்பான முன்னேற்றம். எப்போதும் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டு இருப்பதால் உடல் களைப்பாக உணர்வீர்கள். கலைத்துறையினர் புதிய வாய்ப்பைப் பெறுவர். தொழில்முறையில் அலைச்சல் அதிகமானாலும் எதிர்பார்க்கும் தனலாபம் கிட்டும்.

## கடகம்

விவேகமான பேச்சுக்களால் கௌரவம் அடைவீர்கள். உங்களின் எந்த ஒரு பணிக்கும் இடைத்தரகர்களை நம்பாது நீங்களே நேரடியாகச் செயலில் இறங்குவது நன்மையைத் தரும். தைரியமும், விவேகமும் நிறைந்த செயல்களால் மற்றவர்களை ஆச்சரியத்தில் திகைக்கச் செய்வீர்கள். பிள்ளைகளின் வழியில் சுபசெலவுகளைச் சந்திப்பீர்கள். அவர்களின் பிடிவாதமான செயல்கள் உங்கள் விருப்பத்துக்கு எதிராக அமையும். எல்லாம் சரியாக இருந்தும் ஏதோ ஒரு காரணத்தினால் தடைப்பட்டு வந்த காரியங்கள் இந்த நேரத்தில் விரைவாக நடைபெறும். மாணவர்கள் கல்வி நிலையில் சிறிது சுணக்கத்தைக் காண நேரிடலாம். உறவினர்களால் ஒரு சில கலகங்களை சந்திக்க வேண்டியிருக்கும். வாழ்க்கைத்துணையின் பணிகளுக்குத் துணை நிற்பீர்கள். தொழில்முறையில் அடிக்கடி பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். நேர்மையாகச் செயற்படுவதால் அலுவலகத்தில் தொடர்ந்து பணி செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாவீர்கள்.

## சிம்மம்

எந்த ஒரு விஷயத்தையும் செய்து முடிக்கும் வரை ஓய்வில்லாமல் செயற்படுவீர்கள். வேகத்தோடு விவேகமும் இணைந்திருப்பதால் காரிய வெற்றி என்பது கட்டாயம் சாத்தியமாகும். முற்பகலில் செய்யும் காரியங்களுக்கு பிற்பகலில் பலன்களை அனுபவிக்க உள்ளீர்கள். பொருள் வரவு கூடும். ஏதோ ஒரு காரணத்தால் தடைப்பட்டிருந்த கடன் தொகைகள் விரைவில் வசூலாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். லாவகமான பேச்சுக்களில் கண்டிப்பும் வெளிப்படுவதால் உங்களின் வார்த்தைகளை அடுத்தவர்கள் கேட்டு நடக்க வேண்டிய சூழலுக்கு ஆளாவார்கள். உடன்பிறந்தோருக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டியிருக்கும். வாகனங்களின் பராமரிப்பு செலவு கூடும். முன்கோபத்தைக் குறைத்துக்கொள்வது உடல்நலத்துக்கு நல்லது. மாணவர்கள் தங்கள் எழுத்துத்திறமையின் மூலம் வகுப்பில் முன்னிலை பெறுவார்கள். உறவினர்களின் வழியில் ஒரு சில சங்கடங்களை சந்திப்பீர்கள். வாழ்க்கைத் துணையின் பணிகளுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும்.

## கன்னி

எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க சராசரிக்கும் சற்று கூடுதலாக சிரமப்பட வேண்டியிருக்கும். அலைச்சல் அதிகமானாலும் நினைத்ததை நடத்தி முடிக்கும் வரை பிடிவாதத்துடன் செயற்படுவீர்கள். பொருள் வரவு நிலை அதிகரித்தாலும் அதற்கேற்ற வகையில் செலவுகளும் வரிசையில் காத்து நிற்கும். குடும்பத்தில் கலகலப்பும் சலசலப்பும் கலந்திருக்கும். முக்கியமான பிரச்சினைகளில் விவாதம் செய்வதால் தீர்வு கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்டு அதிகம் பேசாது அமைதியாக இருங்கள். உடன்பிறந்தோர் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவார்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் நன்மையைத் தரும் வகையில் அமையும். மாணவர்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் காண கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். வாகனங்களால் இலாபம் உண்டாகும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வந்த சொத்துக்கள் சார்ந்த வழக்கு விவகாரம் முடிவுக்கு வரும். கடன் பிரச்சினைகள் முற்றிலுமாகக் குறையும்.

## துலாம்

முயற்சியால் மட்டுமே காரியத்தைச் சாதிக்க வேண்டியிருக்கும். புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். முகமலர்ச்சியோடு நீங்கள் பேசும் வார்த்தைகள் காரிய வெற்றிக்குத் துணைபுரியும். பொருளாதார நிலையை கணிசமாக உயர்த்தும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வரும் கடன் தொகை ஒன்று இந்த மாதத்தில் வந்து சேரும். புதிய வீடு கட்டும் முயற்சியில் உள்ளோருக்கு வங்கி சார்ந்த கடனுதவி கிட்டும். உடன்பிறந்த சகோதரிக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். மாணவர்களின் கல்வி நிலை உயர்வடைவதோடு விளையாட்டுக்களின் மீதான ஆர்வம் அதிகரிக்கும். வாகனங்களால் ஆதாயம் உண்டாகும். தகப்பனார் வழி உறவினர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். குடும்பத்தினரோடு உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. இந்த மாதத்தில் மருத்துவச்செலவுகள் உண்டாவதற்கான வாய்ப்பு உண்டென்பதால் உடல்நிலையில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நண்பர்களோடு அற்ப விஷயங்களுக்காக கருத்து வேறுபாடு தோன்றும்.

## விருச்சிகம்

எந்தச் சூழலிலும் மனம் தளராது செயற்படும் உத்வேகத்தைப் பெற்றிருப்பீர்கள். தோல்வியையும் வெற்றியாக மாற்றிக் கொள்ளும் கலையை அறிந்திருக்கும் நீங்கள், எளிதில் துவண்டுவிடாமல் விடா முயற்சியுடன் செயற்படுவீர்கள். எவ்வகையிலேனும் நினைத்த காரியத்தைச் செய்து முடித்து நற்பெயர் காண்பீர்கள். பேசும் வார்த்தைகளில் நிதானம் இருந்தாலும் சொல்ல நினைக்கும் கருத்துக்களை ஆணித்தரமாக வெளிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பொருளாதார நிலை ஏற்ற இறக்கத்தோடு இருந்து வரும். உடன்பிறந்தோரால் ஒரு சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். செலவுகள் அதிகரிக்கும். முன்பின் தெரியாத நபர்களை நம்பி புதிய முயற்சியில் ஈடுபடுதல் கூடாது. வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கலாம். இந்த மாதத்தில் அநாவசியமான பயணங்களை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் ஞாபக மறதியால் அவதிப்பட நேரிடும். பிள்ளைகளின் செயல்கள் கௌரவத்தைப் பெற்றுத் தரும்.

## தனுசு

ஏதோ ஒரு காரணத்தால் பொருள்வரவு தடைபடும். பொருளாதார நிலையில் சிரமப்பட வேண்டியிருக்கும். சேமிப்பு கரைவதற்கான வாய்ப்பு உருவாகும். புதிய சொத்து வாங்குவதற்கான முயற்சி தடைபடும். குடும்பத்தில் அமைதி நிலவும். அதிகம் பேசுவதை விட அர்த்தத்தோடு பேசுவதன் அவசியத்தை உணர்ந்திருப்பீர்கள். முன்பின் தெரியாத நபர்களிடம் அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளில் நடக்கும் போட்டிகளில் சிறப்பான வெற்றியைக் காண்பார்கள். சிறிது நாட்களாக மனதில் இருந்து வந்த குழப்பமான நிலை மாறி தெளிவான சிந்தனையோடு செயற்படுவீர்கள். நண்பர்களின் துணை தக்க சமயத்தில் கைகொடுக்கும். கடன் பிரச்சினைகளை கொஞ்சம், கொஞ்சமாக முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பீர்கள். மறைமுக எதிரிகளால் சற்று சிரமத்துக்கு உள்ளாகலாம். தொழில் முறையில் வளைந்து கொடுக்க வேண்டிய நேரத்தில் வளைந்தும், நிமிர்ந்து நிற்க வேண்டிய நேரத்தில் நிமிர்ந்தும் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.

## மகரம்

உண்மையாக உழைத்து வருவதன் மூலம் இந்த மாதத்தில் உங்களை மற்றவர்களுக்கு அடையாளம் காட்ட முற்படுவீர்கள். அவசரப்படாமல் நிதானித்துச் செயற்படுவதன் மூலம் மட்டுமே வெற்றியை சாத்தியமாக்கிக் கொள்ள இயலும். மனதில் இருந்து வரும் கோபதாபங்கள் பேசும் வார்த்தைகளில் வெளிப்பட்டு உங்களுக்கு அவப்பெயரைத் தோற்றுவிக்கக் கூடும். குடும்பத்தில் சிறு சலசலப்புகள் தொடர்ந்து இருக்கும். பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.

சொத்துப்பிரச்சினைகளில் உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு உண்டாகக் கூடும். தகவல் தொடர்பு சாதனங்களால் இழப்பைச் சந்திக்க நேரலாம். பிள்ளைகளோடு கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. நீரிழிவு நோய் உள்ளவர்கள் உடல்நிலையில் கவனம் செலுத்துவது அவசியம். வாழ்க்கைத்துணை உங்கள் பணிகளுக்குத் துணை நிற்பார். பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினை பற்றிய பேச்சுக்கள் எழலாம்.

## கும்பம்

இந்த மாதத்தில் சற்று விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பான்மையைக் கொண்டிருப்பீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவெடுக்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். பொருள் வரவு சீராக இருந்துவரும். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இடம்பிடிக்கும். உடன் பிறந்தோர் உதவிகரமாகச் செயற்பட்டு வருவார்கள்.

கடன் பிரச்சினைகள் சற்றே தலைதூக்கும். மாதத்தின் பிற்பாதியில் உறவினர்களோடு மனஸ்தாபம் தோன்றுவதற்கான வாய்ப்பு உண்டு. மாணவர்கள் தங்கள் கல்வி நிலையில் சற்று சிரமத்தைக் காண்பார்கள். பிள்ளைகளால் ஒரு சில விவகாரங்களில் கூடுதல் செலவைச் சந்திக்க நேரலாம். உடல்நிலையில் சிரமம் உண்டாகும். கௌரவம் கருதி செய்ய வேண்டிய செலவுகள் உயரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவார்கள். முன்னேற்றத்துக்காக முயற்சிக்க வேண்டிய மாதம்.

## மீனம்

இந்த மாதத்தில் உடல்நிலை மற்றும் மனநிலை இரண்டையும் ஒரே சீராக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் . ஒரு சில விவகாரங்களில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உருவாகக் கூடும். எல்லோரையும் திருப்திப்படுத்த நினைத்து கடும் மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். அநாவசியச் செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு கரையும். உடன்பிறந்தோருடன் மனஸ்தாபம் தோன்றும். உறவினர்களின் இல்ல விசேஷங்களில் பொறுப்புகளைச் சுமக்க நேரும். வண்டி, வாகனங்களை இயக்கும்போது அதிக எச்சரிக்கை தேவை. பிள்ளைகளின் செயல்கள் மனமகிழ்ச்சி தரும் வகையில் அமையும். பெற்றோரின் உடல்நிலையில் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். கடன் கொடுக்கல், வாங்கலை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது. பண விவகாரங்களில் தகுந்த சாட்சியுடனும், முழுமையான கவனத்துடனும் செயற்படவும். வாழ்க்கைத்துணையின் பணிகளுக்கு துணை நிற்பீர்கள். பயனற்ற செலவுகளால் சற்று திக்குமுக்காடிப் போவீர்கள்.

first national REAL ESTATE | Hall & Partners

## *Interested in knowing what your property is worth?*



**Property value and house prices change with the market. Call me direct to get a view of your current property value.**

**I will happily appraise your property, giving you you an up to date market analysis free of charge with no obligation to sell.**

# SP Shagi - 0413 076 585

## OUR SALES TEAM WITH THE MOST LOCAL EXPERIENCE

*"Let our experience work for you"*



Michael Hall
Managing Director



Adrian Hall
Director



Leigh Hall
Director



Tim Retallack
Licensed Estate Agent



Walter Kubiak
Licensed Estate Agent



Chen Liu
Licensed Estate Agent



Irene Athanasiadis
Property Consultant



Yasantha De Silva
Licensed Estate Agent



Jane Li
Property Consultant



Omid Mahramzadeh
Property Consultant



Michael Cervenjak
Licensed Estate Agent



Gavin Andrews
Licensed Estate Agent



Nuwan Ranasingha
Property Consultant



Violet Ross
Property Consultant


Christmas IS COMING
Transco CARGO
Christmas SHIPPING SCHEDULE
| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| September | 2018-09-01 | 2018-10-08 |
| September | 2018-09-08 | 2018-10-17 |
| September | 2018-09-15 | 2018-10-22 |
| September | 2018-09-22 | 2018-10-31 |
| September | 2018-09-29 | 2018-11-05 |
| October | 2018-10-06 | 2018-11-14 |
| October | 2018-10-13 | 2018-11-19 |
| October | 2018-10-20 | 2018-11-28 |
| October | 2018-10-27 | 2018-12-03 |
| November | 2018-11-10 | 2018-12-17 |
| November | 2018-11-17 | 2018-12-26 |
| November | 2018-11-24 | 2018-12-31 |
| December | 2018-12-01 | 2019-01-07 |
| December | 2018-12-08 | 2019-01-14 |
| December | 2018-12-15 | 2019-01-21 |
| January | 2019-01-12 | 2019-02-18 |
| January | 2019-01-19 | 2019-02-25 |
| January | 2019-01-26 | 2019-03-04 |
Only at Campbellfield, Dandenong South & Hoppers Crossing Transco offices.
Send Something Special to your Loved Ones
FREE BOTTLE OF WINE
3RD BOX FREE*
follow us on
We love to deliver
45 Adrian Rd, Campbellfield (03) 9357 7228
206-208 Discovery Road, Dandenong South (03) 9703 2255 NEW
2/16-17 Hammer Court, Hoppers Crossing (03) 97905588
SYDNEY - 02 9897 0004
BRISBANE - 07 3219 0203
ADELAIDE - 08 8322 8825
PERTH - 08 9452 7707
CANBERRA - 02 62821905
DARWIN - 08 79790002
TASMANIA - 03 90174167
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU